# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஆனி 31 வியாழக்கிழமை (15.07.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 231


### சிறுபான்மை இனம் என ஒன்றில்லை

# எல்லா மக்களும் சம உரிமையுடன் வாழ்வதற்கு நான் வழி செய்வேன்

## கிளிநொச்சியில் மீள்குடியேறிய மக்கள் மத்தியில் ஜனாதிபதி

கிளிநொச்சியிலிருந்து உதயன் செய்தியாளர்

கிளிநொச்சி,ஜூலை15

இந்த நாட்டின் எல்லா மக்களும் ஒன்றுதான். அவர்கள் எல்லோரும் சம உரிமையுடன் வாழ்வதற்கு நான் வகை செய்வேன். இந்த நாட்டில் சிறுபான்மையினர் என்று ஓர் இனம் இல்லை. எமது நாட்டின் மீது அன்பு காட்டும் எல்லோரும் ஒரு தாய் மக்களே. பிரிவினைவாதம், பயங்கரவாதம் இனிமேல் வேண்டாம்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற கஷ்டப்பிரதேசங்கள் இருப்பதாக இதுவரை பலர் எண்ணினார்கள். இனிமேல் அவ்வாறு இருக்க முடியாது. எல்லாப் பிரதேசங்களும் ஒன்றுதான்.

இவ்வாறு இடம்பெயர்வின் பின்னர் கிளிநொச்சியில் மீளக்குடியமர்ந்த மக்கள் மத்தியில் நேற்று தமிழில் உரையாற்றிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். (24ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் எரிபொருள் விலைகள் குறைப்பு

கொழும்பு,ஜூலை 15

யாழ். குடாநாட்டில் எரிபொருள்களின் விலைகள் நேற்று நள்ளிரவு முதல் குறைக்கப்பட்டுள்ளது. அதற்கமைய ஒரு லீற்றர் பெற்றோல், டீசல் மற்றும் மண்ணெண்ணெய் ஆகியன முறையே 115 ரூபா 60 சதம், 73 ரூபா 60 சதம், 51 ரூபா 60 சதமாகக் குறைக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போதே இத் தீர்மானம் எடுக்கப்பட்டது என பெற்றோலியத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.(ஒ-சி)



கிளிநொச்சியில் நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி....

## ஐ.தே.கட்சி எம்.பிக்களுக்கு இனி அரசில் இடம் இல்லை

### ஜனாதிபதி மஹிந்த ரணிலிடம் வாக்குறுதி

கொழும்பு,ஜூலை 15

ஐ.தே.கட்சி எம்.பிக்கள் எவரையும் இனி அரசில் இணைத்துக்கொள்ளப்போவதில்லை என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஐ.தே.கவுக்கு வாக்குறுதியளித்துள்ளார் என்று அக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான எம்.பிக்கள் திங்கட்கிழமை ஜனாதிபதியைச் சந் தித்து உரையாடியபோதே ஜனாதிபதி இந்த வாக்குறுதியை வழங்கினார் என்று ஐ.தே.க. நேற்றுத் தெரிவித்தது.

இச்சந்திப்பில் கலந்துகொண்ட ஐ.தே.கவின் தவிசாளரும் எம்.பியுமான காமினி ஜயவிக்கிரம பெரேரா முன்வைத்த இந்த விவகாரம் தொடர்பான கேள்வியொன்றுக்குப் பதிலளித்தபோதே ஜனாதிபதி இந்த (24ஆம் பக்கம் பார்க்க)

## எந்தவொரு நாட்டிலும் நடைபெறாத விதத்தில் ஒரு வருட காலத்தில் இங்கு மீள்குடியமர்வு

### ஜனாதிபதியின் பெருமிதம் இது

கிளிநொச்சி,ஜூலை15

எந்தவொரு நாட்டிலும், இடம்பெயர்ந்த மக்கள் எமது நாட்டில் நடந்திருப்பது போன்று, ஒரு வருடகாலத்திற்குள் மீளக் குடியமர்த்தப்படவில்லை.

இங்கு நடைபெறுவது போன்று அபிவிருத்தி வேலைகளும் மேற்கொள்ளப்படவில்லை. ஆனால் இந்தப் பிரதேசத்தில் நாம் அவற்றைச் செய்திருக்கின்றோம்.

நீங்கள் எங்களுடைய மக்கள், எங்களுடைய சகோதரர்கள் என்பதற்காகவே இவ்வாறு செய்திருக்கின்றோம்.

இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீளக் குடியமந்தோர் மத்தியில் தமிழில் பேசுவதற்கு முன்னர் சிங்களத்தில் பேசுகையில் தெரிவித்தார். அப்போது அவர் மேலும் கூறியவை வருமாறு:-

கிளிநொச்சியில் எமது அமைச்சரவைக் கூட்டத்தை நடத்திவிட்டு உங்களைச் சந்திக்க கிடைத்த சந்தர்ப்பத்தையிட்டு நான் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன் எல்.ரீ.ரீ.ஈயின் பிடியிலிருந்தும் பிரிவினை வாதத்திலிருந்தும் வடக்கு, கிழக்கு மக்களை விடுவித்து ஒரே தாய் மக்களாக ஒரே சகோதரர்களாக வழவைக்க எம்மால் முடிந்தது.

உங்கள் வீடுகள் பலவற்றில் கூரைகள் இல்லை. உங்களது பிள்ளைகள் பலர் எல்.ரீ.ரீ.ஈயினரின் முகாம்களில் வைக்கப்பட்டிருந்தனர். அன்று எமது இராணுவத்திற்கு எதிராக எல்.ரீ.ரீ.ஈயினருடன் இணைந்து யுத்தம் செய்தவர்கள் பலர் இன்றும் உங்களுடன் உள்ளார்கள். அவர்களுக்கு சரியான புனர்வாழ்வு அளித்து அவர்களை நல்வழிப்படுத்த வேண்டிய பொறுப்பு எம்மிடம் உள்ளது. இந்த நாட்டிலே எல்லா (24ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவு அரச அதிபராக வேதநாயகன் பதவியேற்பு

முல்லைத்தீவு, ஜூலை 15

முல்லைத்தீவு அரச அதிபராக நாகலிங்கம் வேதநாயகன் நேற்றுப் புதன்கிழமை பதவியேற்றார்.

முல்லைத்தீவு அரச அதிபராக இருந்த இமெல்டா சுகுமாரிடம் இருந்து உத்தியோகபூர்வமாக அவர் பதவியை ஏற்றுக்கொண்டார்.

இவர் முன்னர் கிளிநொச்சி அரச அதிபராகப் பணியாற்றியிருந்தார். (ஒ-1)

### நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியா, பிரதமரா?

## தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை வழங்கும் அரசமைப்புத் திருத்தத்துக்கே கூட்டமைப்பு ஆதரவு

கொழும்பு,ஜூலை15

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை அல்லது அரசமைப்புத் திருத்தத்துக்குப் பின் வரவுள்ள நிறைவேற்று அதிகாரம் கொண்ட பிரதமர் முறை எதுவாக இருந்தாலும் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு பெற்றுத்தரக்கூடிய அரசமைப்புத் திருத்தங்களுக்கு மட்டுமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு வழங்கும் என மட்டு.மாவட்ட கூட்டமைப்பு எம்.பி யான ப.அரியநேத்திரன் நேற்று 'உத யனு'க்குத் தெரிவித்தார். (24ஆம் பக்கம் பார்க்க)

### குடும்பநல மருத்துவ மாது தர்சிகா மரணம்:

## ஊர்காவற்றுறை நீதிமன்றில் சரணடைந்த டாக்டர் பிரியந்த விளக்கமறியலில்

யாழ்ப்பாணம்,ஜூலை15

வேலணை அரசினர் வைத்தியசாலை குடும்பநல மருத்துவமாது சரவணை தர்சிகாவின் மரணம் தொடர்பாக அந்த வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி பிரியந்த செனவிரத்ன ஊர்காவற்றுறை நீதிமன்றில் நேற்று சரணடைந்தார்.

இந்த மரணம் தொடர்பாக விசாரணை செய்துவரும் ஊர்காவற்றுறை நீதிவான் இ.வசந்தசேனன் பிரஸ்தாப வைத்திய அதிகாரியைக் கைது செய்து நீதிமன்றில் ஆஜர் (24ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைத் தூதரகத்தை மூடுமாறு கோரி சென்னையில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

### வைகோ, நெடுமாறன், பாண்டியன் கைதாகினர்!!

சென்னை, ஜூலை 16

சென்னையிலுள்ள இலங்கைத் துணைத் தூதரகத்தை உடனடியாக மூடுமாறு வலியுறுத்தி தடையை மீறிப் பேரணி செல்ல முயன்ற ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன், பெரியார் திராவிடர் கழகத் தலைவர் விடுதலை ராஜேந்திரன் உள்ளிட்டோர் கைதுசெய்யப்பட்டனர்.

தமிழக மீனவர்களைத் தொடர்ந்து கொன்று வரும் (24ஆம் பக்கம் பார்க்க)

# ஐ.தே.கவின் தற்போதைய தலைமையை ஏற்றுக்கொள்வதற்கு சஜித் தயாராம்

கொழும்பு, ஜூலை 15

ஐக்கிய தேசியக் கட்சியின் தற்போதைய தலைமைத்துவத்தை ஏற்றுக்கொள்கிறார் என்று அக்கட்சியின் எம்.பியும் அக்கட்சியின் தலைமைத்துவப் பதவியைக் கைப்பற்றுவதற்காகப் போராடி வருபவருமான சஜித் பிரேமதாஸ நேற்றுக் கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

கட்சியின் மறுசீரமைப்பு தொடர்பான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மறுசீரமைப்பு தொடர்பான கட்சி உறுப்பினர்களின் யோசனைகள் கட்சியின் மறுசீரமைப்பு குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இந்த மாதம் 19ஆம் திகதி கூடும் கட்சியின் செயற்குழு இந்த யோசனைகள் பற்றி அறிவிக்கும். அந்த யோசனைகள் செயற்குழுவால் அங்கீகரிக்கப்பட்டு கட்சியின் சம்மேளனக் கூட்டத்தில் மறுசீரமைப்பு அறிவிக்கப்படும்.

ஆனால், 'கட்சியின் தற்போதைய தலைமைத்துவத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். தலைமைத்துவத்தை மாற்றவேண்டிய தேவை ஏற்படின் யாப்புத் திருத்தத்தின் பின் பார்க்கலாம். இப்போது அந்த விடயத்தைக் குழப்பிக்கொள்ள வேண்டிய தேவை இல்லை. - என்றார். (ஒ-சி)


## உடனடி வேலைவாய்ப்பு

01. Data Entry Operator
02. Accounts Clerk
03. வாகனச் சாரதி
04. விநியோக ஊழியர்
05. விற்பனையாளர்

தகைமையுடையோர் 17.07.2010 சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு கீழ்க்காணும் முகவரிக்கு ஆவணங்களுடன் நேரில் வரவும்.

முகாமையாளர்,
லக்ஷ்மி ஏஜென்சி,
எஸ்-லோன் விநியோக நிலையம்,
25/1, 4வது லேன்,
பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்.

பிறவுன் வீதியில் இருக்கும் மின்சார சபைக் காரியாலயத்திற்கும் கலட்டி சந்திக்கும் இடையில் முகவரி அமைந்துள்ளது.


## ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம், ஜூலை15

சாவகச்சேரி, கச்சாய் வீதி குழந்தை யேசு முன்பள்ளியின் பத்தாவது ஆண்டு நிறைவு தின நிகழ்வுகள் இன்று வியாழக்கிழமை பி.ப 3 மணிக்கு புனித லிகோரியார் தேவாலய சுவாமி கருணாகரர் நினைவு மண்டபத்தில் நடைபெறும். (ஏ-207)

## புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு

ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள தரம் 5 மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு நாடாளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதியின் புதல்வருமான நாமல் ராஜபக்ஜவின் தலைமையில் நடைபெறும்.

இதேவேளை தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலை மாணவர்களுக்கான கருத்தரங்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் இன்று காலை இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஏ-6-207)

## அதிபர்களுக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜூலை15

மத்தியகல்வி அமைச்சினால் செயற்படுத்தப்படும் துரிதகணித, விஞ்ஞான செயற்றிட்டம் -2010 தொடர்பான அவசர கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2மணிக்கு யாழ்.வலயக்கல்வி அலுவலக முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் யாழ்.கல்வி வலய தரம் 11 பாடசாலை அதிபர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்.வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுள்ளார். (ஒ-6)

## நினைவுச் சொற்பொழிவு

அச்சுவேலி,ஜூலை15

யாழ்.பல்கலைக்கழகத்தின் முன்னாள் பதிவாளரும் புகழ்பெற்ற எழுத்தாளருமான கவிஞர் இ.முருகையனின் நினைவுச் சொற்பொழிவு நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெறும்.

அத்தியார் இந்துக்கல்லூரி அதிபர் இ.குணநாதன் தலைமையில் நடைபெறும் நினைவுச் சொற்பொழிவில் கவிஞர் சோ. பத்மநாதன் 'கவிதை என்னும் கலை' என்ற தலைப்பில் நினைவுச் சொற்பொழிவு நிகழ்த்துவார். (ஒ-11)

### சுவாமி விவேகானந்தர் ஜயந்திவிழா நாளை

யாழ்ப்பாணம், ஜூலை15

சுவாமி விவேகானந்தர் ஜயந்தியும் சென்னை ஸ்ரீராம கிருஷ்ண மடத்தால் வெளியிடப்படும் ஸ்ரீராம கிருஷ்ண விஜயம் நூல் அறிமுக விழாவும் நாளை வெள்ளிக்கிழமை காலை 9மணிக்கு இடைக்காட்டு மகா வித்தியாலயத்தில் பாடசாலை அதிபர் ஏ.அருந்தவநேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

சிறப்பு நிகழ்வாக பருத்தித்துறை ஸ்ரீராம கிருஷ்ண சாரதா சேவாச்சிரம சுவாமிசித்ரூபாணந்தா சுவாமி விவேகானந்தரின் நல்வழிச் சிந்தனைகள் என்ற தலைப்பில் ஜி.சீ.ஈ உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு சொற்பொழிவாற்றவுள்ளார். (ஒ-டி)

## ஐ.நா. மனித உரிமை பேரவையின் முன்னால் இலங்கையர் ஆர்ப்பாட்டம்

ஜெனிவாவில் உள்ள ஐ.நா மனித உரிமைப் பேரவையின் முன்பாக நேற்று இலங்கையர்கள் சிலர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ - மூன் இலங்கையின் யுத்தக் குற்றங்கள் தொடர்பாகத் தமக்கு ஆலோசனை வழங்க நியமித்த நிபுணர் குழுவைக்கலைக்கும்படி வலியுறுத்தியே இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

அமைச்சர் விமல் வீரவன்ஸவின் தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணியின் ஆதரவாளர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. சுமார் முப்பது பேர் சுலோக அட்டைகளை ஏந்தியவாறு இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர் என இணையத்தளங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ஏ-சி)

## பரீட்சைப் பெறுபேறுகள் இணையத்தில்

மொறட்டுவ பல்கலைக்கழகப் பொறியியல் பீட தமிழ் மாணவர்கள் ஓகஸ்ட் மாதம் நடைபெறும் ஜி.சீ.ஈ. பரீட்சைக்குத் தோற்றும் கணித, உயிரியல் பிரிவு மாணவர்களுக்கு நடத்திய பரீட்சையின் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன.

இந்தப் பரீட்சையின் முடிவுகளை www.mota08tamils.net என்ற இணையத்தளத்தில் பார்வையிட முடியும்.

அதேசமயம் பரீட்சை வினாத்தாள்களையும் விடைகளையும் தரவிறக்கம் செய்து கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மேலதிக தகவல்கள் தேவையானோரை mota08tamils@yahoo.com எனும் மின்னஞ்சல் முகவரி மூலம் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-6)

## புத்தகக் கண்காட்சி

நவாலி,ஜூலை15

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வலிகாமம் தென்மேற்கு பிரதேசபை மானிப்பாய் கிராம உப அலுவலகம் ஆனைக்கோட்டை பொதுநூலகம் என்பன இணைந்து சிறுவர் புத்தகக் கண்காட்சியும் சிறுவர் கழகங்களை அமைக்கும் நிகழ்வு இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு மானிப்பாய் கிராமப் பொறுப்பதிகாரி கு.இரத்தினராசா தலைமையில் ஆனைக்கோட்டை பொது நூலக மண்டபத்தில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசலை அதிபர் ந.சிவகடாட்சம் கலந்து கொள்வார். (50-100)


## சாரதி தேவை

சிங்களம் நன்கு தெரிந்த சாரதி தேவை.
தொடர்பு: 0217200142
இரவு - 9 மணிக்கு பின்பு தொடர்பு கொள்ளவும்.


## கண்ணீர் அஞ்சலி



### சரவணமுத்து நடேசபாத இருதயன்

(அக்கிராசனர் மறுமலர்ச்சி மன்றம் மானிப்பாய்)

*மறுமலர்ச்சி மன்ற ஸ்தாபகர்களில் ஒருவரும் தற்போதைய அக்கிராசனருமான ச.நடேசபாத இருதயன் அவர்களது திடீர் மறைவையொட்டி அதிர்ச்சி அடைகின்றோம்.*

*சிறந்த கூட்டுறவாளரான இவர் 1971 வரை வடக்கில் இயங்கிய மேற்பார்வை சபையின் முன்னாள் தலைவர், செயலாளர் ஆகிய கூட்டுறவு பெரியார்களான அமரர்கள் திரு வி.வீரசிங்கம், திரு பொ.செல்வரத்தினம் ஆகியோரிடம் மிகுந்த பற்றுக் கொண்டவர்.*

*அன்னாரின் குடும்பத்தவரது துயரில் நாமும் பங்குகொள்கின்றோம். அவரது ஆத்மா சந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

மறுமலர்ச்சி மன்ற உறுப்பினர்கள்.

## மரண அறிவித்தல்

### திருமதி கந்தவனம் பாக்கியம்



ஏழாலை தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தவனம் பாக்கியம் (12.07.2010) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசா கந்தவனத்தின் அன்பு மனைவியும் இம்மானுவேல் (கனடா), லோறன்ஸ் (முள்ளியவளை), பத்மாவதி (ஏழாலை), காலஞ்சென்ற அல்பிறெட் (கனடா) மற்றும் மரியதிரேசா (கனடா), ஆனந்தம் (கனடா), அன்ரன் (கனடா), கிரி (கனடா), யூட் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஜோன்பிள்ளை (இளைப்பாறிய இ.போ.ச. உத்தியோகஸ்தர்), துரைசிங்கம் (கனடா), சுரேஸ்குமார் (கனடா), சசிகலா (கனடா), பிறேமா (முள்ளியவளை), அற்புதராணி (கனடா), இறஞ்சி (கனடா), சுசி (கனடா), பூவாசினி (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் நல்லம்மா, காலஞ்சென்றவர்களான வேலாயுதம், கனகம்மா, துரைசிங்கம் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (16.07.2010) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரின் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு புனித இசிதோர் ஆலயத்தில் இடம்பெறும் இரங்கல் திருப்பலியைத் தொடர்ந்து ஏழாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஏழாலை தெற்கு,
ஏழாலை.

தகவல் :
ஜோன் - பத்மா.

(வி/569266)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சரஸ்வதி செல்லையா

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சரஸ்வதி நேற்று (14.07.2010) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையாவின் (லண்டன் பென்சனியர்) அன்பு மனைவியும் செல்வவதி, செல்வராஜா, யோகராஜா, சிறிகெங்காதரன், அசோகா ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (15.07.2010) வியாழக்கிழமை பி.ப. 1.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கொக்குவில் கிழக்கு.*
T.P. 0776404003

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி நாகேஸ்வரி சிவஞானசுந்தரம்

தும்பளையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகேஸ்வரி சிவஞானசுந்தரம் நேற்று (14.07.2010) புதன்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலம்சென்ற சிவஞானசுந்தரத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம்-அன்னம்மா தம்பதியினரின் அருமை மகளும், காலஞ்சென்றவர்களான தம்பிராசா-சிவபாக்கியம் தம்பதியினரின் அன்பு மருமகளும், வாசன் (ஜேர்மனி), சாந்தினி (ஜேர்மனி), நளினி (சுவிஸ்), ஞானேஸ்வரன் (லண்டன்), வதனி (யா/குடத்தனை G.T.M.S ), சுபாசினி (யா/தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் அம்பிகை, சுமந்திரன்,சிவநேசன், சுஜாதா, பிறேமகோணேஸ்வரன், சபேசன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆதித்தன், அட்சயன், அபிநயன், பிரியங்கா, மேனகா, திருமாறன், தாரணி, காயத்திரி, நிருஜன், தேனுஷா ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (15.07.2010) வியாழக்கிழமை மாலை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தும்பளை மேற்கு,
பருத்தித்துறை.

தகவல்-
குடும்பத்தினர்.

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## நல்லிணக்கத்துக்கு உதவாத போக்கு!

முல்லைத்தீவிலும் கிளிநொச்சியிலும் நிரந்தர இராணுவத் தளங்கள் அமைக்கப்பட்டுவிட்டன. வன்னியின் ஏனைய பிரதேசங்களிலும் இராணுவத் தளங்களை அமைப்பதற்கான நடவடிக்கைகள், ஏற்பாடுகள் செய்யப்பட்டுவிட்டன.

இப்படி ஒரு புதிய தகவலை, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தமது வன்னி விஜயத்தின் போது, மன்னார் மாவட்டம் வெள்ளாங்குளத்தில் படைத்தரப்பினரின் கூட்டம் ஒன்றில் வைத்து நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை வெளியிட்டிருக்கிறார்.

படைமுகாம்களில் பணியாற்றும், படையினரின் நலன் கருதி இராணுவக் குடியிருப்புக்கள் வன்னிப் பிரதேசத்தில் அமைக்கப்படும் என்று இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜகத் ஜெயசூரியா, மல்வத்தை மற்றும் அஸ்கிரிய பீடாதிபதிகளிடம் தகவல் தெரிவித்திருந்தார். அதற்கடுத்து பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் தகவல் தற்போது வெளியாகி இருக்கிறது.

வடக்கை, மிகக் குறிப்பாக வன்னியை முற்றுமுழுதாகவே இராணுவப் பிரசன்னம் நிறைந்த பிரதேசமாக்குவதில் அரசாங்கம் எவ்வளவு முனைப்புடனும், எத்துணை அதிவேகத்துடனும் செயற்படுகிறது என்பது வெகு துலாம்பரமாகின்றது. அரசின் வேகத்தைப் பார்த்தால், வன்னிப் பிராந்தியத்தில் இருந்து இடம் பெயர்ந்து மீளக்குடியமரும் மக்கள் சகஜ வாழ்க்கைக்கு முழு அளவில் - தமது சொந்தக் காலில் நின்று வாழும் நிலைக்குத் - திரும்புவதற்கு முன்னர் அந்தப் பிராந்தியம் அரைவாசிக்கு மேல் இராணுவ முகாம்கள், படைத்தளங்கள் நிறைந்த பிராந்தியமாக மாறிவிடும் என்று ஊகிக்கலாம்.

நாட்டில் இப்போது தோன்றியுள்ள அமைதி குலையாது இருக்க வேண்டுமெனில், தமிழ்ப் பகுதிகளில் மீண்டும் ஆயுதப் போராட்டம் தொடங்காமல் தடுப்பதற்கான முன்னேற்பாடு இது என்று அரச தரப்பில் நியாயம் கற்பிக்கப்படலாம். வருமுன் காப்பதே உகந்தது, சிறந்தது என்றும் எடுத்துச் சொல்லப்படலாம். நாட்டின் தற்காப்புக்கு இந்த நடவடிக்கைகள் இன்றியமையாதவை என்றும் தர்க்கிக்கப்படலாம்.

தமிழ் மக்களும் இந்த நாட்டின் பிரஜைகள். சிங்கள மக்கள் அனுபவிக்கும் அத்தனை உரிமைகளும் சலுகைகளும் அவர்களுக்கும் உண்டு. ஜனநாயக நாட்டில் ஒரு சாராருக்குச் சிறப்புரிமைகள் என்று தனித்து முத்திரை குத்த முடியாது. பல்லாண்டு காலமாக ஒரு சாரார் நிரந்தரமாக வாழ்ந்து வரும் பகுதிகளை, ஆட்சி அதிகாரத்தையும் இராணுவ பலத்தையும் பயன்படுத்தி பறித்தெடுப்பது ஏற்புடையதல்ல. அது அடாத்தானது - என்று நியாய சிந்தனையுடன் அரசு செயற்பட்டால், நாட்டின் குறிப்பிட்ட பகுதியை இராணுவ மயமாக்குதல் தேவையற்றது ஆகிவிடும்.

ஜனநாயகப் பண்புகளிலும், பாகுபாடற்ற ஆட்சி மூலம் குறைபாடுகளும் வெற்றிடங்களும் இல்லாதிருந்தால், இராணுவ மயப்படுத்தல் என்ற தேவை தானாகவே அற்றுப்போய்விடும். எல்லோரும் இந்நாட்டு மன்னர்களே என்று கூறுமளவுக்கு நாட்டில் ஜனநாயகக் கட்டமைப்பில் நல்லாட்சி மலர்ந்தால், போர்ச் சூழல் உருவாகாது தடுக்க இராணுவ பலத்தைப் பெருக்குதல் என்பது தேவையற்றதாகிவிடும்.

இலங்கை அரசு அந்த வழியில் சிந்திக்காமல், இங்கு பல்லின மக்கள் வாழ்கிறார்கள் என்பதனைக் கணக்கில் எடுக்காமல், இந்த நாடு சிங்கள மக்களுக்கே உரியது என்ற எண்ணக் கருவுடன் செயற்படுவதாலேயே இராணுவ மயப்படுத்தல், சிறுபான்மை மக்களின் வாழ்விடங்களைக் கபளீகரம் செய்யும் திட்டங்கள், அவர்களை இரண்டாந்தரப் பிரஜைகளாக மதித்துப் பல வழிதுறைகளிலும் பாரபட்சம் காட்டுதல் என்ற ஒவ்வாத செயற்பாடுகள் பெருகுகின்றன. இவற்றை மனம் வைத்துத் தவிர்த்தால் தமிழர் பிரதேசங்களை நூறு சதவீதம் இராணுவ மயமாக்க வேண்டிய தேவை எழாது.

பாதுகாப்பு என்ற பெயரில் ஓர் இனம் ஒடுக்கப்படும் போது, அதன் வாழ்விடத்தைப் பறிக்கும் திட்டங்களை நாசூக்காகச் செய்து முடிக்கும் முனைப்பு இருக்கும் போது, சமாதானம், சகவாழ்வு என்பன தலைதூக்க முடியாமல் முடங்கிப் போகும்.

நாட்டில் 30 வருடங்களாக நடைபெற்ற போர் முடிவுற்றுவிட்டது. நாடெங்கும் அமைதி நிலவுகின்றது. இத்தகைய வேளையில் பல உள்நோக்கங்களுடன் இராணுவ பலத்தை அதிகரித்து, தமிழர் பிரதேசங்களை முழு அளவில் இராணுவ மயப்படுத்தும் செயற்பாடுகளுக்கே முன்னுரிமை கொடுத்தும், அவற்றை விரைந்தும், செயற்படுத்துவது நாட்டில் நல்லிணக்கத்தை உண்டாக்க எந்த விதத்திலும் ஒரு துளியேனும் உதவாது என்பது நிச்சயத்திலும் நிச்சயம்.

# மேலும் 13 எரிபொருள் நிரப்பும் நிலையங்களை வன்னியில் விரைவில் திறப்பதற்கு நடவடிக்கை

## நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் தெரிவிப்பு

கிளிநொச்சி,ஜூலை15

வன்னிப் பகுதியில் மேலும் பதின்மூன்று எரிபொருள் நிரப்பும் நிலையங்களை அமைப்பதற்கான ஏற்பாடுகள் விரைவில் மேற்கொள்ளப்படும்.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.சந்திரகுமார் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி, கரடிபோக்குச் சந்தியில் கடந்த செவ்வாய்க்கிழமை எரிபொருள் நிரப்பும் நிலையம் ஒன்று திறந்து வைக்கப்பட்டது.

இந்தத் திறப்பு விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வன்னிப் பெருநிலப்பரப்பில் வசிக்கும் மக்களின் அத்தியாவசிய தேவைகள் தற்பொழுது சீர்செய்யப்பட்டு வருகின்றன. அதில் எரிபொருள் தேவையும் ஓரளவு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

தற்பொழுது மக்களின் தேவைக்காக திறந்து வைக்கப்பட்டுள்ள எரிபொருள் நிரப்பும் நிலையங்கள் ஊடாக மக்கள் போதியளவு எரிபொருள்களை கொள்வனவு செய்து கொள்ள முடியும்.

முன்னொரு காலத்தில் இப்பகுதி மக்கள் மண்ணெண்ணையும் பெற்றோலும் இன்றி பெரும் சிரமப்பட்டனர்.

இதற்காகப் பல ஆயிரம் ரூபாக்களையும் செலவழிக்க வேண்டி ஏற்பட்டது. மக்களின் தேவையை கருத்திற் கொண்டு மேலும் 13 எரிபொருள் நிரப்பு நிலையங்களைத் திறந்து வைப்பதற்கு அமைச்சர் சுசில் பிறேம ஜயந்த நடவடிக்கை எடுத்துள்ளார். (50-224)

# வயல்களில் கடல்நீர் உட்புகுவதை தடுப்பதற்கு நடவடிக்கை எடுங்கள்

## அரியாலை கிழக்கு விவசாயிகள் மகஜர்

கொழும்புத்துறை,ஜூலை15

அரியாலை கிழக்கு கடற்கரையை அண்மித்த வயல்நிலங்களில்கடல்நீர் உட்புகுந்து நெற்காணிகள் உவர் நிலமாக மாறிவருவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கக் கோரி நல்லூர் கமநல சேவைகள் உதவி ஆணையாளரிடம் மகஜர் கையளிக்கப்பட்டுள்ளது.

அரியாலை விவசாய சம்மேளனத்தினால் மேற்படி மகஜர் கையளிக்கப்பட்டதாக விவசாய சம்மேளன் தலைவர் த.சபாரட்ணம் தெரிவித்துள்ளார்.

கோரிக்கை விடுக்கப்பட்டு இரண்டு மாதங்களுக்கு மேலாகியும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் கூறப்படுகின்றது.

கடந்த 15 வருட காலமாக உயர் பாதுகாப்பு வலயமாக இருந்து வந்த இப்பகுதிகளின் கடல் தடுப்பு அணைகள் பராமரிப்பின்றி சேதமடைந்தும் அணைகள் அகற்றப்பட்டும் காணப்படுகின்றன.

மழைக்காலங்களில் கடல்நீர் மட்டம் உயரும்போது தடுப்பு அணைகள் இன்மையால் வயல்நீருடன் கடல் நீர் கலந்து விடுகின்றது. தொடரச்சியாக இந்த நிலைமை ஏற்படாமையினால் தற்போது இப்பகுதி வயல் நிலங்கள் உவர்த்தன்மையாக மாறி வருகின்றன.

இம்முறை இப்பகுதிகளில் பெரும் போகப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளும் போது கடல்நீரினால் பாதிப்பு ஏற்படவும் ஏனைய வயல்களுக்கும் உவர்த்தன்மை பரவும் சாத்தியமும் காணப்படுகின்றது.

எனவே விவசாய நடவடிக்கைகளை பாதிப்பின்றி மேற்கொள்ளத் தகுந்த நடவடிக்கை மேற்கொண்டு உதவுமாறு அந்த மகஜரில் குறிப்பிட்டுள்ளதாக சம்மேளனத் தலைவர் தெரிவித்தார். (50-135)

## தெங்குச் செய்கையாளர் சங்க நிர்வாகக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜூலை15

வடமாகாண தெங்குச் செய்கையாளர் சங்க நிர்வாகசபைக் கூட்டம் எதிர்வரும் 17ஆம்திகதி சனிக்கிழமை மு.ப. 10 மணிக்கு நாவலர் வீதியிலுள்ள தென்னைப் பயிர்ச்செய்கை சபை அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

அலுவலகத் தலைவர் கலாநிதி சு.மோகனதாஸ் தலைமையில் இடம் பெறவுள்ள இந்தக் கூட்டத்தில் பழைய புதிய தென்னந்தோட்ட உரிமையாளர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

அத்துடன் தென்னை உர மானியம், புதிய நடுகை மானியம் இழந்த காணிகளை உரிமை பெறச் செய்தல்.

கண்ணிவெடி அகற்றுவதற்கு நடவடிக்கைஎடுத்தல் காணிகளைத் துப்புரவு செய்தல் உள்ளிட்ட விடயங்கள் கலந்துரையாடப்பட இருப்பதனால் சகல தென்னந்தோட்ட உரிமையாளர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (50)

## சிறுவர் கழகங்களின் கலாசார இலக்கியப் போட்டி

நவாலி,ஜூலை15

இலங்கை சமுர்த்தி அதிகாரசபையினால் சமுர்த்தி 'கெம்கிலு' சிறுவர் கழகங்களுக்கிடையிலான கலாசார மற்றும் இலக்கியப் போட்டிகள் பிரதேச செயலகங்கள் மூலம் நடத்தப்படவுள்ளது

இதனடிப்படையில் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு பிரதேச செயலர் அ.எழிலரசி தலைமையில் ஆரம்பமாகும்.

தொடர்ந்து 3நாள்கள் நடைபெறவுள்ள இப்போட்டியில் தனிநபர் பாடல், கிராமிய நடனங்கள், பேச்சு, அறிவிப்பாளர், ஓவியம், சிறுநாடகம், சமுர்த்தி பற்றியது சிறுவர் கதைகள் என்பன நடைபெறும். (50-100)

## ஆரம்பக்கல்வி வகுப்புக்களில் தகவல் தொடர்பாடல் பாடம்

பருத்தித்துறை,ஜூலை15

வடக்கு மாகாணப் பாடசாலைகளில் ஆரம்பக் கல்வி வகுப்புக்களில் தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப பாடத்தை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தரம்-1தொடக்கம் 5வரையான வகுப்புக்களில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு இப்பாடத்தை அறிமுகம் செய்வதன் மூலம் அவர்களையும் தகவல் தொழிநுட்ப உலகினுள் அழைத்துச் செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இப்பாடத்தை உடனடியாக ஆரம்பிக்கும் முகமாக வலய ரீதியாக ஆரம்பப்பிரிவில் கற்பிக்கின்ற ஆசிரியர்களுக்கு செயலமர்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன. இதற்கென வடக்கு மாகாண கல்வித்திணைக்களத்தினால் ஆசிரியர்களுக்கான வழிகாட்டி நூல்களும் தயாரிக்கப்பட்டு பாடசாலை ரீதியாக வழங்கப்பட்டு வருகின்றது. (50-190)

## நாளை

| | |
|---|---|
| ஆனி 32 | 16.07.2010 வெள்ளிக்கிழமை |
| திதி: | : பஞ்சமி பி.ப. 02.08 வரை |
| நட்சத்திரம் | : பூரம் மு.ப. 09.28 வரை |
| சுபநேரம் | : 06.00-07.30 வரை |
| ராகுகாலம் | : 10.30-12.00 வரை |

# போதையில் மக்களுக்கு இடையூறு விளைவித்த 6 பேருக்கு அபராதம்

யாழ்ப்பாணம்,ஜூலை15

பொது இடங்களில் மது போதையில் பொதுமக்களுக்கு இடையூறு விளைவித்த ஆறு பேருக்கு சாவகச்சேரி நீதிமன்றத்தால் தலா மூவாயிரம் ருபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 12ஆம் திகதி மக்கள் கொடுத்த தகவலையடுத்து நூணாவில்,கைதடி கோயிலாக்கண்டி ஆகிய பகுதிகளுக்கு விரைந்த பொலிஸார் ஆறு பேரைக் கைது செய்தனர்.

இவர்களை நீதிமன்றில் ஆஜர் செய்த போது வழக்குகளை விசாரித்த நீதவான் ஆறு பேருக்கும் மூவாயிரம் ருபா அபராதம் விதித்து அபராதத் தொகையை கொடுக்கத் தவறின் 3 மாத சிறைத்தண்டனை அனுபவிக்க உத்தரவிட்டார். (50-207)

# 28 பேருக்கு செயற்கை அவயவங்களை சமூகசேவைத் திணைக்களம் வழங்குகிறது

கைதடி,ஜூலை15

போரினாலும் இயற்கை அனர்த்தங்களினாலும் தமது அவயவங்களை இழந்தோருக்கு சமூக சேவைகள் திணைக்களம் இலவசமாக அவயவங்களை பொருத்துவதற்கான ஏற்பாடுகளை தற்போது செய்து வருகின்றது.

இதன் முன் நடவடிக்கையாக யாழ். மாவட்டத்திலுள்ள ஐந்து பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த 28 பேருக்கு மேற்படி அவயவங்களை உடனடியாகப் பொருத்துவதற்கான அனுமதியை சமூக சேவைத் திணைக்களத்தின் மாவட்ட அலுவலகத்திற்கு வழங்கியுள்ளது.

மேற்படி அவயவங்களை பெறவுள்ள பயனாளிகளின் பெயர்கள் வருமாறு: -

வலி.கிழக்கு பிரதேச செய லர் பிரிவில் செல்லையா கலைச்செல்வன் (கல்வியங்காடு),சிங்கராசா சுபாகரன் (புத்தூர்), கணேசலிங்கம் மேனகா (புத்தூர்கிழக்கு),நடராசா சோதிலிங்கம் (கோப்பாய் வடக்கு), விஜயலட்சுமி குணரத்தினம் (நீர்வேலி மேற்கு), சத்திவேல் தயாளினி (அச்சுவேலி தெற்கு), அசோக்குமார் காயத்திரி (உரும்பிராய் மேற்கு), சின்னவன் பாலசிங்கம் (உரும்பிராய்), இராசேந்திரம் ஜெயதிலகராசா (புத்தூர் கிழக்கு), மூத்தம்பி விநாயகமூர்த்தி (அச்சுவேலி), கந்தையாசிவன் (அச்செழு), இராசரத்தினம் பரமலிங்கம் (நீர்வேலி மேற்கு), தம்பு திரவியம் (அச்சுவேலி), மகாலிங்கம் ஜனார்த்தனன் (இருபாலை), பொன்னன் காந்தியப்பா (நீர்வேலி), இராஜகாந்த் மேரி யூடிற்ராஜி (அச்சுவேலி வடக்கு), ரி.இராஜகாந்த் (அச்சுவேலி வடக்கு) ஆகியோரும் -

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவில் தவராசா புஸ்பநிதி (கொடிகாமம்), மாசிலாமணி மதீஸ்வரன் (கைதடி கிழக்கு), ஸ்ரீநிவாசசர்மா ஜெயராஜ சர்மா (சாவகச்சேரி),அன்னம்மா கணேசு (மிருசுவில்), ஐயாத்துரை தங்கராஜா (மீசாலை மேற்கு) ஆகியோரும் -

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் சுப்பிரமணியம் குணரத்தினம் (சுதுமலை வடக்கு), நவரத்தினம் நந்தினி (ஆனைக்கோட்டை), செல்லத்துரை தயாளன் (சண்டிலிப்பாய்) ஆகியோரும் -

கரவெட்டிபிரதேச செயலர் பிரிவில் ஜனகன் சுபாஜினி (அல்வாய் கிழக்கு), அருணகிரி ஜெயந்தினி (கரணவாய் வடக்கு) ஆகியோரும் -

உடுவில் பிரதேச செயலர் பிரிவில் லீலாவதி சிவதாசன் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (50-288)

# முக்கிய அறிவித்தல்

## கரைச்சிப் பிரதேச சபை

### A - 9 வீதியின் புதிய அளவுப் பிரமாணம்

கரைச்சிப் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட முருகண்டியிலிருந்து ஆனையிறவு வரையிலான A - 9 (கண்டி வீதி) வீதி அளவு எதிர்காலத்தில் பின்வருமாறு அமைய வேண்டுமென, கிளிநொச்சி வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியலாளர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

**வீதியின் மத்தியிலிருந்து 24 மீற்றர்**
**வீதியின் மொத்த அகலம் 48 மீற்றர்**

எனவே இதற்கமைவாக தங்கள் கட்டட விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறும் எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் பொது மக்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

பொன்.நித்தியானந்தம்,
சிறப்பு ஆணையாளர். (சி/569250)

**IELTS பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவர்கட்க்கு இலவச கருத்தரங்கு, பயிற்சிப்பட்டறை**

கொழும்பிலிருந்து வரும் **British Council** பிரதிநிதிகளால் கருத்தரங்கு, விசேடபயிற்சிப்பட்டறை நடாத்தப்படும்.

காலம்: 17 July 2010 சனிக்கிழமை.
நேரம்: மதியம் 12.30 மணி
இடம்: 140, கோவில் வீதி, நல்லூர்.
[UNOPS முன்பாக]

**British Business School**
140, கோவில் வீதி, நல்லூர்.
Tel: 0212225796, 0776646357.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/மாதகல் சென்.யோசப் மகா வித்தியாலயத்தில் முதல் தடவையாக மாணவி

## அருமைநாயகம் அனற்

வடமாகாண மெய்வன்மைப் போட்டியில் 400m ஓட்டத்தில் முதலாம் இடம்பெற்று தங்கப்பதக்கத்தினைப் பெற்றுள்ளார். இவரை நாம் மனதாரப் பாராட்டுகின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/மாதகல் சென்.யோசப் ம.வி, மாதகல். (100641)

**DANISH DEMINING GROUP**

Danish Demining Group (DDG) is a Humanitarian Mine Action Unit in the Danish Refugee Council (DRC). DRC is a non-profit organization that works worldwide to help and protect refugees, internally displaced- and other conflict-affected persons.

The DDG mission is to recreate an environment free from threat of landmines, unexploded ordnances and small arms and light weapons; an environment where people can live safely and have access to their land. DDG Sri Lanka is looking for a Back Hoe Operator to work in all part of Sri Lanka.

**Vacancy – Urgently needed**
**Back Hoe Operator**

Requirements:

1. Valid License to operate such machinery.
2. Availability to work all parts of Sri Lanka
3. Minimum one year experience in the related field.
4. Fluency in Tamil. Ability to speak and understand English is also required. Knowledge of Sinhala will be an added qualification.

Please submit your applications by post, fax or by e-mail to Office Manager. Only short listed candidate will be called for an interview.

**Address: *Danish Demining Group, No.456, Main Street, Chundikulli, Jaffna.***
**Fax: 021 222 8180**
**E-mail: jafofficemgr@ddg.lk**
**Closing Date: 18th July 2010**

# தவறிவிட்டது

NPVN - 1100 இலக்கமுடைய மோட்டார் சைக்கிள் பின் இலக்கத்தகடு 13.07.2010 அன்று மானிப்பாய் - அளவெட்டி இடையே தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து 0778575041 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

# அபூர்வஜோதிடம்

தீர்க்கமுடியாது கடும் பிரச்சினை தரும் நெற்பரோகம், பக்கவாதம், மூச்சுத்திணறலை ஏற்படுத்தும் ஆஸ்மா, மர்மமான கட்டிகள் குணமாக்கும் ஆராய்ச்சியான மருந்தியல். அதிஷ்ட பலன் பெறல். நேரம் நாள் 3pm - 5pm, சனி, ஞாயிறு 8am - 1pm
**உயரப்புலம் பிள்ளையார் கோயிலடி,**
**தபால் பெட்டி லேன், ஆனைக்கோட்டை.**

# German, Swiss மொழி வகுப்புகள்

தமிழ் மொழி பெயர்ப்புடன் No. 10, Palaly Road, Jaffna இல் நடைபெறுகின்றது. தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு நேரில் வந்து சந்திக்கவும். T.P.: 0771604823

# தேவை

எமது பட்டயக் கணக்காளர் நிறுவனத்திற்கு கணக்காய்வு பயிலுநர்கள் தேவை. 3 மைல் சுற்றாடலில் வசிப்பவர்களும் தேவை ஏற்படின் விடுமுறை நாள்களில் பணிபுரியக்கூடியவர்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம்.
தொலைபேசி இல. 0779530496, 021 222 2478

# பளைக்கோட்டத்தின் ஆங்கிலதினப் போட்டி

கண்டாவளை,ஜூலை15

பளைக்கோட்டப்பாடசாலைகளுக்கு இடையிலான ஆங்கில தினப் போட்டிகள் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு பளை மத்திய கல்லூரியில் ஆரம்பமாக வுள்ளன.

பளைக்கோட்ட பாடசாலைகளில் இருந்து போட்டிக்குத் தோற்றும் போட்டியாளர்களை உரிய நேரத்திற்கு கலந்து கொள்ளுமாறு பளை பதில் கோட்டக் கல்வி அதிகாரி வீ.இராஜகுலசிங்கம் கேட்டுக்கொண்டுள்ளார். (ஓ-432)

# பாடசாலைகளுக்கு இடையே தோட்டப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை 15

வடமாகாண கல்வித் திணைக்களத்தால் பாடசாலைகளுக்கிடையிலான தோட்டப் போட்டி நடத்தப்படவுள்ளது.

கனிஷ்ட இடைநிலைப்பிரிவு, சிரேஷ்ட இடைநிலைப்பிரிவு, மேற்பிரிவு என மூன்று பிரிவுகளில் இப்போட்டி நடைபெறும் என்றும் -

வலய மட்டத்தில் ஒவ்வொரு பிரிவிலிருந்தும் முதல் மூன்று இடங்களையும் பெற்ற பாடசாலைகள் தெரிவு செய்யப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வலய மட்டத்தில் ஒவ்வொரு பிரிவிலும் முதலிடம் பெறும் பாடசாலைகள் மாகாண மட்டப் போட்டியில் பங்கு பற்றும் எனவும் மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-38)

# பெரியபுலோ, சுழிபுரம், அரசடி ஞானவைரவர் ஆலய 11ஆம் திருவிழா - தேர்த்திருவிழா விஞ்ஞாபனம்



சைவமும் தமிழும் தழைத்தோங்க சகல ஜீவராசிகளையும் இரட்சித்துக் காத்துவரும் பெரியபுலோ அரசடி ஞான வைரவப் பெருமானின் 11ஆம் திருவிழா, தேர்த்திருவிழா விஞ்ஞாபனம், இன்று (15.07.2010) வியாழக்கிழமை நடைபெறுகின்றது. தேர்த்திருவிழாவை ஒட்டிய சிறப்பு கலைநிகழ்வாக இன்று இரவு 9 மணிக்கு கொழும்பில் இருந்து வருகைதரும் முன்னணிப் பாடகர் N. ரகுநாதன், சக்தி இசை இளவரசன் புகழ் S.மனோஜ் ஆகியோர் கலந்துகொள்வர். வவுனியா "சப்தஸ்வரம்" இசைக்குழுவினரின் இசைநிகழ்ச்சி இடம்பெறும்.

(100636) **11ஆம் திருவிழா உபயகாரர்.**

# வட்டுக்கோட்டை கிழக்கு - துறட்டிப்பனை அருள்மிகு முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்

## மஹோற்சவப் பெருவிழா

15.07.2010 (இன்று) வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றம்
21.07.2010 புதன்கிழமை மாலை 4 மணிக்கு வேட்டைத்திருவிழா
23.07.2010 வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு சப்பரத்திருவிழா
24.07.2010 சனிக்கிழமை முற்பகல் 10.35 மணிக்கு தேரில் ஆரோகணம்
25.07.2010 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தீர்த்தத்திருவிழா

*"அனைவரும் வருக அன்னை அருள்பெறுக"*

வட்டு.கிழக்கு,
வட்டுக்கோட்டை. (சி/569264) ஓர் அடியவன்.

# கண்ணீர் அஞ்சலி



எமது நண்பன் தபேசனின் அன்புத் தந்தை

## சரவணமுத்து நடேசபாத இருதயன்

13.07.2010 அன்று சிவபதம் அடைந்த செய்திகேட்டு ஆழ்ந்த துயருறுவதுடன் அவர்களின் மறைவையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறை வனைப் பிரார்த்திக்கின்றோம்.

(100640) நண்பர்கள் (ஓமான்).

# மரண அறிவித்தல்

## சதாசிவம் சிவசுப்பிரமணியம் (வெள்ளையன்)



சிறுப்பிட்டி மத்தி, நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் டென்மார்க்கை வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் சிவசுப்பிரமணியம் (வெள்ளையன்) 12.07.2010 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சதாசிவம் - செல்லாச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் சகுந்தலாவின் (டென்மார்க்) அன்புக் கணவரும் நவநீதன் (டென்மார்க்), கணநீதன் (டென்மார்க்), உசா (டென்மார்க்) ஆகியோரின் அன்புத் தந்தையும் பாலசுப்பிரமணியம் (டென்மார்க்), அமிர்தநாயகி, லோகநாதன் (சுவிஸ்), ஸ்ரீபத்மநாதன் (டென்மார்க்), லோகநாயகி (சுவிஸ்), தவமலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சிறுப்பிட்டி மத்தி,*
*நீர்வேலி. தொ.பே. 021 3006817* (100650)

தகவல்:
சகோதரர்கள்.

Service & Repairing On Call Service Contact Us 0212229644

**PC SOLUTIONS** TECHNOLOGIES (PVT) LTD
305, Kasthuriyar Road, Jaffna. Tel :- 021 222 1101
M.M.V Road,Nelliyadi Tel :- 021 2264999

Available Multi HighSpeed Dongle

SAVE MONEY!!! SAVE MONEY!!! SAVE MONEY!!! SAVE MONEY!!! SAVE MONEY!!!

**Great & low Price Package**
3 Year's Warranty
Intel Dual Core 2.7Ghz
Intel Chipset Mother Board
250GB Harddisk
Kington 1GB Ram
DVD Writer,Atx Casing
15' LCD Monitor
650VA UPS,Keyboard
Mouse, Speaker
ONLY Rs47500/=

**Great Package Deal Low Price**
3 Year's Warranty
Intel Dual Core 2.7Ghz
Intel Mother Board
320GB Harddisk
Kington 1GB Ram
DVD Writer,Atx Casing
19' LCD LG Monitor
650VA UPS,Keyboard
Mouse, Speaker
ONLY Rs53500/=

**Ultimate Media & Gaming Package**
3 Year's Warranty
Intel Core 2 Duo 2.93Ghz
Intel Mother Board
500GB Harddisk
Kington 2GB Ram
DVD Writer,Atx Casing
19' LCD Samsung Monitor
650VA UPS,Keyboard
Mouse, Speaker
ONLY Rs66500/=

Computer Problems? Have Virus? Or Computer Just Running Slow? Spyware Trouble?

Any Computer Repair
Contact Us Pc Solutions

A+Service Departmet Open 6 Days A Week
Virus & Spyware Removavle Upgrades
Repairs Cleanining & Service
Maintenance , Networking

Unbelievable Prices

| | |
|---|---|
| Web cameras | Printers |
| Dongles | LCD Monitors |
| Pendrives | Mother Boards |
| Headphones | Memories |
| Ribbons | Harddisks |
| Woofers | DVD Writers |
| TV Cards | Casings |

Visit our Showrooms at Jaffna & Nelliady, Branch

3.5 Mbps High Speed Dialog Broadband
Only Rs 690/= Per Month

Also Dialog Broadband Available

| Package | Month Rent |
|---|---|
| 2GB | Rs690/= |
| 4GB | Rs990/= |
| 7GB | Rs1490/= |
| 15GB | Rs2990/= |

Contact Us Pc Solutions

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் உயர்திரு. தம்பிப்பிள்ளை

## வன்னியசிங்கம்

(ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர்)

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 18.11.1942 | 15.06.2010 |

கடந்த 15.06.2010 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவனின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (15.07.2010) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெற விருப்பதால் தாங்கள் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை யிலும், அதனைத்தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

அத்துடன் அன்னாரின் மரணச் செய்திகேட்டு இறுதிச்சடங்குகளில் கலந்து கொண்டவர்களுக்கும், தொலைபேசி மூலம் அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும், துண்டுப்பிரசுரங்கள் வெளியிட்டவர்களுக்கும் மற்றும் பல வழிகளில் உதவியவர் களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள் கின்றோம்.

பொன்னையா லேன்,
ஆனைக்கோட்டை.
T.P.-0213007639 (சி/569256) குடும்பத்தினர்.

# காங்கேசன் சிமெந்து ஆலையை கட்டம் கட்டமாக இயக்க முடிவு

## யாழ்.வந்த கைத்தொழில் அமைச்சர் உறுதி

யாழ்ப்பாணம், ஜூலை 15

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை இந்தியாவுக்கு மட்டுமல்ல எந்தவொரு நாட்டுக்கும் வழங்கப்படமாட்டாது.

இவ்வாறு உறுதிபடத் தெரிவித்தார் அரச சொத்துடமைகள் மற்றும் கைத்தொழில் அமைச்சர் பி.தயாரத்ன.

நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்த அவர் ஐ.தே.க.வின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன் இல்லத்தில் செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்தினார்.


அமைச்சருடன் பிரதியமைச்சர் சரத் குணரட்ண, அமைச்சின் செயலாளர் விணி கமகே, இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா சிமெந்து லிமிட்டெட் ஆகியவற்றின் தலைவர் சிசில பரணகம ஆகியோர் வருகை தந்தனர்.

அமைச்சர் செய்தியாளர் மாநாட்டில் மேலும் தெரிவித்தவை வருமாறு:

வெகுவிரைவில் சிமெந்துத் தொழிற்சாலையை கட்டம் கட்டமாக இயக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. கடந்த பல வருடங்களாக இந்தத் தொழிற்சாலை படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கின்றது. இந் நிலமையில் உடனடியாக இதனை இயங்கவைக்க முடியாது.

கடந்த காலத்தில் இந்த தொழிற்சாலை இந்தியாவுக்கு விற்றதாக வெளியான செய்தி உண்மைக்குப் புறம்பானது. எந்தச் சந்தர்ப்பத்திலும் காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையை இந்தியாவுக்கோ அல்லது எந்தவொரு நாட்டிற்குமோ வழங்கப்போவதில்லை.

அடுத்துவரும் சந்ததியும் இதனைப் பயன்படுத்த வேண்டும். தற்போது தொழிற்சாலையில் உள்ள இயந்திரங்களில் ஒரு பகுதி பாதிக்கப்பட்டாலும் பெரும் பகுதி இயங்கக் கூடிய தன்மையில்



காணப்படுகின்றது.

வெகு விரைவில் பாதுகாப்பு அமைச்சிடம் தொடர்பு கொண்டு இதனை இயக்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.சிமெந்துத் தொழிற்சாலை அமைந்துள்ள பகுதியில் தற்போதும் படையினரின் செயற்பாடுகள் காணப்படுகின்றன. இவர்களை அங்கிருந்து வேறு இடத்திற்கு மாற் றிய பின்னர் தொழிற்சாலையை கட்டம் கட்டமாக இயங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தற்போது சிமெந்து தொழிற்சாலை அமைந்துள்ள பகுதியில் இருந்து கற்கள் எடுக்கும் செயற்பாடுகள் கடந்தவாரம் முதல் நிறுத்தப்பட்டுள்ளன. எதிர்கா லத்தில் இந்தப் பகுதியில் கற்கள் எடுக்கப்பட்ட பகுதிகளில் உள்ள கிடங்குகளுக்கு முருங்கனில் இருந்து மண்கொண்டு வந்து அந்த பகுதிகள் நிரப்பப்படுவதுடன் அந்தப் பகுதி ஒரு விவசாயப் பயன்பாட்டுக்கு உட்பட்ட பகுதியாகவும் மாற்றப்படும்.

மேலும் சிமெந்து தொழிற்சாலை அமைந்துள்ள பகுதியில் சுமார் 7077 ஏக்கர் காணி காணப்படுகின்றது. இதனைவிட மாவிட்டபுரம் பகுதியில் 25 ஏக்கர் காணியும் சிமெந்து தொழிற்சாலை அமைந்துள்ள அயல் பகுதிகளில் 365 ஏக்கர் காணியும் பயன்பாட்டிற்கு உரியதாகக் காணப்படுகின்றன.

கட்டம் கட்டமாக தொழிற்சாலை இயங்கத் தொடங்கும் போது முதல் கட்டமாக வெளியில் இருந்து எடுத்துவரப்படும் சிமெந்து பொதிசெய்யும் செயற்பாட்டுடன் ஆரம்பமாகி இரண்டாம் கட்டமாக இந்தப் பகுதியில் உற்பத்தியை மேற்கொள்வதற்கு வேண்டிய செயற்பாடுகளை பாதுகாப்பு அமைச்சுடன் தொடர்பு கொண்டு மேற்கொள்வோம்.

மூன்றாம் கட்டமாக உற்பத்திச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதுடன் கடல்மட்டத்தின்மேல் கற்கள் எடுக்கப்பட்ட பகுதிகள் நிரப்பப்படுவதுடன், நான்காம் கட்டமாகத் தொழிற்சாலை இயங்கத் தொடங்கிய நிலையில் மேலும் வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்தும் முகமாக கட்டடப் பணிகள் குறிப்பாக மின்கம்பங்கள், தந்திக் கம்பங்கள் மற்றும் வீதிகளுக்கு குறுக்கே வைக்கப்படும் நீர் ஓடும் குழாய்கள் போன்ற பொருள்களை உற்பத்தி செய்யும் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படும்.

இதற்கான திட்டங்கள் ஏற்கனவே முடிவடைந்துள்ளன. இதே போன்று தற்போது முழுமையாகச் சேதம் அடைந்துள்ள பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையையும் இயங்க நடவடிக்கைககள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதனைக் கூட அரசாங்கமே மேற்கொள்ளும். தனியார்கள் இதனை இயக்க வழங்கினாலும் யாரிடமும் அரசாங்கம் கையளிக்கமாட்டாது. இது 2500 ஏக்கர் நிலப்பரப்பில் காணப்படுகின்றது-என்றார்.

(50-86)

# இரணைமடுவிலிருந்து குடாநாட்டுக்குக் குடிதண்ணீர் விநியோகிக்கும் திட்டம் கைவிடப்படும் நிலையில்

## சம்பந்தப்பட்ட திணைக்களத்தின் உயரதிகாரி முட்டுக்கட்டையாம்

யாழ்ப்பாணம், ஜூலை 15

கிளிநொச்சி-இரணைமடுக் குளத்திலிருந்து குடாநாட்டுக்கான குடிதண்ணீர் விநியோகச் செயற்பாடுகள் இடைநிறுத்தப்படும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன.

தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்பு சபையின் தலைமை அலுவலக உயரதிகாரி ஒருவர் இதற்கு முட்டுக்கட்டைகளை ஏற்படுத்தி வருவதாக குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

கடந்த ஐந்து ஆண்டு காலமாக கிளிநொச்சி இரணைமடுக் குளத்திலிருந்து குடாநாட்டுக்கான குடிதண்ணீரைக் குழாய் மூலம் குடாநாட்டுக்கு கொண்டுவருவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு கிளிநொச்சி, யாழ்ப்பாணம் அரச அதிபர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அத்துடன் முன்னாள் தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்புத்துறை அமைச்சர் ஏ.எல்.எம்.அதாவுல்லா, அமைச்சர் மகிந்த அமரவீர மற்றும் பாரம்பரிய கைத்தொழில் சிறு கைத்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரால் ஏற்கனவே இத்திட்டம் முன்மொழியப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது.

அதேவேளை தற்போதைய தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்புத்துறை அமைச்சர் தினேஷ் குணவர்த்தனா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குடாநாட்டுக்கான குடிதண்ணீர் விநியோகத்தை கிளிநொச்சியிலிருந்து கொண்டு வருவதற்கு சம்மதித்து-அங்கீகரித்துள்ள போதும்-

தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்புச் சபையின் உயரதிகாரி ஒருவர் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த முட்டுக்கட்டை போட்டுவருவதாகப் பல்வேறு தரப்புகளிடமிருந்தும் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

யாழ்.மாவட்டத்தின் தரைக்கீழ் நீர்வளமும், நீர்ஊற்றும் தாராளமாக உள்ளன எனவும், இதனால் இரணைமடுக் குளத்திலிருந்து நீரைக்கொண்டுவர வேண்டிய அவசியமில்லையெனக் கூறி மேற்படி உயரதிகாரி திட்டத்தை நிராகரித்து வருவதாகக் கூறப்படுகிறது.

இதனால்-

கிளிநொச்சி-இரணைமடுக் குளத்திலிருந்து குடாநாட்டுக்கான நீர்விநியோக வேலைகள் முழு அளவில் தடைப்பட்டுள்ளதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் கவலை தெரிவித்துள்ளன.

இதேவேளை-

உலக வங்கி குழுவினர் மேற்படி திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான கூட்டங்களை ஐந்து தடவைகள் நடத்தி அவற்றின் மூலம் பல முன்னேற்றங்களும் ஏற்பட்டுள்ளன. இந்த வேளையில் இத்திட்டம் இடைநடுவில் நிறுத்தப்பட்டுள்ளமை பலரையும் விசனம் கொள்ள வைத்துள்ளது.

(50-302)

# கொக்குவில் இந்து நூற்றாண்டு விழா; இரண்டாம் நாள் நிகழ்வுகள் நாளை

வலி.வடக்கு, ஜூலை 15

கொக்குவில் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழா நிகழ்வுகளின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் சனிக்கிழமை காலை 9மணிக்கு நாகலிங்கம் அரங்கில் முன்னாள் கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபரும் பழைய மாணவர் சங்கத் தலைவருமானஅ.பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வுகளில் பிரதம விருந்தினராகப் பழைய மாணவனும் தொழில் அதிபருமான மாணிக்கம் சுப்பிரமணியமும், சிறப்பு அதிதிகளாக நல்லூர் பிரதேச சபை செயலாளர் எம். சாந்தசீலன், பழைய மாணவர்களான சி.இராஜதுரை, இ.செல்வநாதன் ஆகியோரும் கலந்துகொள்வர்.

ஆசியுரையை சிவஸ்ரீ சிவதாசக்குருக்களும், வரவேற்புரையை கல்லூரி பிரதி அதிபர் திருமதி கமலராணி கிருஷ்ணபிள்ளையும், வாழ்த்துரையை அதிபர் அ.அகிலதாசும் நிகழ்த்துவர்.

நினைவுரையை யாழ்ப்பாணம் பல்கலைக்கழக முகாமைத்துவப் பீட பேராசிரியரும் பழைய மாணவருமான த.தேவராசா நிகழ்த்தவுள்ளார்.

இந்த நிகழ்வில் கல்லூரியின் பழைய மாணவர்கள் கௌரவிக்கப்படவுள்ளார்கள்.

மாலை நிகழ்வுகள் ஹண்டி பேரின்பநாயகம் அரங்கில் கொக்குவில் இந்துக் கல்லூரியின் முன்னாள் ஆசிரியை கலாபூசணம் திருமதி சரஸ்வதி பாக்கியராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுகளில் பழைய மாணவன் சட்டத்தரணி எஸ். சின்னத்தம்பியும், சிறப்பு அதிதியாக ஈ.எஸ்.பி. நாகரெட்ணம் மற்றும் பழைய மாணவர்களான சட்டத்தரணி செல்வி சி.ஞானலோஜினி, ஹற்றன் நஷனல் வங்கியின் திருநெல்வேலி உதவி முகாமையாளர் சு. முரளிதரன் ஆகியோர் கலந்துகொள்வர்.

வரவேற்புரையை கல்லூரி மேற்பார்வையாளர் திருமதி கலாநிதி சுந்தரேசனும், வாழ்த்துரையை அதிபர் அ. அகிலதாசும் வழங்குவர்.

நினைவுரையை யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர்சபா. ஜெயராசா நிகழ்த்தவுள்ளார்.

மாலை நடைபெறும் கலை நிகழ்வுகளில் கல்லூரி மாணவர்களின் நடனம், பழைய மாணவர்களின் வாத்தியப்பிருந்தா, மானிப்பாய் கலைக்கோயில், நல்லூர் ஜதிலயா நாட்டியப் பள்ளி, கொழும்பு அபிநயஷேத்திர நாட்டியப் பள்ளி வழங்கும் நாட்டிய நிகழ்வுகளுடன் சோழன் மகன் தென்மோடிக் கூத்தும் இடம்பெறவுள்ளன.

(50-201-86)




# எழுதுமட்டுவாழ் தெற்கில் வெடிபொருள் அகற்றப்படவில்லை

யாழ்ப்பாணம், ஜூலை 15

தென்மராட்சி கிழக்கு எழுதுமட்டுவாழ் தெற்குப் பிரதேசத்தில் இன்னமும் வெடிப்பொருள்கள் அகற்றும் பணிகள் முடிவடையாததால் அப்பகுதியில் எவரும் மீளக்குடியமர முயற்சிக்க வேண்டாமென பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார்.

(50-207)




கொமர்ஷல் வங்கியின் அச்சுவேலி கிளையின் திறப்பு விழா நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

விழாவில் கலந்துகொண்ட விருந்தினர்கள் தமிழ் பாரம்பரியத்தின்படி ஆரத்தி எடுத்து வரவேற்கப்படுபதை முதலாவது படத்திலும், வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி ரவி டயஸ் கிளையைத் திறந்து வைப்பதை இரண்டாவது படத்திலும், கிளை முகாமையாளர் கே.விவேகானந்தராஜா தலைமை உரையாற்றுவதை மூன்றாவது படத்திலும் வங்கி வாடிக்கையாளர் ஒருவரிடம் இருந்து வைப்புக்களைப் பிரதம விருந்தினர் ஏற்றுக்கொள்வதை இறுதிப்படத்திலும் காணலாம்.

*(படங்கள்: அச்சுவேலி செய்தியாளர்)*



# கோண்டாவில் கிழக்கு
# ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் ஆலய
# மகா கும்பாபிஷேக சிறப்பிதழ் 15.07.2010



## பிரதம குருவின் ஆசி

பலாலி வீதியில் கோண்டாவில் கிழக்கு சந்திக்கு அருகில் அமைந்துள்ள நர்த்தன விநாயகப் பெருமானுக்கு இன்று மகா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் சைவமும் தமிழும் சிறப்புற்று விளங்கும் கிராமங்களில் கோண்டாவில்பதி முக்கிய இடம்பெறுகிறது. இந்த ஆலயத்தை நீண்ட காலம் பரிபாலனம் செய்து வந்த சிவத்திரு ஆசைப்பிள்ளை ஐயா அவர்கள் இவ்ஆலயச் சூழலை ஒரு புனித பிரதேசமாக மாற்றினார். ஈழத்துச் சித்தர்களில் ஒருவராகிய குடைச்சுவாமியின் சமாதியை இக்கோயிலின் உள்ளே அமைத்தார். நர்த்தன விநாயகப் பெருமானின் திருவருளும் குடைச் சுவாமியின் குருவருளும் ஒருங்கே அமைந்திருந்ததால் பல அடியார்கள் பல்வேறு திசைகளில் இருந்தும் விநாயகப் பெருமானின் ஆலயத்துக்கு வருகை தருகின்றார்கள்.

பெருஞ்சாந்தி விழாவாகிய மகா கும்பாபிஷேகத்தைத் தரிசிப்பது நமது வாழ்வில் கிடைக்கும் பெரும் பேறுகளில் ஒன்றாகும். வேழ முகத்து விநாயகப் பெருமான் விக்கினங்களை நீக்கி ஞானத்தை நல்குவான். நமது நாட்டில் நாம் அனுபவித்து வந்த துன்ப, துயரங்கள் அனைத்தும் முற்றாக நீங்கி நமது மக்கள் அனைவருக்கும் சாந்தியும், சமாதானமும் கிடைக்க வேண்டுமென்று நர்த்தன விநாயகப் பெருமானின் திருவருளைப் பிரார்த்தித்து அனைவருக்கும் எனது ஆசியினை வழங்குகின்றேன்.

**சிவாகம பிரதிஷ்டா கிரியா ஜோதி சிவஸ்ரீ சிவ கதிர்காமநாதக் குருக்கள்.**



## நல்லை ஆதீனம் அருளாசிச் செய்தி

கோண்டாவில் பதியில் அற்புத நர்த்தன நாயகனாக எழுந்தருளி இருந்து அருளாட்சி புரியும் விநாயகப் பெருமானுக்கு இன்று மஹா கும்பாபிஷேகம் நடைபெறுவது அனைவருக்கும் மகிழ்ச்சி. குருவருளும் திருவருளும் நிறைந்த இவ்வாலயம் இந்த நாட்டில் தனித்துவமானது. ஈழத்துச் சித்தர் வரலாற்றில் தனக்கொரு இடத்தை வகுத்துக் கொண்ட குடைச் சுவாமிகள் நினைவாலயத்தைக் கொண்ட இவ்வாலயம் கோண்டாவில் மக்களுக்கு மட்டுமன்றி ஏனைய பிரதேச மக்களுக்கும் அருளைத் தருவதாகும். விநாயகருக்கு நடை பெறும் கும்பாபிஷேகம் நாட்டுக்கும் நாட்டில் வாழும் மக்களுக்கும் அமைதியை ஏற்படுத்துவதாகும். இக் கும்பாபிஷேகத்தைச் செய்யும் குருமார்களுக்கும் ஆலய பரிபாலன சபையினருக்கும் ஊர் மக்களுக்கும் இறை இன்பம் கிடைப்பதாக. இக் கும்பாபிஷேகத்தைத் தரிசனம் பண்ணி மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக! *''என்றும் வேண்டும் இன்ப அன்பு''*

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிய ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்,**
**இரண்டாவது குருமஹாசந்நிதானம்.**



## செஞ்சொற் செல்வரின் ஆசியுரை

கோயில்கள் நிறைந்த திருப்பதி கோண்டாவில். இப்புண்ணிய திருப்பதியில் அற்புதம் நிறைந்த நர்த்தன விநாயகர் ஆலயம் தனித்துவம் மிக்க ஆலயமாக விளங்குகின்றது. ''ஆத்மீக ஞானி'' குடைச்சாமியாரின் சமாதி உறைந்த பெருமை இத்திருத்தலத்தின் மேன்மை எனலாம். இத் திருத்தலத்தைக் கண்ணை இமை காப்பது போல் காத்து வளர்த்த பெருமை அமரர் ஸ்ரீமான் ஆசைப்பிள்ளை அவர்களைச் சாரும். இத்திருக் கோயிலில் திருமுறைகள், புராணங்களை நெறிமுறை தவறாது ஓதும் பண்பாடு முன்மாதிரியான செயற்பாடாகும்.

ஆத்மஞான சற்சங்கம், தத்துவ விசாரணை உரையாடல்கள் இத்திருத் தலத்தில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. சித்தர்கள், யோகிகள்,தவஞானிகள் ஒன்று கூடிய சங்கம வழிபாட்டு மரபில் நிலைத்து நிற்கும் இவ் ஆலய மேன்மையை அறியாதவர்களில்லை. பல்வேறு திருப்பணிகள் நிறைவு செய்த நிலையில் இத் திருக்கோயில் மகாகும்பாபிஷேகம் நடைபெறுவது சிறப்புக்குரியது. அல்லும் பகலும் ஆலய வளர்ச்சிக்கு அயராது உழைத்த அன்பர்கள் அனைவருக்கும் நல்வாழ்த்துக் கூறி, நர்த்தன விநாயகர் திருவருளால் அனைவரும் சிறக்க வேண்டி அமைகிறேன். ''யாவர்க்குமாம் இன்னுரை தானே''

**ஆறு. திருமுருகன் தலைவர் - ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.**
**தலைவர் - சிவபூமி அறக்கட்டளை, கோண்டாவில்.**



## சிவத்தமிழ் வித்தகர் விடுக்கும் வாழ்த்துச் செய்தி

சிவபூமி எனத் தவயோகி திருமூலநாயனாரால் அருளப்பெற்ற ஈழ மணித் திருநாட்டில் கோண்டாவில் கிராமம் ஞான பூமியாக மிளிர்கின்றது. பக்தர்களும், சித்தர்களும், ஞானிகளும் வாழ்ந்த கோண்டாவில் பதியில் அருள் ஒளி வீசும் சைவ ஆலயங்கள் பல காணப்படுகின்றன. வாக்கும் வாழ்வும் ஒருமித்து வாழ்ந்த ஆசைப்பிள்ளை ஐயா அவர்கள் நர்த்தன விநாயகர் ஆலயத்தை திருவருளை வாரி வழங்கும் பெருங்கருணைத் தேக்கமாக உருவாக்கினார். கோண்டாவில் கிழக்குச் சந்தியைச் சூழவுள்ள பிரதேசத்தைப் புனித பிரதேசமாக மாற்றினார்.

வெவ்வினையை வேரறுக்க வல்ல விநாயகப் பெருமான், தன்னை வழிபடும் அடியவர்களுக்குப் புத்தியையும், சித்தியையும் தருவான். ஓம் என்ற சிறப்பான பிரணவத்திற்கு அதிபதியாக இருக்கும் விநாயகப் பெருமானை உள்ளன்போடு வழிபட்டால் நம்மைப் பீடித்திருக்கும் வினைகள் அனைத்தும் பொசுங்கும். கலைகளுக்கு அதிபதியாகக் கலைமகள் (சரஸ்வதி) இருப்பது போல கல்விக்கு, ஞானத்துக்கு அதிபதியாக விநாயகப் பெருமானே திகழ்கின்றார்.

அரிய மானிடப் பிறவியை எடுத்த நாம் முற்பிறப்பில் செய்த தவத்தின் காரணமாகவே இப் பிறப்பில் ஆன்மீக சிந்தனையுடன் வாழ்கின்றோம். நம்மிடம் உள்ள தெய்வீக சிந்தனை வலுப்பெற மகா கும்பாபிஷேக விழாவினைத் தரிசித்தல் துணை செய்யும். நாமும் நமது சமுதாயமும் கால் நூற்றாண்டு காலத்துக்கு மேலாக அனுபவித்த சோதனைகள், வேதனைகள் அனைத்தும் நீங்கி அமைதியான ஆனந்தமான வாழ்வினைப் பெற நர்த்தன விநாயகப் பெருமானின் திருவருள் அனைவருக்கும் கிடைக்கவேண்டுமென்று பிரார்த்திக்கின்றோம்.

**சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம்**



## அற்புத வரலாறு கொண்ட ஆலயம்

கோண்டாவில் கிழக்கில் எம்முன்னோர்களால் போற்றி வந்த தர்ம கைங்கரியத்தின் சான்றாகவும் விநாயகப் பெருமானின் அளப்பெரும் கருணையினாலும் 1965 ஆம் ஆண்டு ஆவணிமாதம் நல்லூர்க் கந்தன் உற்சவம் முடிந்த பின்னாளில் விநாயகர் சதுர்த்தி விரதம் கொண்டாடும் புண்ணிய நாளில் அற்புத நர்த்தன விநாயகரைப் பிரதிஷ்டை செய்து மகா கும்பாபிஷேகம் செய்தார்கள். பல அடியார்களும் வருகை தந்து வழிபட்டு பூசைகள், அபிஷேகங்கள், திருவிழாக்கள், அன்னதானம் என்பன செய்து நற்பலன்களைப் பெற்றுவருகின்றார்கள்.

அற்புத நர்த்தன விநாயகரின் திருவருளும் குடைச்சாமியாராகிய கந்தையா சுவாமிகளின் குருவருளும் கிடைக்கப்பெற்று நற்சுகத்தோடு வாழ முன்னின்று உழைத்த அமரர் க.வே.சரவணமுத்துவை இந்த நன் நாளில் நினைவு கூற விரும்புகின்றோம்.

அற்புத நர்த்தன விநாயகர் ஆலயத்தின் பூர்வீக வரலாறு மிகவும் அற்புதமானது. இப்பொழுது திருப்பணி வேலைகள் சிறந்த முறையில் நடப்பது பெரும் அதிசயமாகவே இருக்கின்றது. பெருமானின் சித்தப்படியே அடியவர்கள் போற்றத்தக்க முறையில் திருப்பணி நடைபெற்று வருகின்றது.

உலகத்தின் பலபாகங்களிலுமிருந்து பெருவிருப்போடு திருப்பணிக்கு உதவுகிறார்கள் என்றால் பெருமான் தம் அடியார்கள் எங்கிருந்தாலும் அவர்கள் உள்ளத்தில் புகுந்து அவர்களுக்கு அருள் செய்கின்றார் என்ற உண்மை புலனாகின்றது. இப்பகுதி மக்கள் அற்புத நர்த்தன விநாயகரை மேன்மேலும் போற்றிப் பணிந்து தொண்டுகளைச் செய்து இஷ்ட சித்திகளைப் பெற்று உய்வார்களாக.

**க.கந்தசாமி, நம்பிக்கைப் பொறுப்பாளர்/ஓய்வுநிலை T.A.E.ஆணையாளர்.**



## ஆலய வரலாறு

வழி வழி வந்த வழிபாட்டு நெறியில் நின்றும் வழுவாத ஊர் கோண்டாவில். சைவ ஆசாரமும் ஒழுக்கமும் பக்தியும் ஒருங்கே பூத்துக் குலுங்கும் கோண்டாவிலிலே கீழ்த் திசையில் யாழ்ப்பாணம் - பலாலி வீதியில் கோண்டாவில் சந்திக்கு அருகில் அற்புத நர்த்தன விநாயகர் ஆலயம் அமைந்துள்ளது.

ஒரு நூறு வருடங்களுக்கு முன்னர் நல்லூர்க் கந்தனின் பெருவிழாக் காலத்தில், தண்ணீர்ப் பந்தல் அமைத்துத் தொண்டு செய்தவர் உயர்திரு கந்தர் கணபதியார் அவர்கள். நல்லைக் கந்தனின் திருவிழாக் காண நடந்து செல்லும் அடியார்களின் தாகத்திற்கான தண்ணீர் பந்தலை நடத்த ஒரு நிரந்தரமான கட்டடமொன்று தேவை என்பதை உணர்ந்து அப்பெருமகன் சந்தியிலே 1880ஆம் ஆண்டு ஒரு காணியை வாங்கி, ஒரு மடத்தை அமைத்து இத் தர்மகாரியம் செய்த இடத்துக்கு தெற்குப் பக்கமாக 1965 ஆம் ஆண்டு திரு.க.வே.சரவணமுத்துவின் அயராத முயற்சியினாலும் பொதுமக்களின் உதவியுடனும் 1965 ஆம் ஆண்டு ஆவணிச் சதுர்த்தியில் ஆலயம் ஸ்தாபிக்கப்பட்டது.

ஆலயத்தின் வட பாரிசத்தில் 14.02.1978 இல் சமாதியடைந்த தவத்திரு கந்தையா சுவாமிகளின் (குடைச்சாமியார்) சமாதிக் கோயிலும் கட்டப்பட்டுள்ளது. சுவாமிகளின் சமாதி அமைக்கப்பட்ட பின்னர் கோயிலின் கீர்த்தியும், சீர்த்தியும் மேன்மேலும் வளர்ந்து கொண்டே செல்கின்றது.

விநாயகர் ஆலயத் திருப்பணி வேலைகளைச் செய்வித்து ஆலயத்தை உருவாக்குவதற்கும், சமாதிக் கோயிலை உருப்படுத்தவதற்கும் பெரிதும் உழைத்தவர் க.வே.சரவணமுத்து அவர்களேயாகும். அன்னாரின் அரிய பணியும், அர்ச்சகராக இருந்த இராமுப்பிள்ளையின் தொண்டும் ஊரவர்களின் உழைப்பும் உதவியும் கோயிலின் வளர்ச்சியில் முக்கிய பங்கை வகித்துள்ளது. இன்றும் திரு.க.வே. சரவணமுத்துவின் சிந்தனைக்கு அமைய நல்ல முறையில் ஆலயம் வழி நடத்தப்படுகிறது.



## விழா இனிதே நடைபெற வாழ்த்துக்கள்

விக்கினங்கள் தீர்க்கும் விநாயகனின் இவ்வாலயம் நூற்றாண்டுப் பழமை வாய்ந்ததாகும். அதாவது 1880 ஆம் ஆண்டுகளில் இவ்விடத்தில் ஆலயம் ஒன்று அமையப்பெறுவதற்கு தெய்வ அருளாசி கிடைத்தாற்போல அடியவர்களுக்குத் தண்ணீர்ப்பந்தல் அமைக்கப்பட்டது. தொடர்ந்து இக்கிராமப் பெரியவர்களின் பெரு முயற்சியினால் ஆலயம் அமைக்கப்பட்டு நர்த்தன விநாயகரை ஸ்தாபித்து மக்கள் வழிபட்டு வந்தமையையும் இன்று இக்கோயிலின் வளர்ச்சியையும் காணும்போது இக்கிராம மக்களின் சமய உணர்வு வெளித்தெரிகின்றது. அதாவது வசந்த மண்டபம் உட்பட மண்டபங்கள், மணிக்கூட்டுக் கோபுரம், திருமஞ்சனக்கிணறு போன்ற பல கட்டட அமைப்புக்களோடு இவ்வாலயம் அழகுற மிளிர்கின்றது.

இத்தகைய பெருமை மிக்க நர்த்தன விநாயகர் ஆலயத்தில் கிரியைகளில் தலையாய கிரியையாம் கும்பாபிஷேகத்தைக் காண நாம் புண்ணியம் செய்திருத்தல் வேண்டும். எம்பெருமானின் மகா கும்பாபிஷேகத்தைக் காணும் கோண்டாவில் கிராம மக்களுக்கு நர்த்தன விநாயகப் பெருமான் எல்லா மங்களங்களையும் அருளவேண்டுமெனப் பிரார்த்தித்து மகாகும்பாபிஷேகப் பெருவிழா விநாயகர் அருளால் இனிதே நடைபெற எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**பா.செந்தில்நந்தனன், பிரதேச செயலர், நல்லூர்.**



## வாழ்த்துச் செய்தி

ஈழ மணித்திருநாட்டின் முடி எனத் திகழும் யாழ்.குடாநாட்டில், அருள்பாலிக்கும் விநாயகர் ஆலயங்கள் பல இருந்தபோதும், கோண்டாவில் கிழக்கு அற்புத நர்த்தன விநாயகர் ஆலயம் அருளும், அற்புதமும் நிறைந்தது எனலாம். இங்கு கந்தையாச் சாமியார் (குடைச் சாமியார்) சமாதிக் கோயில் அமைந்துள்ளதால் மேலும் வியத் தகு அற்புதமும் அருளும் நிறைந்து விளங்கச் செய்கின்றது. 1965ஆம் ஆண்டு விநாயகரும், 1978 ஆம் ஆண்டு சமாதிச் சிவலிங்கமும் அருளாளர் க.வே. சரவணமுத்து அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டன. கோண்டாவில் கிராமம் செல்வ மும், செழிப்பும் நிறைந்து விளங்குவதற்கு மூர்த்திகரமான இவ் ஆலயமே முக்கியம் எனலாம்.

மனித வாழ்வில் காணுதற்கு அரிய மகாகும்பாபிஷேக நிகழ்வு இனிதே நிறைவேறவும் இதன் மூலம் எல்லாம் வல்ல அற்புத நர்த்தன விநாயகரின் அருட்கடாட்சம் பெற்று, அனைவரும் மண்ணில் நல்ல வண்ணம் வாழ இரு கரம் கூப்பி, சிரம் தாழ்த்தி வாழ்த்தி வணங்குகின்றேன்.

**சு.இலங்கநாயகம்**
**ஓய்வு பெற்ற ஆசிரியர் - இ.கி.மகா வித்தி. கோண்டாவில்,**
**முன்னாள் தலைவர் - ஞானவைரவர் ஆலயம், வசாவிளான்.**


**கணபதி களஞ்சியம்**
பல்பொருள் வாணிபம்
பலாலி வீதி, கோண்டாவில்.
(மதவடி)

**கங்கா போட்டோ அன் டிஜிற்றல் வீடியோ**
பலாலி வீதி, கோண்டாவில் சந்தி,
கோண்டாவில்.

**ஐங்கரன் மெகா சிற்றி**
பலாலி வீதி, கோண்டாவில்.

**விநாயகர் ஸ்ரோர்ஸ்**
பலாலி வீதி, கோண்டாவில்.

**பிள்ளையார் எலக்ரிக்கல்ஸ்**
பலாலி வீதி, கோண்டாவில்.

**குகன் அன் பிறதேர்ஸ்**
டிப்போ சந்தி, பலாலி வீதி,
கோண்டாவில்.
தொ.பே: 021 222 5098

**வி.எம்.கே.பிறதேர்ஸ்**
பலாலி வீதி, கோண்டாவில் சந்தி.

**பிள்ளையார் விலாஸ்**
கோண்டாவில்.

**தபேஷன் விவசாய மாளிகை**
பலாலி வீதி, கோண்டாவில்.

**ஓமெக்ஸ் எலக்ரிக்கல்ஸ்**
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

**ஐங்கரன் சூபலஸ்**
பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

**ஸ்ரீ ராம் ஹாட்வெயர்**
பலாலி வீதி, கோண்டாவில் சந்தி.
தொ.பே: 0779698541

**து.மகாலட்சுமி**
சைக்கிள், மின்சார உபகரணங்கள்,
எஸ்லோன் பைப் வகைகள்
விற்பனையாளர்கள்
பலாலி வீதி, கோண்டாவில்.
தொ.பே: 0778000742

**தங்கராசா அரைக்கும் ஆலை**
கோண்டாவில்

**Barathy.com**
E-mail: bharathyl@live.com
பலாலி வீதி, கோண்டாவில் சந்தி.
தொ.பே: 021 222 5148

**செல்வம் அரைக்கும் ஆலை**
பலாலி வீதி, கோண்டாவில் மேற்கு.

**அம்பாள் பல்பொருள் வாணிபம்**
பலாலி வீதி, கோண்டாவில் சந்தி,
கோண்டாவில்.

**சோதி ஸ்ரோர்ஸ்**
ஸ்ரேசன் வீதி, கோண்டாவில்.



யாழ்ப்பாணத்துக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்த தேசிய மரபுரிமைகள் மற்றும் கலாசார அமைச்சர் யாழ்.மாவட்ட செயலகத்துக்கு விஜயம் செய்தபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி செயலகத்துக்கு வருகை தருவதை முதலாவது படத்திலும் , அமைச்சர் மற்றும் அமைச்சின் செயலாளர்கள் அங்கு இடம்பெறும் கலந்துரையாடலில் பங்கேற்றிருப்பதை இரண்டாவது படத்திலும், கலந்துரையாடலில் பங்குகொண்டோரில் ஒரு பகுதியினரை மூன்றாவது படத்திலும், புதிய அரசாங்க அதிபராகப் பதவியேற்ற இமெல்டா சுகுமாருடன் அமைச்சர் உரையாடுவதை இறுதிப் படத்திலும் காணலாம். (படங்கள்- ரட்ணம்,டிலீப்)

# நவீன சிறுவர் வைத்தியசாலையை அமைப்பதற்கு இவ்வருடம் நிதி ஒதுக்கீடுகள் எதுவும் இல்லை

## அடுத்த வருடமாவது அது சாத்தியமாகுமா?

யாழ்ப்பாணம் , ஜூலை 15

வடக்கிற்கான நவீன சிறுவர் வைத்தியசாலை அமைப்பதற்கான நிதி ஏற்பாடுகள் எதுவும் இவ்வருடம் இடம் பெறவில்லை. 2011 இல் இதற்கான நடவடிக்கை எடுப்பதற்கு வடமாகாண சுகாதார சுதேசிய வைத்தியத்துறை அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் தீர்மானித்துள்ளார்.

இவ்வாறு வடமாகாண சுகாதார அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி எஸ். தயானந்தா தெரிவித்தார்.

வடக்கின் வசந்தம் அபிவிருத்தியின் கீழ் வடக்கிற்கான நவீன சிறுவர் வைத்திய சாலை அமைக்கும் விடயமாக அவர் மேலும் தெரிவிக்கையில்:

இதுவரையில் சிறுவர்களுக்கு என பிரத்தியேகமான வைத்தியசாலை எதுவும் வடபகுதியில் இல்லை.

ஆனால் தென்பகுதியில் லேடிரிட்வே எனும் சிறுவர் வைத்தியசாலை சிறுவர்களின் அபிவிருத்திக்குப் பிரத்தியேகமாகச் செயலாற்றுகின்றது.

அதேபோல் வடக்கிற்கும் நவீன சிறுவர் வைத்தியசாலை அமையப்பெற்றால் சிறுவர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணலாம்- என்றார்.

இதேவேளை- வடமாகாண சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் வடக்கு மாகாண பிரதம செயலாளருக்கு 22.7.'2009 அன்று எழுதிய முன்மொழிவில் சங்கானை அல்லது தெல்லிப்பழையில் சிறுவர் வைத்தியசாலை அமைப்பதற்கு போதிய இடமும், அதற்கான குடிதண்ணீர் வசதியும் உண்டு என்றும்,

இத்திட்டத்தினை நிறைவேற்ற 100 படுக்கை அறை கொண்டதான கட்டடத்தை அமைப்பதற்கும், ஆளணி மருத்துவ வசதிகள் ஏற்பாடு செய்வதற்குமாக 80 மில்லியன் ரூபாவினை முதற்கட்டமாக ஒதுக்கித் தருமாறும் கோரியிருந்தார்.

எனினும் இத்திட்டம் வடக்கின் வசந்தத்தின் கீழ் முன்மொழியப்பட்டு அதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளை முன்னாள் அரச அதிபர் க.கணேஷ், சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆர். கேதீஸ்வரன் ஆகியோர் முன்னெடுத்துச் சென்ற போதும் இதுவரையில் இத்திட்டம் வடக்கில் வெற்றியடையவில்லையென சுகாதாரப் பகுதியினர் கவலை தெரிவித்துள்ளனர். (50-302)

## சாந்தைக்குக் குடிதண்ணீர்; ஆரம்ப நிகழ்வு 18 ஆம் திகதி

யாழ்ப்பாணம் , ஜூலை 15

வலி.தென்மேற்குப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட சாந்தை பிரதேச மக்களுக்கு இலவச குடிதண்ணீர் விநியோகம்.இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 18ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மு.ப 10 மணிக்கு சாந்தை விநாயகர் ச.ச நிலைய முன்றலில் இந்நிகழ்வு இடம்பெறும்.

மேற்படி இலவச குடிதண்ணீர்த் திட்ட அங்குரார்ப்பண நிகழ்விற்கு சத்தியசாயி சேவா நிலைய தேசியசபைத் தலைவர் பேராசிரியர் சுனந்த தெமன்கொட பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

இதற்கான ஏற்பாடுகளை வடபிராந்திய சத்தியசாயி இணைப்பு குழுத்தலைவர் இரா. வசந்தசேனன் மேற்கொண்டுள்ளார்.

இதேவேளை-

வலி.மேற்குப் மானிப்பாய் பிரதேசசபையும் கிணற்றில் இருந்து தொட்டி மூலம் சாந்தை மக்களுக்கு குடிதண்ணீர் வழங்கி வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (50-302)




# வல்வை அபிவிருத்திக்கான உலகளாவிய தொடர்பாடல் நிலையம் இன்று திறக்கப்படுகிறது


யாழ்ப்பாணம், ஜூலை 15

புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் வல்வை மக்களுடன் தொடர்பு கொள்ளும் பொருட்டு அவர்கள் தமக்கிடையே தொடர்பாடல்களை ஏற்படுத்திக்கொள்ள வசதியாக உலகளாவிய தொடர்பாடல் நிலையம் இன்று ஆரம்பித்து வைக்கப்பட உள்ளது.

வல்வெட்டித்துறை, தெணி வீதியில் இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு உலகளாவிய தொடர்பாடல் நிலையம் ஆரம்பித்து வைக்கப்பட உள்ளது.

வல்வை மக்களின் ஆரோக்கிய மானதும் கௌரவமுமானதுமான சமுதாயத்தை நோக்கியும், எமது உறவுகளை யும் அவர்களின் உன்னத சக்தியையும் ஒன்றிணைக்கவும் எமது முன்னோர் சாதித்தவற்றை மீண்டும் இளம் சந்ததியினர் சாதிக்க உந்து சக்தியாகவும் - தொடர்பாடல்நிலையம் ஆரம்பிக்கப்படுவதாக வல்வை அபிவிருத்திக்கான செயற்குழுவின் அமைப்பாளர் ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார். (அ)

# ஊர்காவற்றுறை சுகாதாரப் பணிமனைக்கு 83 லட்சம் ரூபா செலவில் புதிய கட்டடம்



ஊர்காவற்றுறை , ஜூலை 15

ஊர்காவற்றுன்ற சுகாதார வைத்திய அதிகாரியணிமனைக்கு சுமார் 83 லட்சம் ரூபா செலவில் புதிய கட்டடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

ஊர்காவற்றுறை வைத்தியசாலை வீதியில் உள்ள அரச காணியில் இதன் நிர்மாணப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

கட்டடப் பணிகள் யாவும் பூர்த்தியடைந்ததும் விரைவில் அது சம்பிரதாயப் பூர்வமாகத் திறந்து வைக்கப்படவுள்ளது. இந்த அலுவலகம் தற்சமயம் ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலையின் கட்டடத் தொகுதியிலேயே இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (50-21)

# கைவிடப்பட்ட கைத்தொழில்களை மேம்படுத்தும் வேலைத்திட்டம்

யாழ்ப்பாணம் , ஜூலை 15

செயலிழந்துள்ள, தொடர்ந்து நடத்த முடியாதுள்ள அல்லது சீர்குலைந்துள்ள கைத்தொழில்கள் தொடர்பான தகவல்களை இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை சேகரிக்கும் வேலைத்திட்டமொன்றை ஆரம்பித்துள்ளதாக அதன் பதில் பிரதிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

மஹிந்த சிந்தனைக்கு அமைவாக கைத்தொழில் முயற்சிகளை மேம்படுத்தவதற்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. இதற்கமைவாகவே மேலே குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டத்தை இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை. ஆரம்பித்துள்ளது.

இந்த வேலைத்திட்டத்தில் பங்குபெற விரும்பும் யாழ். மாவட்டக் கைத்தொழில் முயற்சியாளர்கள், யாழ். மாவட்ட அலுவலகத்தில் உரிய விண்ணப்பப் படிவங்களை ரூபா 200/= கொடுத்து இந்த மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் பெற்று, அதன் இருபிரதிகளை ஓகஸ்ட் மாதம் ஐந் தாம் திகதிக்கு முன்னர் அந்த அலுவலகத்திலேயே சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றார்கள். (க)

## நெல்சிப் திட்டத்தின் கீழ்

# வலி.கிழக்கு பிரதேச சபைக்கு 200 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

நாவற்குழி , ஜூலை 15

நெல்சிப் திட்டத்தின் கீழ் வலிகாமம் கிழக்கு பிரதேச சபைக்கு 200 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

கிராம அலுவலர் பிரிவுகள் யாவும் 5 கொத்தணிகளாகப் பிரிக்கப்பட்டு கிராம மக்களிடம் அவர்களது தேவைகள் குறித்து கலந்துரையாடல்கள் நடைபெற்றன.

மக்கள் வாக்களிப்பு மூலமாக தமது தேவைகளை முன்னுரிமைப்படுத்திக் கொடுத்துள்ளனர். பெரும்பாலான கிராம மக்கள் வீதிப்புனரமைப்பிற்கே முன்னுரிமை வழங்கியுள்ளதனைக் காண முடிகின்றது.

தற்போது கொத்தணிகளது விவர அறிக்கை தயாரிக்கும் பணிகள் நிறைவு பெற்றுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இவ்விவர அறிக்கையில் கிராமத்தின் பெயர், தோன்றிய வரலாறு, கிராமத்திலுள்ள மக்களின் வாழ்க்கை நிலை, மக்களால் முன்வைக்கப்பட்ட தேவைகள், அவற்றில் முன்னுரிமைப்படுத்தப்பட்ட தேவைகள் என்பவை இடம்பெறுவதாகக் கூறப்படுகின்றது.

வலி.கிழக்கு பிரதேச சபைப் பகுதிகளின் உள்கட்டுமானத் தேவைகள் மறுசீரமைக்கப்படக் கிடைத்துள்ள இத்திட்டத்தை மக்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்றுள்ளனர். (50-121)

# வேலணை- வங்களாவடி வீதி இதுவரை திறக்கப்படவில்லை

ஊர்காவற்றுறை , ஜூலை 15

குடாநாட்டின் பல்வேறு இடங்களிலும் இயல்பு வாழ்க்கைக்குரிய செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றபோதும் தீவகப்பகுதியில் உள்ள வேலணை- வங்களாவடி வீதி இதுவரை பொதுமக்கள் போக்குவரத்துக்கு அனுமதிக்கப்படாதமைக்கு தீவுப்பகுதி மக்கள் தமது கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளனர்.

வங்களாவடிச் சந்தியிலேயே வங்கிகள், வைத்தியசாலை, பிரதேசசபை, பிரதேச செயலகம், மின்சாரசபை, கமநலகேந்திரநிலையம், கால்நடை வைத்திய நிலையம் போன்ற அரச அலுவலகங்கள் அமைந்துள்ளன.

இந்த அரச அலுவலகங்களுக்கு புளியங்கூடல் , சரவணை, நாரந்தனை, ஊர்காவற்றுறை பகுதிகளில் வாழும் மக்கள் தமது பல்வேறு தேவைகளின் பொருட்டு சென்று வரவேண்டியவர்களாக உள்ளனர்.

மேற்படி வீதி பொதுமக்களின் போக்குவரத்துக்கு அனுமதிக்கப்படாததால் அவர்கள் பல மைல்கள் சுற்றியே பயணம் செய்ய வேண்டி உள்ளது.

குறித்த வீதியில் கடற்படையினரின் முகாம் ஒன்று அமைந்துள்ளதே இதற்கான காரணமாகும்.

எனவே பொதுமக்கள் நலன்கருதி சம்பந்தப்பட்ட அதிகாரிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தலையிட்டு குறித்த வீதியூடாகப் பொதுமக்கள் பயணம் செய்வதற்குரிய ஒழுங்குகள் செய்து தரப்பட வேண்டும் என அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (50-21)

# ஐ.நா. செயலரின் ஆலோசனைக் குழுவுக்கு இலங்கை அரசு அனுமதி மறுப்பது ஏன்?



## இதுவே அங்கு மனித உரிமை மீறல்கள் நடந்துள்ளதற்குச் சாட்சி என்கிறது கம்யூ.

திருவாரூர், ஜூலை 15

**இலங்கையில் நடைபெற்றவை எனக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்து தமக்கு ஆலோசனை வழங்க ஐ.நா. செயலரால் நியமிக்கப்பட்டுள்ள நிபுணர்கள் குழுவுக்கு அந்த நாடு அனுமதி வழங்க மறுப்பது ஏன் - என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிச் செயலர் ராஜா கேள்வி எழுப்பியுள்ளார்.**

திருவாரூரில் செவ்வாய்க்கிழமை செய்தியாளர்களுக்கு அவர் அளித்த பேட்டியிலேயே மேற்கண்டவாறு கேள்வியெழுப்பியுள்ளார்.

மேலும் அவர் கூறியவை வருமாறு - இலங்கையில் போர் முடிந்து, ஓராண்டு ஆகியும் தமிழர்களுக்கு எவ்வித அரசியல் தீர்வும் கிடைக்கவில்லை. இலங்கையில் நடைபெற்றவை எனக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்து தமக்கு ஆலோசனை வழங்க ஐ.நா. செயலர், நிபுணர் குழுவை நியமித்தார். இக் குழுவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, இலங்கையில் ஐ.நா. அலுவலகம் முன்னால் பல்வேறு போராட்டங்கள் நடைபெற்றன.

தனது தரப்பில் குற்றம் இல்லையெனில், இலங்கை அரசு ஏன் இந்தக் குழு நியமனத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. இலங்கை அரசின் இந்தச் செயலே அங்கு மனித உரிமை மீறல் நடைபெற்றுள்ளது என்பதற்கு சாட்சியாக உள்ளது.

ஐ.நா. ஆலோசனைக் குழுவை இலங்கை அரசு ஏற்க மறுப்பது குறித்து, போரில் அந்த நாட்டுக்குப் பேருதவி செய்த மத்திய அரசு ஏன் தனது கருத்தை வெளியிடவில்லை. இலங்கைத் தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பது தொடர்பாக சார்க் நாடுகள் கூட்டமைப்பிலும், ஐ.நா. சபையிலும் இந்தியா ஏன் குரல் எழுப்பவில்லை. இதை மத்திய அரசு தெளிவுபடுத்த வேண்டும்.

தமிழர்களுக்கு மறுவாழ்வு என்ற பெயரில் ரூபா 500 கோடியை மத்திய அரசு ஒதுக்கீடு செய்தும், இதுவரை அதற்கான பணிகள் இலங்கையில் மேற்கொள்ளப்படவில்லை. தமிழர்கள் வாழும் பகுதிகளில் இராணுவ முகாம்களும், இராணுவத்தினரின் குடியிருப்புகளும் அமைக்கப்பட்டு வருகின்றன. இதுகுறித்து மத்திய அரசு பாராமுகமாகவே உள்ளது. இலங்கைத் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு காண மத்திய அரசு எவ்வித முயற்சியும் எடுக்கவில்லை.

இது இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினை என இருந்துவிட முடியாது. தமிழர்களின் மறுவாழ்வுக்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் தார்மிகக் கடமை இந்தியாவுக்கு உண்டு. இந்திய மீனவர்களை அடிக்கடி இலங்கைக் கடற்படையினர் தாக்கி வருகின்றனர். இதில் உயிர்ப்பலி, காயங்கள் மற்றும் பொருள்கள் இழப்பு ஏற்படுத்தப்படுகின்றன. எனவே, கச்சதீவு உடன்பாட்டை மறுபரிசீலனை செய்ய வேண்டும். இந்த உடன்பாடுதான் பாரம்பரியமான தமிழர்களின் மீன்பிடி உரிமையை மறுக்கிறது. இந்திய மீனவர்களின் நலனை மத்திய அரசு பாதுகாக்க வேண்டும்.

- இப்படி அவர் கூறினார்.

# ஐ.நா. செயலர் நியமித்த குழுவை இந்திய அரசு ஆதரிக்கவேண்டும்

## தா.பாண்டியன் வலியுறுத்து



தர்மபுரி,ஜூலை 15

இலங்கையில் நடைபெற்றவை எனக் கூறப்படும் மனித உரிமைகள் மீறல்கள் குறித்து ஐ.நா. செயலரால் நியமிக்கப்பட்ட ஆலோசனைக் குழுவிற்கு இந்திய அரசு ஆதரவளிக்க வேண்டும் - என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பாண்டியன் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து தர்மபுரியில் அவர் செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு -

இலங்கையில் தமிழர்களின் மறுவாழ்வுக்காக ரூபா 1,900 கோடியை மத்திய அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. அந்தத் தொகை, முழுமையாக தமிழர்களுக்கு பயன்படுகின்றதா என்பதைக் கண்டறிய பத்திரிகையாளர்கள் குழு இலங்கை செல்ல அனுமதிக்க வேண்டும்.

இலங்கையில் நடைபெற்றவை எனக் கூறப்படும் மனித உரிமைகள் மீறல் தொடர்பாக தமக்கு ஆலோசனை கூற ஐ.நா. செயலர் நியமித்த குழுவிற்கு இந்திய அரசு முழு ஆதரவு அளிக்க வேண்டும்.

- இப்படி அவர் கூறினார்.

# சீமான் கைதைக் கண்டித்துப் போரிட அனைத்துக் கட்சிகளும் அணிதிரள்க!

## நெடுமாறன் அழைப்பு



சென்னை, ஜூலை 15

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காகப் போராடிய சீமான் கைது செய்யப்பட்டிருப்பதைக் கண்டித்து போராட்டம் நடத்த அனைத்துக் கட்சிகளும் அணி திரண்டு வரவேண்டும் - என்று இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்க ஒருங்கிணைப்பாளர் பழ.நெடுமாறன் அழைப்பு விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காகப் போராடிய சீமான் கைது செய்யப்பட்டிருக்கிறார். தேசிய பாதுகாப்புச் சட்டத்தை ஏவும் முயற்சி நடப்பதை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

அத்துடன், உத்தபுரம் வன்கொடுமையைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் எம்.பி. டி.கே.ரங்கராஜன் மற்றும் தொண்டர்கள் பொலிஸாரால் தாக்கப்பட்டு கைதுசெய்யப்பட்டிருப்பதையும் கடுமையாகக் கண்டிக்கிறேன்.

இவற்றுக்காக அணிதிரண்டு போராட முன்வருமாறு அனைத்துக் கட்சிகளையும் அழைக்கிறேன்.

- இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கை இராணுவத்தின் புறக்காவல் படையாக தமிழகக் காவல்துறையை மாற்றுகிறார் கலைஞர்

சென்னை,ஜூலை 15

தமிழ்நாட்டுக் காவல்துறையை இலங்கை இராணுவத்தின் புறக்காவல் படையாகக் கருணாநிதி மாற்றி வருவதையே அவரது அணுகுமுறைகளும் அடக்குமுறைகளும் காட்டுகின்றன. இந்த முயற்சியில் அவர் தோல்வியைத்தான் தழுவுவார் - என்று தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சியின் பொதுச் செயலர் மணியரசன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

நாம் தமிழர் இயக்கத் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமானை தமிழக அரசு சிறைப்படுத்திய செயல் கருத்துரிமையைக் குழிதோண்டிப் புதைக்கும் பாசிசச் செயல் மட்டுமல்ல, தமிழ் இன எதிர்ப்புச் செயலுமாகும்.

தமிழக அரசின் இந்தப் பாசிச தமிழின எதிர்ப்புச் செயல்களைத் தமிழ்த் தேசப் பொதுவுடைமைக்கட்சி சார்பில் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

தமிழக மீனவரை இனப்படுகொலை செய்வதையும், இலங்கையின் இதர அட்டூழியங்களையும் கண்டித்துப் பல அமைப்புகள் ஆர்ப்பாட்டம் நடத்தின - கண்டன அறிக்கைகள் வெளியிட்டன.

சட்ட அமைச்சர் துரைமுருகன், சில சிறு சிறு அமைப்பினர் இந்திய ஒருமைப்பாட்டிற்கு எதிராகவும், சட்ட ஒழுங்கைச் சீர்குலைக்கும் வகையிலும் பேசி வருகிறார்கள்.

இவர்கள் பேச்சுரிமை என்பதன் கீழ் ஒளிந்து கொள்கிறார்கள். இனி இவர்களை விடமாட்டோம். தேவைப்பட்டால் புதிய சட்டம் இயற்றி ஒடுக்குவோம் என்று கூறினார்.

சீமானும், தமிழ் அமைப்புகளும் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாகவும் தமிழகத் தமிழர் உரிமைகளுக்காகவும் கொடுக்கும் குரல் எந்தச் சட்ட ஒழுங்குச் சீர்குலைவையும் ஏற்படுத்தவில்லை.

இலட்சக்கணக்கான மக்களைக் கூட்டி தமிழ்ச் செம்மொழி மாநாடு நடத்தித் தமிழ், தமிழர் பெருமைகளைப் பேசிய ஓசை, காதில் ஒலித்துக் கொண்டிருக்கும்போதே தமிழர் கடற்பகுதியில் தமிழக மீனவரை இலங்கை அடித்துக் கொல்வதும் அதைக் கண்டித்தோரை கருணாநிதி சிறையில் அடைப்பதும் ஹிட்லரின் பாசிச நாடகத்தைத்தான் நினைவூட்டுகிறது.

- இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சீமான் கைதைக் கண்டித்து தஞ்சையில் சுவரொட்டிகள்!



சென்னை,ஜூலை 15

மீனவர்களுக்காகக் குரல் கொடுத்த நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமானைக் கைதுசெய்த அரசைக் கண்டித்து தஞ்சை தெற்கு மாவட்டப் பகுதிகளில் கண்டனச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

பஸ்கள் மற்றும் சுவர்களில் இந்தச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

தமிழக அரசை வன்மையாகக் கண்டிக்கிறோம் என்ற வாசகம் அந்தச் சுவரொட்டிகளில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

## இந்தியச் செய்திகள்

# தாய், தந்தையை இழந்த ஈழப் பெண்கள் 150 பேரைத் தத்தெடுத்துள்ளாராம் அசின்

## இது தவறா என்றும் அவர் ஆவேசம்



சென்னை,ஜூலை 15

என் மீது சிலர் வேண்டுமென்றே சர்ச்சையைக் கிளப்புகிறார்கள். இலங்கைத் தமிழர்களுக்கு நான் உதவுவது தவறா? - என்று நடிகை அசின் கேள்வி எழுப்பியுள்ளார்.

நடிகை அசின் 'ரெடி' என்ற இந்தி படப்பிடிப்புக்காக இலங்கை சென்றிருக்கிறார். அவர் இலங்கை சென்றது தமிழ்த்திரையுலகில் பெரும் சர்ச்சையைக் கிளப்பியிருக்கிறது. தென்னிந்தியத் திரைப்படக் கூட்டமைப்பு, நடிகர், நடிகைகள் யாரும் செல்லக்கூடாது என்று தடை விதித்திருந்தது.

அதற்குப் பதிலளித்து அசின் கூறியவை வருமாறு -

நான் இலங்கை சென்றது அந்த நாட்டின் அரசிற்கு ஆதரவு தெரிவிப்பதற்காக அல்ல. என் வேலைக்காக நான் இலங்கை சென்றேன். அது நான் ஏற்கனவே ஒப்புக்கொண்ட படம். அந்தப் படத்தின் படப்பிடிப்பை இலங்கையில் நடத்தியது என் கையில் இல்லை. தயாரிப்பாளரும், இயக்குநரும் முடிவு செய்த விடயம்.

யாழ்ப்பாண வைத்தியசாலையில் நோயால் பாதிக்கப்பட்ட தமிழர்களைப் பார்த்து கண்கலங்கினேன். அவர்களுக்கு உதவுவதற்காக ஒரு அறக்கட்டளையைத் தொடங்கி இருக்கிறேன். அதன்மூலம் இலவசக் கண் சிகிச்சை நடத்தினேன். அதில் 300 தமிழர்களுக்கு என் சொந்தச் செலவில் சத்திர சிகிச்சை செய்தேன்.

இந்தியாவில் இருந்து கண் மருத்துவத்தில் புகழ்பெற்ற 5 வைத்தியர்களை என் சொந்தச் செலவில் வரவழைத்து இந்த இலவசக் கண் சிகிச்சை முகாமை நடத்தினேன். நான் 10 ஆயிரம் பேருக்கு இலவசக் கண் அறுவைச் சிகிச்சை நடத்தத் திட்டமிட்டு இருக்கிறேன்.

இப்படி இலங்கைத் தமிழர்களுக்கு உதவி செய்வது தவறா? என் மீது எதற்காக நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள்? நான் இலங்கைத் தமிழர்களுக்கு உதவியதற்காகவா? இலங்கையில் நடந்த போரில் அம்மா, அப்பாவை இழந்த ஒரு வயது குழந்தை முதல் 16 வயது இளம்பெண்கள் வரை 150 பெண்களைத் தத்தெடுத்து இருக்கிறேன். இது தவறா?

என் மீது வேண்டுமென்றே சிலர் சர்ச்சையைத் தூண்டிவிடுகிறார்கள். தமிழ்நாட்டில் இருந்துகொண்டே சும்மா பேசுவதை விட, அறிக்கை விடுவதை விட இலங்கைக்கு வந்து யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழர்களுக்கு உதவலாமே. அங்குள்ள தமிழர்கள், 'அக்கா தமிழ்நாட்டில் இருந்து யாரும் எங்களைப் பார்க்க வராதது ஏன்?' என்று கண்கலங்கிக் கேட்கிறார்கள்.

விஜய் அண்ணாவையும், சூர்யா அண்ணாவையும் வரச்சொல்லுங்கள் அக்கா என்று கேட்கிறார்கள். எனக்குச் சரி என்று தோன்றியதைத்தான் நான் செய்திருக்கிறேன். என் மீது சர்ச்சையைத் தூண்டிவிடுபவர்கள் பற்றிக் கவலை இல்லை.

- இப்படி நடிகை அசின் கூறினார்.

# தமிழ், முஸ்லிம் மக்களின் ஒற்றுமையாலேயே எதிர்காலத்தில் உரிமைகளைப் பெற முடியும்!

## கல்முனை மாநகரசபை உறுப்பினர் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஜூலை 15

''தமிழ், முஸ்லிம் மக்களின் ஒற்றுமைப் பலம் மூலமே எதிர்காலத்தில் உரிமைகளைப் பெற்றுவாழ முடியும். இன்றைய நாட்டின் புதிய சூழலில் தமிழ், முஸ்லிம் மக்களின் ஒற்றுமை மிகவும் அவசியமாகும்.''

- இவ்வாறு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிசார்பில் கல்முனை மாநகரசபையின் புதிய உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ள, முஸ்லிம் காங்கிரஸின் செயற் குழு உறுப்பினரும், சாய்ந்தமருது மத்திய செயற் குழு உறுப்பின ருமான ஏ.ஜலால்தீன் பேசுகையில் குறிப்பிட்டார்.

கல்முனை மாநகர சபையின் மாதாந்த செயலமர்வில் முதன் முதலாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மாநகர மேயர் செனட்டர் எஸ்.இஸட். எம்.மசூர் மௌலானா தலைமையில், மாநகரசபை சபாமண்டபத்தில் இந்த மாதாந்த செயலமர்வு நடைபெற்றது.

புதிய உறுப்பினர் ஜலால்தீன் தொடர்ந்து உரையாற்றும் போது, கூறியவை வருமாறு:

''ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவரான எமது தலைவர் மர்ஹூம் அஷ்ரப், தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் ஒற்றுமைப்படுவதன் மூலம் தான் உரிமைகளைப் பெற்று இந்தநாட்டில் வாழ முடியுமென்பதை எப்போதும் வலியுறுத்தி வந்தார்.

''அவர் கொண்டிருந்த இத்தகைய கொள்கை வழியில் வந்த இன்றைய முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தமிழ், முஸ்லிம் ஒன்றுமைக்காக அர்ப்பணிப்புடன் செயற் பட்டு வருகின்றார்.

''இன்றைய புதிய சூழலில் தமிழ்க்கட்சிகளுடன், குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் மிக நெருங்கிய உறவையும், பேச்சுகளையும் அவர் மேற்கொண்டு வருகின்றார்.

''சிறுபான்மையினராக வாழும் தமிழ், முஸ்லிம் சமூகங்கள் ஒருபோதும், பிரிந்து வாழ முடியாது. எம்மிடையேயுள்ள நல்லுறவில் விரிசல் ஏற்படுமானால் எம் சமூகங்களை ஏப்பமிடக் காத்திருக்கும் பேரினவாத சக்திகளுக்கே அது வாய்ப்பாக அமைந்துவிடும்.

''ஆனால், எமது இரு சமூகங்களும் கடந்த கால கசப்பான சம்பவங்களைப் படிப்பினையாகக் கொண்டு ஒற்றுமையின் மூலமே விடிவைக் காணமுடியுமென்ற திடசங்கற்பத்தை இன்று கொண்டிருக்கின்றன.

''இந்த வகையில் கல்முனை மாநகர சபை தமிழ், முஸ்லிம் ஒற்றுமையை மேலோங்கச் செய்வதில் முன்னுதாரணமாகத் திகழ்கிறது. அத்துடன், எதிர்காலத்தில் இந்த ஒன்றுமையை மேலும் வலுப்படுத்துவதில் நாம் அர்ப்பணிப் புடன் செயல்படவேண்டும்.

''இந்தநிலையில் கல்முனை மாநகரசபையின் புதிய உறுப்பினராக நான் நியமனம் பெற ஆவனசெய்த ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், செயலாளர் நாயகம் எம்.ரி.ஹஸனலி, சிரேஷ்ட பிரதித்தலைவர் ஏ.எல்.அப்துல் மஜீத் ஆகியோருக்கும், முஸ்லிம் காங்கிரஸின் சாய்ந்தமருது மத்திய குழுவிற்கும் நன்றிபகர கடமைப்பட்டுள்ளேன்.

''கட்சிக்கு விசுவாசமாகவும், எமது மாநகர மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்பவும் என் பணிகள் தொடரும்''

- இவ்வாறு அவர் கூறினார். (ளி)

# சாய்ந்தமருது குறைபாடுகளை நீக்க பிரதிமேயர் வாக்குறுதி

அம்பாறை, ஜூலை 15

சாய்ந்தமருதில் நிலவும் குறைபாடுகளை நீக்க தம்மால் இயன்றவரை உதவுவார் என, கல்முனை மாநகர சபையின் பிரதிமேயர் ஏ.ஏ. பஸீர். தம்மைச் சந்தித்த தூதுக் குழுவினரிடம் தெரிவித்துக் கொண்டார்.

கிழக்கு நட்புறவு ஒன்றியத்தின் தவிசாளர் எம்.ஏ.றபீக் தலைமையிலான முகாமைத்துவ சபையின் அங்கத்தினர் குழு கல்முனை பிரதி மேயர் ஏ.ஏ.பஸீரை சாய்ந்தமருதில் சந்தித்தது.

இச்சந்திப்பில் மேற்படி குழுவினர் சாய்ந்த மருதில் உள்ள குறைபாடுகளை பிரதி மேயருக்கு விளக்கி அவற்றிற்கு உரிய தீர்வைப் பெற்றுத் தருமாறு வேண்டுகோள் விடுத்தனர்.

திண்மக் கழிவகற்றல், மேலதிகமாக வீதியில் சேருகின்ற மணலை அகற்றுதல், நெடுங்காலமாக திருத்தப்படாதுள்ள வீதிகளைத் திருத்துதல், தெரு விளக்குகளைப் பொருத்துதல், வீதிகளுக்குப் பெயரிடல் ஆகிய விடயங்கள் கலந்துரையாடப் பட்டன.

இவற்றிற்கு தன்னால் முடியுமான தீர்வுகளைப் பெற்றுத்தர தாம் ஆவன செய்வார் என பிரதி மேயர் தெரிவித்துக் கொண்டார். பிரதி மேயருடன் மாநகரசபை உறுப்பினர் ஏ.ஜலால்டீனும் இருந்தார். (ளி)

# ஆலங்கேணி - பூவரசந்தீவு வீதி நீண்டகாலமாகப் புனரமைக்கப்படவில்லை

திருகோணமலை, ஜூலை 15

கிண்ணியா ஆலங்கேணிச் சந்தியிலிருந்து பூவரசந்தீவு அல் - மினா மகாவித்தியாலயம் வரைக்குமான வீதி, நீண்டகாலமாகப் புனரமைக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால், பாடசாலை செல்லும் மாணவர்களும், அரசாங்க ஊழியர்களும் பல்வேறு சிரமங்களுக்குள்ளாகி வருகின்றனர்.

மாரி காலத்தில் இவ்வீதியில் நீர்தேங்கி நிற்பதோடு, கோடை காலத்தில் மணல் நிறைந்து போக்குவரத்துச் செய்ய முடியாதுள்ளது.காலத்துக் காலம் வரும், அரசியல்வாதிகள், இவ்வீதியைப் புனரமைப்புச் செய்து தருவதாக வாக்களிக்கின்றனர்.வெற்றி பெற்ற பின்னர் அவர்களை அப் பக்கமே காண்பது அரிது. அவர்கள் வருவதும் இல்லை என மக்கள் கூறுகின்றனர்.




இதேவேளை, இரவு நேரங்களில் மின்சார வசதி இருந்தும் மின்கம்பங்களில் மின் விளக்குகள் இல்லாததனால் இவ்வீதியால் போக்குவரத்தும் செய்ய முடியாதுள்ளது என மக்கள் கூறுகின்றனர். (ளி)

# உயர்கல்வி அமைச்சர் எஸ்.பிக்கு எதிராக பேராதனை பல்கலை மாணவர் ஆர்ப்பாட்டம்

## வாகனத்தின் மீது கல்வீச்சு

கண்டி, ஜூலை 15

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நிதிப்பீடத்திற்கான புதிய கட்டடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய கட்டடத்தைத் திறந்து வைப்பதற்காக நேற்றுமுன்தினம் உயர் கல்விப் பிரதியமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க அங்கு சென்றிருந்தார்.

அப்போது பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இது குறித்துக் கூறப்பட்டவை வருமாறு:-

உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க, இளைஞர் விவகார பிரதியமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே ஆகியோர் பல்கலைக்கழக வளாகத்திற்குள் நுழைவதற்கு முன்னரே மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மாணவர்களின் ஆர்பட்டத்துக்கிடையே உபவேந்தர் சரத் அபேகோனுடன் அமைச்சர்கள் புதிய கட்டடத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்தனர்.

அப்போது கட்டடத்திற்கு முன்னால் திரண்ட நூற்றுக்கணக்கான மாணவர்கள் கண்டனக் கோஷங்களை எழுப்பினர்.

தனியார் பல்கலைக்கழகங்களை அமைப்பதற்கு அமைச்சர் மேற்கொள்ளும் முயற்சிகளைக் கண்டித்தும் -

மாணவர்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் தீர்க்கப்படாததைக் கண்டித்தும் -

பெருந்தொகைப் பணம் செலவிட்டு வைபவங்கள் நடத்தப்படுவதைக் கண்டித்தும் மாணவர்கள் கோஷங்களை எழுப்பினர்.

அமைச்சர்கள் வைபவம் முடிவடைந்து திரும்பியபோது அவர்களின் வாகனங்கள் மீதும் மாணவர்கள் கற்களை வீசித் தாக்கினர் - என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, இவ்வைபவத்தின் பாதுகாப்பிற்கென கலகம் அடக்கும் பொலிஸார் உட்பட சுமார் 150 பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ளி)

# மாணவியைக் கடத்த முயன்றவர் பொகவந்தலாவையில் கைது

நுவரெலியா, ஜூலை 15

பாடசாலைக்குச் சென்று கொண்டிருந்த சிறுமியைக் கடத்துவதற்கு முற்பட்ட நபரை பொது மக்கள் பிடித்துப் பொலிஸாரிடம் ஒப்படைத்த சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் காலை பொகவந்தலாவையில் இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

பொகவந்தலாவை கேர்க்கஸ்வோல்ட் இலக்கம் 2 பாடசாலையில் தரம் 7 இல் கல்வி கற்கும் மாணவி ஒருவர் தோட்டத்திலிருந்து பிரதான பாதையினூடாக பாடசாலைக்குச் சென்று கொண்டிருந்தார்.

இதன்போது, மோட்டார் சைக்கிளில் வந்த குறித்த சந்தேகநபர் அவரது கையைப் பிடித்து இழுத்துள்ளார்.

இதன்போது மாணவி கூக்குரலிட்டுள்ளார். அங்கு திரண்ட அயலவர்கள் அந்நபரைப் பிடித்து அடித்துள்ளனர்.

சம்பவத்தைக் கேள்வியுற்ற தோட்ட மக்கள் அனைவரும் அங்கு திரண்டுவிட்டனர்.

இது தொடர்பாக தோட்ட நிர்வாகத்திற்கும், பொலிஸாருக்கும் அறிவிக்கப்பட்டது.

அங்கு வந்த பொகவந்தலாவை மற்றும் நோர்வூட் பொலிஸார் சந்தேகநபரைக் கைது செய்ததுடன் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

கேர்க்கஸ்வோல்ட் தோட்டத்தில் சிறிய மின் உற்பத்தி நிலையமொன்றை அமைக்கும் பணிகள் தற்போது இடம்பெறுகின்றன.

இந்தப்பணிகளில் ஈடுபட்டு வரும் பலாங் கொடை மாறாத்தென்ன பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரே சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான விசாரணைகள் இடம் பெற்று வருகினறன . (ளி)

# கஹவத்தை - ஓபாவத்தை தோட்டத்தில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்

கொழும்பு, ஜூலை 15

கஹவத்தை - ஓபாவத்தை இலக்கம் 1 கீழ்ப்பிரிவு தோட்டத் தொழிலாளர்கள் நேற்று முன்தினம் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.தோட்டத் தொழிலாளர்களுக்கும் முதலாளிமார் சம்மேளனத்திற்கும் இடையில் ஏற்படுத்தப்பட்ட கூட்டு ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டமைக்கு மாறாக அதிக கொழுந்து பறிக்குமாறு நிர்வாகம் தெரிவித்ததையடுத்தே போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.




தோட்டத் தொழிலாளர்கள் ஒரு நாளைக்கு 18 கிலோ கொழுந்தை மட்டுமே பறித்து வந்தனர்.

ஆனால் தோட்ட முதலாளிமார்கள் ஒரு நாளைக்கு 22 கிலோ கொழுந்து பறிக்கும்படி இவர்களைக் கட்டாயப்படுத்தி வருகின்றனர்.

அத்துடன் ஒருநாளைக்கு 18 கிலோ கொழுந்து பறிப்பவர்களுக்கு அரைநாள் சம்பளமே வழங்கப்படுகிறது. இதனை எதிர்த்தே தோட்ட மக்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். (ளி)

# உலகத்தின் மொத்த கறுவாத் தேவையில் 80 சதவீதத்தை இலங்கை நிறைவு செய்கிறது

வத்துகாமம், ஜூலை 15

முழு உலகத்திற்குமான கறுவாத் தேவையில் எண்பது சதவீதத்தை இலங்கை நிறைவுசெய்கின்றது - என ஏற்று மதி விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் லயனல் குணரத்ன தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கையின் பாரம்பரிய உற்பத்தியான கறுவா மெக்சிகோ, பொலிவியா, பேரு, ஜேர்மன், அமெரிக்கா, நேபாளம் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது.

உணவு சுவையூட்டல் மற்றும் மருந்து உற்பத்தி போன்றவற்றுக்கு இது பயன்படுகிறது. தவிர இன்னும் சில இரசாயனத் தயாரிப்புகளுக்கும் கறுவா பயன்படுத்தப்படுகிறது.

கறுவாவுக்கான மிகப் பொருத்தமான மண்வளமும், காலநிலையும் இலங்கையில் காணப்படுகின்றது. இதனால் அதன் தரம் உயர்ந்து காணப்படுகிறது.

இலங்கையில் பாரம்பரியமாகப் பின்பற்றப்பட்டுவரும் கறுவாப்பட்டை உற்பத்தி முறைகள் எமக்கே உரிய தனிச் சிறப்பு வாய்ந்தது.

முப்பதாயிரம் ஹெட்டேயர் பரப்பில் பயிரிடப்படும் கறுவா, காலி மாவட்டத்தில் மட்டும் பன்னிரண்டாயிரம் ஹெக்டேயரில் பயிரிடப்படுகிறது - இப்படி லயனர் குணரத்ன தெரிவித்தார். (ளி)

## மணமகள் தேவை

கனடாவில் குடியுரிமை உடைய தாதியர் தொடர்பிலான பயிற்சிபெற்று பணிபுரியும் சைவ குடும்பத்தைச் சேர்ந்த35 வயதுடைய அழகிய மண மகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை.

**தொடர்பு: 0779454010**

## உடனடி வேலைவாய்ப்பு

அழகுசாதனப் பொருள்கள் உற்பத்தி செய்து சந்தைப்படுத்தும் நிறுவனம் ஒன்றில் வீட்டில் இருந்தபடியே பணிபுரிவதற்கு ஓர் அரிய வாய்ப்பு! உங்கள் சுய விவரத்தைக் கீழ்வரும் விளம்பர இலக்கத்துக்கு அனுப்பிவையுங்கள். தொலைபேசி இலக்கம் உட்பட.

விளம்பர இல: 4044, C/O உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**19** வருட அனுபவம்

ஆறு மாத கால டிப்ளோமா

Course Length - Six Month

· தபால் மூலம் ·

**July.2010 to Dec..2010**

தமிழ் மொழி மூலம்

~ Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா

~ Dip. In Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா

~ Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா

~ Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா

~ Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா

~ Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா

~ Dip. in Sales & Marketing Management
விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் முகாமைத்துவ டிப்ளோமா

~ Dip. in Health & Hospital Management
சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை முகாமைத்துவ டிப்ளோமா

~ Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா

~ Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா

~ Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

**கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்**

கல்முனை, மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம், வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், கண்டி, கொழும்பு, ஹட்டன், அனுராதபுரம், மற்றும் நுவரேலியா.

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர்,முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.
Mobile: 0777 140 844 / 071 803 48 48

**விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:**

Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
*(B.Sc. Psychology, M.Sc. Psychology)*

**ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES**

24, 1st Floor, Supermarket Complex, Main Street, Sainthamaruthu-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

**விண்ணப்ப முடிவுத் திகதி : 28.07.2010**


## ஆங்கிலதினப் போட்டி

யாழ்.மாவட்ட கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான ஆங்கில தினப்போட்டியில் இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு உடுவில் மகளிர் கல்லூரியில் சிரேஷ்ட பிரிவினருக்கான பாடல், நாடகம் மற்றும் சிரேஷ்ட பிரிவினருக்கான பாடலும் இடம்பெறவுள்ளது. (50-86)

### பரிசளிப்பு விழா

வட்டு.மத்திய கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழா இன்று வியாழக்கிழமை பி.ப. 2 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் ந.சபாரத்தினசிங்கி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ். பல்லைக்கழக சட்டத்துறைத் தலைவர் பேராசிரியர் மா.சின்னத்தம்பி பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினராக சங்கானை ஸ்தான அ.மி.த.க பாடசாலை அதிபர் செல்வி அ.கனகலிங்கம் கலந்துகொள்வார். (50-204)

# தெய்வத்துவம் என்றால் என்ன?

ஆத்மா, பிரம்மா, விஷ்ணு, ஈஸ்வரன் என்ற பெயர்கள் எல்லாம் வேறு வேறு என்று நினைத்து வழிதவறிவிட வேண்டாம். இவையனைத்தும் ஒரே தெய்வீகத்தின் பெயர்களே.

உன்னால் எங்கும் விரவிப் பரவி நிற்கும் தெய்வீகத்தைத்தான் இனங்கண்டு கொள்ளமுடியவில்லை. உனக்குப்பிடித்த பெயரில் தெய்வத்தினைக் குறிப்பிட்டு அதற்கான ஆன்மீகச் சாதனைகளைச் செய்து அதனுள் அடக்கப்பார்க்கிறாய். ஆன்மீக சாதனங்கள் தெய்வீகம் எல்லாவிடத்தும் நிறைந்திருக்கிறது என்பதை உணர்த்தும் வகையில் அமையவேண்டும்.


பக்தர்களுக்கு இன்று சில வடிவங்கள் தெய்வீகமாக மனதில் பதிந்து போயிருக்கின்றன. அதனால் அந்த வடிவத்தின் மேல் வைத்த பக்தியை ஒரு சடங்காக நினைத்துச் செய்கிறார்கள். உனது தானம், வழிபாடு இவையெல்லாம் பற்றி இறைவனுக்கு எந்தவிதமான ஈடுபாடும் இல்லை. உங்களது தானம் செல்வம் இவற்றையெல்லாம் வருமான வரி அலுவலகத்துக்குக் காட்டுங்கள். இறைவன் விரும்புவதெல்லாம் உங்கள் அன்பு ஒன்றுதான்.

உடலின் உள்ளிருக்கும் ஆத்மா நிரந்தரமானது, அழியாதது, அந்த ஆத்மாவே தெய்வத்துவம். அந்த தெய்வத்துவத்தை உணரும் நிலைக்கு நீ உயர முற்பட வேண்டும். அது அழிக்கும் ஆனந்தம் இப்படிப்பட்டது, அப்படிப்பட்டது என்று யாராலும் வர்ணிக்க முடியாதது. மனம், வாக்கு இவற்றுக்கெல்லாம் அப்பாற்பட்டது. அந்த ஆனந்தம் உலகியல் மகிழ்ச்சிகள் எல்லாம் ஒரு அளவிற்கு உட்பட்டவை. உலகியல் உறவுகளும் அப்படியே ஆனால் எல்லாவற்றையும் கடந்த ஆனந்தம் தான் தெய்வானந்தம், யோகானந்தம் அதுவேதான் ஆத்வைதானந்தம்.

இது ஒலிவாங்கி இதைச் சுட்டிக்காட்டி ஒலிவாங்கி என்று உணர்ந்த பிறகு மீண்டும் விரலை நீட்டி 'இதுதான் மைக்' என்று சொல்ல வேண்டிய தேவையில்லை. அதேபோலவே இது மலர், இது காமிரா என்றெல்லாம் உணர்த்திய பிறகு மீண்டும் மீண்டும் அதைச் சுட்டிக்காட்ட வேண்டியதில்லை. அதேபோல் இதுதான் தெய்வம் என்று விக்கிரகத்தைக் காட்டி உணர்த்திய பிறகு அதன் மூலத்தை, தெய்வத்தை அறிந்த பிறகு உருவம் என்பது தேவையில்லாமல் போகிறது.

'அதோ சந்திரன்' என்று காட்டுகின்றோம். ஒரு மரக்கிளைக்கு மேலே இருக்கிறது சந்திரன் எனச் சுட்டிக்காட்டுகிறோம். சந்திரன் இருப்பதை உணர்ந்த பிறகு அப்படிக்குறிப்பால் உணர்த்த வேண்டிய அவசியமே இல்லை. அதேபோல் எல்லாமே தெய்வ வடிவம் என்ற ஞானத்தெளிவு ஏற்பட்டவுடன் இவ்வாறு வடிவங்கள் தேவையில்லை.

தெய்வத்துவம் என்ன என்ற விஷயத்தை முதலில் புரிந்துகொள்ளவேண்டும். எல்லோரிடமும் நிறைந்திருக்கும் சைதன்ய ஸ்வபாவமே தெய்வத்தும். (Conscience)இது (Conscience)பற்றிய உணர்வு மனிதனுக்கு வேண்டும்.



அதனை மனச்சாட்சி எனலாம். அனைத்தையும் அறிந்தவர் எனலாம். ஞானம் அடைந்தவர் என்று கூறலாம். ஈஸ்வரன் எனவும் அழைக்கலாம். விஷ்ணு, பிரமன், ஆதிசக்தி மிக உயர்ந்த ஆனந்தம் என்றெல்லாம் அழைக்கலாம். இதெல்லாம் ஆத்மா ஒன்றையே குறிக்கும்.

**சாயி சிந்தனை**




# கரணவாய் மூத்த விநாயகர் ஆலய மணிமண்டப

## திறப்பு விழா - 15.07.2010 வியாழக்கிழமை

**நேரம்: காலை 7.30 மணி**

**நிகழ்ச்சி நிரல்**

1. மங்கள விளக்கேற்றல் - ஆலய பிரதம குரு, பிரதேச செயலர், கலாசார அலுவலர், ஆலய தர்மகர்த்தா, கிராம அலுவலர்கள்.
2. தேவாரம்
3. தலைமையுரை
4. ஆசியுரை வழங்குதல்
   - ★ ஸ்ரீலஸ்ரீ கைலாசநாதக் குருக்கள் (ஆலய பிரதமகுரு)
   - ★ சி.சத்தியசீலன் (பிரதேச செயலர் , கரவெட்டி)
   - ★ செல்வி சே.செல்வசுகுணா (கலாசார அலுவலர், பிரதேச செயலகம், கரவெட்டி)
5. ஸ்தபதி கே.புருஷோத்தமன் (கொள்ளிடம், சீர்காழி, தமிழ்நாடு, தென் இந்தியா) அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தி தங்கப் பதக்கம் அணிந்து பட்டம் வழங்கி பிரதேசசெயலர் திரு.சி.சத்தியசீலன் அவர்களால் கௌரவிக்கப்படுவார்.
6. ஒளி அமைப்பாளர் - கந்தையா தவசீலன் (தொல்புரம் மத்தி, சுழிபுரம்) அவர்கள் கௌரவிக்கப்படுவார்.
7. நன்றியுரை

# சாமர்த்தியம்

யாரையும் எமாற்றவும் கூடாது. ஏமாந்து போகவும் கூடாது. அதுக்கு ரொம்ப சாமர்த்தியம் வேணும். ஓர் ஊரிலே ஒரு பெரிய வீணை வித்துவான் இருந்தார். உண்மையிலேயே வீணை வாசிக்கிறதுலே ரொம்பக் கெட்டிக்காரன். அவரோட வீணை வாசிப்பைக் கேட்டுட்டு ஒரு பெரிய மகாராஜா என்ன பண்ணினார் தெரியுமா?

ஆள் உயரத்துக்கு ஒரு வீணையைத் தயார் பண்ணி அதை அந்த வித்துவானுக்குப் பரிசாகக் கொடுத்துட்டார். அதுக்கப்புறம் அந்த வித்துவான் எந்த ஊருக்குப் போனாலும் அந்தப் பெரிய வீணையை எடுத்துக்கிட்டுப் போய்த்தான் வாசிப்பார். அவர் காலத்திலே அவர்தான் வீணை வாசிக்கிறதுலே நம்பர்வன்! அதேபோல இன்னொரு வித்துவான் இருந்தார். அவர் கடம் வாசிக்கிறவர். அவர் காலத்திலே அவர்தான் கடம் வாசிக்கிறதுலே நம்பர்வன்! இப்படி இவங்க இரண்டுபேரும் அவங்க அவங்க வாசிப்புல ரொம்ப உயரத்திலே இருந்தாங்க! இருந்தாலும் அவங்க இரண்டு பேருக்கும் ஏதோ மனஸ்தாபம். இவர் போற கச்சேரிக்கு அவர் போறதில்லை. இவர் போற கச்சேரிக்கு அவர் போறதில்லை. இவர்கள் இரண்டு பேரையும் எப்படியாவது



ஒரே மேடையில் வாசிக்க வைக்க வேணும் என்பது மக்களோட ஆசை. இருந்தாலும் அது நடக்காத காரியமாவே இருந்தது. இரண்டு துருவமாக இருப்பவர்களை எப்படி ஒன்று சேர்க்க முடியும்?

ஒரு கிராமத்துப் பண்ணையார் இருந்தார். பெரிய சவடால் பேர்வழி இருந்தாலும் கௌரவத்துக்கு ஆசைப்பட்டவர். அவர் வீட்டுலே அவர் பொண்ணுக்கு கல்யாணம். இந்த கல்யாணக் கச்சேரிக்கு அந்த இரண்டு பெரிய வித்துவான்களையும் கொண்டு வந்துவிடனும் என நினைச்சார். ஆனா இவர் வந்தால் அவர் வரமாட்டார், அவர் வந்தால் இவர் வரமாட்டாரே என்ன பண்ணுகிறது? யோசிச்சார். ''சரி! இவர் வருகிற விஷயத்தை அவரிடமும் அவர் வருகிற விஷயத்தை இவரிடமும் சொல்ல வேணாம். இரண்டு பேரிடமும் பொய் சொல்லி அழைத்து வருவோம். கச்சேரி சமயத்துல திடீரென மேடையில் ஏத்தி விடுவம். மேடையில் ஏறினத்துக்குப் பிறகு எல்லாருக்கும் முன்னாடி சண்டை போட்டுக் கொண்டிருக்க மாட்டார்கள்! அப்படின்னு ஒரு முடிவுக்கு வந்தார். அதே மாதிரி ஏற்பாடும் செய்துவிட்டார். அந்த வீணை வித்துவானையும் கட வித்துவானையும் தனித்தனியா ஒருவர் வந்திருப்பது மற்றவருக்குத் தெரியாமல் அழைத்து வந்து தனித்தனி வீடுகளிலே தங்க வைத்தார்.

அன்று பின்னேரம் கச்சேரி. இவர்கள் காலையிலே வந்து தங்கிவிட்டார்கள். ஆனா அவர்கள் கொஞ்ச நேரத்திலே உண்மையிலே நடப்பது என்ன என்பதை அரசல்புரசலாக இரண்டு பேரும் அறிந்து கொண்டனர். ஊரிலே இதுக்கென சிலபேர் இருப்பாங்களே. ஒருத்தரை ஒருத்தர் பத்த வைக்கிறதுக்கு என்று! வீணை வித்துவான் யோசித்துப் பார்த்தான். கடவித்துவானை எப்படி 'கட்' பண்ணுகிறது என்று. உடனே அந்த பண்ணையாளரைப் பார்த்தார். இதோ பாருங்கள் அந்த கட வித்துவானோடதான் வாசிக்கிறதுல எனக்கு ஒன்றும் கஷ்டமில்லை! இருந்தாலும் ஒரு விஷயத்தை உங்களிடம் சொல்ல வேண்டியது என்னுடைய கடமை. அவர் எத்தனை கடம் கொண்டு வந்தவர் என்று கவனிச்சனிங்களா? என்றார்.

''கவனிச்சேன்! இரண்டு கொண்டு வந்தவர்! என்றார் இவர். ''அது எதுக்குன்னா ஒரு கடம் உடைந்து விட்டா இன்னொன்றை உபயோகப்படுத்துகிறதுக்கு! ஒரு சுப காரியத்திலே மேடையில் பானை உடைந்து விட்டா அது நல்லா இருக்குமா? யோசித்துப் பாருங்க!'' என்றார்.

''நீங்க சொல்லுகிறது நியாயம்தான். நம்ம கச்சேரியிலே கடமே வேணாம். அந்த ஆளுக்கு பேசின பணத்தைக் குடுத்து திருப்பி அனுப்பி வைக்கிறேன் என்று சொல்லிவிட்டு நேரா அவருக்கிட்ட போனார். பணத்தை குடுத்து கணக்கு தீர்த்து விட்டு விஷயத்தை சொன்னார். உடனே கடவித்துவான் இந்த பண்ணையாரைப் பார்த்து ''நீங்கள் சொல்லுகிறது சரி... இருந்தாலும் நானும் ஒரு விஷயத்தை உங்களிடம் சொல்ல வேண்டியது என்னோட கடமை! என்றார். ''என்னங்க அது? என்றார் இவர். அந்த வீணை வித்துவானோட வீணை ஆள் உயரம் உள்ளது. அதை அவர்மட்டும் தூக்க முடியாது. அந்த வீணை மேலே பட்டுத்துணி போர்த்து நாலு பேர் தூக்கிகிட்டு மேடைக்கு வருவாங்க. அது பார்க்கிறதுக்கு எப்படி இருக்குமென்று நீங்களே யோசிச்சு பாருங்க'' என்றார். பண்ணையார் யோசித்துப் பார்த்தார். பாடையை தூக்கிற ஞாபகம் வந்தது. ''சுபமுகூர்த்தம்'' நடக்கிற வேளையில் இது தேவையா என்று யோசித்து பாருங்க என்றார். ''கட' வித்துவான். பண்ணையார் யோசிச்சார். என் வீட்டுக் கல்யாணத்துக்கு கச்சேரியே வேணாம்! என்று சொல்லிவிட்டு அவரையும் கணக்குத் தீர்த்து அனுப்பி வைத்து விட்டார்.

இந்த மூன்று பேரில் யார் கெட்டிக்காரங்கள் என்று நினைக்கிறீங்க? ஒன்னுக்கு ஒன்று சளைச்சதில்லை!

# தவறான பாடம்

ஓர் ஊரிலே ஓர் ஆள் இருந்தான். அவனுக்கு கடவுள் பக்தி அதிகம். அடிக்கடி கோயிலுக்குப் போய் கடவுளை வணங்கியபின் காட்டுக்குச் சென்று விறகு வெட்டி விற்பனை செய்வான். ஓரளவு வருமானம் வந்ததும் அதை வைத்து நிம்மதியான வாழ்க்கை நடத்திக் கொண்டு இருந்தான்.

ஒரு நாள் அவன் காட்டுக்குப் போகும்போது அங்கு ஒரு நரியைப் பார்த்தான். அந்த நரி முன்னங்கால் இரண்டுமே ஏதோ விபத்தில் இழந்து விட்டது போல இருந்தது. அது பாட்டுக்கு ஒரு மரத்தடியிலே உட்கார்ந்திருந்ததை இவன் பார்த்தான். அப்பொழுது அவன் மனதிற்குள்ளே ஒரு சந்தேகம். இந்த நரிக்கு இரு கால்களும் இல்லையே அது இப்படி இருக்கிறபோது எப்படி வேட்டையாடி தன் பசியைப் போக்கிக்கொள்ள முடியும் என்று யோசிக்க ஆரம்பித்தான்.

அவ்வாறு யோசித்துக்கொண்டு இருக்கும்போது அந்தப் பக்கமாக ஒரு புலி வந்தது. அதைப் பார்த்தவுடனே அவன் ஒரு மரத்தின் பின்னால் ஒளிந்துகொண்டு என்ன நடக்கிறது என கவனிக்க ஆரம்பித்தான். அந்தப் புலி ஒரு பெரிய மானை அடித்து இழுத்துக்கொண்டு வந்து சாப்பிட்டது போக மீதியை அவ்விடத்திலே விட்டுச் சென்றது. அதன்பின் கால் இல்லாத நரி மெதுவாக நகர்ந்து சென்று மிச்சம் இருந்ததை சாப்பிட்டது. இவ்வளவையும் மரத்தின் பின்னால் ஒளிந்து இருந்த ஆள் யோசிக்க ஆரம்பித்தான். இரண்டு காலுமே இல்லாத ஒரு வயதான நரிக்கே ஆண்டவன் சாப்பாடு போடுகிறான். அப்படி இருக்கும்போது தினமும் கோயிலுக்குச் சென்று சாமி குடும்பிடும் எனக்குப் போடாமல் விட்டு விடுவானா? நமக்கு பக்தி அதிகம். நான் எதற்கு கஷ்ரப்பட்டு வியர்வை சிந்தி விறகு வெட்ட வேண்டும் என யோசித்தான்.

அதன் பின் காட்டுக்குப் போகாமல் கோயிலுக்கு மட்டும் போய் வந்து ஒரு மூலையில் உட்கார்ந்து விடுவான். கடவுள் நம்மை காப்பாற்றுவார். சாப்பாட்டைக் கொடுப்பார் என கண்ணை மூடிக்கொண்டு கோயில் மண்டபத்திலே உட்கார்ந்து விட்டான். ஒவ்வொரு நாளும் சென்றதே தவிர சாப்பாடு வந்த பாடில்லை. பசியால் வாடிப்போன உடம்பு எலும்பும் தோலுமாகக் காணப்பட்டது. ஒரு நாள் இரவு மெதுவாகக் கண்ணைத் திறந்து பார்த்தான். ஆண்டவா என்னுடைய பக்தியில் உனக்கு நம்பிக்கை இல்லையா? நான் பட்டினி இருந்து சாகவேண்டியதுதானா? காட்டிலே புலிமூலம் நரிக்குச் சாப்பாடு அளித்தியே? அதைப் பார்த்துத்தான் இங்கே வந்தேன். இப்படி தவிக்க விட்டிட்டியே இது நாயமா? அப்போது கடவுள் அவன்முன் வந்து முட்டாளே! நீ கற்றுக்கொள்ள வேண்டியது நரியிடம் இருந்தல்ல புலியிடம் இருந்து. இப்படி ஒரு கதையை நம் பெரியவர்கள் சொல்வதுண்டு.

இவ்வாறு நாங்களும் வாழ்க்கையிலே பல சந்தர்ப்பங்களில் தவறான பாடங்களை படிக்கிறோம். அல்லது சரியாக படித்தாலும் தப்பாக விளங் கிக் கொள்கிறோம். அதனால்தான் வாழ்க்கையில் நிறையக் குழப்பங்களைச் சந்திக்க வேண்டி இருக்கு.

(சொன்னவர்: கோ.சுவாமிநாதன்)

# பதவிக் கர்வம்

ஒரு மனிதனுக்கு மூன்று விதங்களில் கர்வம் உண்டாவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அது அதிக பணம் வந்தாலும், அதிக புகழ் வந்தாலும் பெரிய பதவி கிடைத்தாலும், கர்வம் வரலாம்.

ஓர் ஊரில் ராஜா ஒருவர் இருந்தார். அவர் ஒரு நாள் தலைநகரைச் சுற்றி வரும் போது அழகான நிலத்தைக் கண்டார். அதில் தனக்கொரு மாளிகை அமைத்தால் நன்றாக இருக்கும் என்று நினைத்தார்.

அந்த நிலம் ஒரு வயதான கிழவிக்கு சொந்தமானது. அதில் கிழவி குடிசை போட்டு குடியிருந்து கொண்டிருக்கிறார்.

ராஜா அந்த நிலத்தை வாங்குவதற்காக அரண்மனை ஆள்களைக் கொண்டு கிழவியிடம் நிலத்துக்குரிய விலையை பேசி அந்த விலையை கொடுக்கும்படி உத்தரவு இட்டார். எவ்வளவு விலை கேட்டும் கிழவி நிலத்தை விற்பதற்குச் சம்மதிக்கவில்லை.

அரசனுக்குக் கோபம் வந்தது. குடிசையை பிரித்து எறியச் சொல்லி உத்தரவு இட்டான். அரண்மனை ஆள்களும் குடிசையைப் பிரித்து கிழவியை அவ்விடத்தைவிட்டு துரத்தி அதில் அரசனின் விருப்பப்படியே மாளிகையைக் கட்டினார்கள்.

அந்த மூதாட்டி ஒரு ஞானியிடம் சென்று தனக்கு நேர்ந்த கஷ்டத்தைச் சொன்னாள். ஞானி அதை மனதில் வைத்துக் கொண்டார். அரசன் அந்த ஞானியிடம் வந்து தான் ஒரு மாளிகை கட்டியிருக்கிறேன் அதை வந்து பார்க்குமாறு வேண்டிக் கொண்டான்.

ஞானியும் அதற்குச் சம்மதித்து ஒரு கோணிப்பையுடன் கழுதையையும் ஓட்டிக் கொண்டு மாளிகைக்குப் போனார். அரசனும் இதைப்பார்த்து ஆச்சரியப்பட்டு எதற்காக இதெல்லாம். என்று வினாவினான்.

ஞானியும் உங்கள் தோட்டத்தில் மண் கொஞ்சம் எடுத்துப் போகலாம் என நினைக்கிறேன். அதற்கு தாங்கள் அனுமதி கொடுங்கள் என்றார். அரசனும் கொஞ்சம் மண் தானே என நினைத்து சரி என அனுமதித்தான். ஞானி தோட்டத்திற்குச் சென்று மண்ணைக் கோணிப்பையில் நிரப்பினார். பின்னர் அரசரனைப் பார்த்து இதை தூக்கி கழுதை முதுகில் வைப்பதற்கு உதவுமாறு அழைத்தார்.

அரசனும் சம்மதித்து மண்மூடையை தூக்கிப்பார்த்தான். முடியவில்லை. அப்போது ஞானி அரசரே இந்த மண் மூடையை உங்களால் தூக்க முடியவில்லையே மூதாட்டியிடம் அபகரித்த இந்தத் தோட்டம் முழுவதையும் சுமக்க ஆசைப்படுகிறீர்களே உங்களால் முடியுமா? என்று கேட்டார்.

அரசனும் தனது செயலுக்கு வருந்தி மூதாட்டியை அழைத்து இந்த மாளிகையும் தோட்டமும் உங்களுக்கே சொந்தமானது என்று கூறி மன்னிப்பும் கேட்டுக் கொண்டான்.

போகும் போது நாம் எதையும் கொண்டு போவதில்லை. அதனால் நாம் ரொம்ப அலட்டிக் கொள்வதும் இல்லை. செய்ய வேண்டியதற்கு அடம்பிடிக்க வேண்டியது இல்லை கர்வப்படவும் தேவை இல்லை.

(சொன்னவர் தென்கச்சி கோ.சுவாமிநாதன்)

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

### மேடம்



விளையாட்டாக செய்த காரியங்கள் விபரீதமாக முடியலாம். உங்களிடம் வாக்குக் கொடுத்த ஒருவர் அதைக் காப்பாற்றாமல் இழுத்தடிக்கலாம். தொழில் ரீதியாக மறைமுக எதிர்ப்புகள், போட்டிகளைச் சந்திக்கலாம். விருப்பம் இல்லாமல் சில செலவுகளைச் செய்யலாம். புதிய இடங்களுக்குச் செல்லலாம்.

### இடபம்



குடும்பத்தில் கலகலப்பு, சந்தோஷம் குடி கொள்ளும் நாள். எதிர்கால திட்டம் தொடர்பான விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். பழைய அனுபவம் ஒன்றை நினைத்து பார்த்து புதிய முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். புதிய பணவரவுகளால் பற்றாக்குறை நீங்கும். மனதிற்கு சந்தோஷம் தரும் செய்திகளைக் கேட்கலாம்.

### மிதுனம்



பிள்ளைகளின் மனம் கோணாமல் நடந்து கொள்வீர்கள். கணவன் மனைவி இடையே வாக்குவாதங்கள் ஏற்படலாம். செலவுகளில் சிக்கனம் காட்ட வேண்டும். உடன் பிறப்புக்களை நம்பி ஒப்படைத்த காரியங்கள் நல்ல விதமாக முடியலாம். உடல் ரீதியான உபாதைகளால் உற்சாகம், தெம்பு குறையலாம்.

### கடகம்



எண்ணம் போல எல்லாம் நடக்கும் நாள். விருந்தினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பு சந்தோஷம் உண்டு. பலர் பங்கேற்கும் நிகழ்ச்சி ஒன்றில் நீங்களும் கலந்து கொள்ளலாம். மற்றவர்கள் கடுமையாக நினைக்கும் வேலை ஒன்றை நீங்கள் எளிதாகச் செய்து முடிப்பீர்கள். தேக ஆரோக்கியம் தெம்பு, உற்சாகம் தரும்.

### சிங்கம்



பொறுமை, நிதானத்துடன் செயற்பட வேண்டிய நாள். தொழில் ரீதியாக சிலர் உங்களின் உதவி நாடி வரலாம். உங்களின் நண்பர்களுக்கு தெரிந்த ஒருவர் உங்களுக்கும் அறிமுகமாகலாம். உணவு விடயங்களில் எச்சரிக்கை அவசியம். சில விடயங்கள் தொடர்பாக ஒருவரிடம் கோபம், வேகமாக நடந்து கொள்ளலாம்.

### கன்னி



உறவினர்களின் மனம் கோணாமல் நடந்து கொள்வீர்கள். எதிர்பார்த்த பணவரவுகளை பெறலாம். நண்பர்களுக்காக சிலரிடம் பரிந்து பேசலாம். பெண்கள் வழியில் அனுகூலமான உதவிகள் கிடைக்கும். சில விடயங்களில் நன்றி உணர்வுடன் நடந்து கொள்வீர்கள். மாலை நேரத்தில் ஆலயங்களுக்குச் சென்று வழிபாடு நடத்துவீர்கள்.

### துலாம்



உங்கள் நலனில் அக்கறை கொண்டவர்களைச் சந்திப்பீர்கள். எந்த வேலையையும் நாளை என தள்ளி வைக்காமல் உடனுக்குடன் செய்து முடிப்பீர்கள். சகோதரிகள் வழியில் எதிர்பாராத செலவுகளைச் சந்திக்கலாம். மற்றவர்களுக்காக சில வேலைகளைச் செய்வீர்கள். நீண்ட நாட்களாக சந்திக்க நினைத்த ஒருவரைச் சந்திக்கலாம்.

### விருச்சிகம்



குடும்பத்திற்கு தேவையான பொருள்களை வாங்கிக் கொடுப்பீர்கள். சிலரிடம் உறுதி கொடுத்து விட்டு, பன்னர் அதில் மாற்றங்களைச் செய்யலாம். பிள்ளைகளின் செயற்பாடுகளை நினைத்து பெருமை அடைவீர்கள். சில வேலைகளை தவறாக செய்து விட்டு, மீண்டும் ஒரு முறை செய்ய நேரிடலாம்.

### தனுசு



யாரிடமும் வாக்குவாதங்களில் ஈடுபட வேண்டாம். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளின் கட்டளைகளை நிறைவேற்ற மறப்பதன் மூலம் கண்டிப்பற்கு ஆளாகலாம். பயணங்களில் திடீர் மாற்றங்களைச் செய்யலாம். சிறிய தவறு ஒன்று பெரிய பிரச்சினையாகி தொந்தரவு கொடுக்கலாம். சபலத்தைத் தவிர்க்கவும்.

### மகரம்



குடும்பத்தில் ஆரோக்கியமான விவாதங்கள் வந்து போகும். புதியவர்கள் அறிமுகமாவார்கள். திருமண முயற்சிகள் பலிதமாகும். தொழிலில் லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரி ஆதரிப்பார். எச்சரிக்கை தேவைப்படும் நாள். குடும்பத்தில் சந்தோசம் அதிகரிக்கும்.

### கும்பம்



சோதனைகளை சாதனைகளாக மாற்றிக் காட்டும் நாள். கடந்த காலத்தில் உங்களுக்கு உதவி செய்த ஒருவருக்கு, இப்போது பதில் உதவி செய்வீர்கள். கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். உங்களின் வேலை ஒன்றை சக ஊழியர்கள் மூலம் முடித்துக் கொள்வீர்கள். மற்றவர்களின் விமர்சனங்களையும் அறிவுரையாக ஏற்பீர்கள்.

### மீனம்




உடல் அசதி, சோர்வு ஆள்கொள்ளும். உறவினர்கள் அல்லது நண்பர்கள் சிலருடன் வெளியிடங்களுக்குச் செல்லலாம். சிலர் கேட்காமலேயே உதவி செய்வீர்கள். நண்பர் ஒருவருக்கு சாதகமாக செயற்படுவதன் மூலம், மற்றொரு நண்பரின் அதிருப்திக்கு ஆட்படலாம். மாலை நேரத்தில் பணவரவுகளைப் பெறலாம்.






# அச்சுவேலி காட்டுமலைக் கந்தசாமி கோயில்



(சென்றவாரத் தொடர்ச்சி)

சிவகுரு ஐயர் ஆலயத்தைப் பொறுப்பேற்று பல்வேறு விதமான கட்டுமானத் திருப்பணி வேலைகளை மேற்கொண்டதுடன் புதிய சித்திரத்தேர் அமைப்பதற்கான திருப்பணிச்சபையை அமைத்து பல லட்சம் ரூபா பெறுமதியான சித்திரத்தேர் செய்யப்பட்டு 1971ஆம் ஆண்டு ஜூலை மாதம் 05ஆம் திகதி வெள்ளோட்ட விழா நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து திருமஞ்சம் செய்யப்பட்டு 07.07.1986ஆம் திகதி வெள்ளோட்டம் விடப்பட்டது. இந்தக் காலப்பகுதியில் ஆலய உட்பகுதியில் பாரிய கட்டுமானப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அதைஅடுத்துவந்த காலப்பகுதியில் ஆலயத்தின் முகப்புப் பகுதி புதிய வடிவடிவமைப்புக்கு மறுசீரமைப்புச் செய்யப்பட்டதுடன் முன்மண்டபம் அழகுபடுத்தப்பட்ட மூடுசாந்து மண்டபமாக மாற்றம் செய்யப்பட்டது. 1994 ஆம் ஆண்டு பழனி ஆண்டவருக்கு ஆலயம் அமைக்கப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டது. அருளாளர் சீனியர் காலத்தில் இருந்து அருள் வியாபகத்துடன் வளர்ந்து வந்த ஆலயம் சிவகுரு ஐயரின் காலத்தில் கலைக்கட்டமைப்புக்கு ஏற்ப பல்வேறு வகையான கட்டுமான வளர்ச்சி கண்டது. அடியவர்கள் ஆலயத்திருப்பணிக்கு இல்லை என்னாது வாரிவழங்கி வந்ததோடு சிவகுரு ஐயர் முன்னெடுத்த சகல திருப்பணி வேலைகளும் திட்டமிட்ட முறையில் குறித்த காலவேளையில் எதிர்பார்த்ததற்கு அதிகமாகவும் சிறப்பாகவும் நிறைவுபெற்று வந்தமை ஐயரின் ஆளுமைச் சிறப்பையும் முருகப் பெருமானின் அருள் வியாபகத்தையும் மேன்மேலும் வலியுறுத்துவனவாக அமைந்திருந்தன. சிவகுரு ஐயரின் காலப்பகுதியில் புதிய மணிக்கோபுரம் நிர்மாணிக்கப்பட்டு து.துரைசிங்கம் குடும்பத்தினரின் உபயமாக பெரிய காண்டாமணியும் நிறுவப்பட்டது. காண்டாமணி பற்றிக் குறிப்பிடும்போது ஆலயத்தின் அதிகாலைப் பூசைக்குச் சரியாக 4 மணிக்கு அடிக்கப்படும் ஆயத்தமணி குறித்த நேரத்துக்கு நாள் தோறும் மணித் துளிகள் பிசகாமல் ஒலிப்பது குறிப்பிடத்தக்கது. இந்த மணியின் ஒலியுடன் காலையில் அனைவரும் தமது நாளாந்தக் கடமைகளை காட்டுமலைக் கந்தனை மனதில் நிலைநிறுத்தி ஆரம்பிப்பது அச்சுவேலிக் கிராமத்துக்கும் அதனோடு இணைந்த கிராமங்களுக்கும் கிடைத்த அருட்கொடையாகும். அதிகாலைப் பூசை 5 மணிக்கும் மதியபூசை நண்பகல் 12 மணிக்கும் மாலைப் பூசை 6 மணிக்கும் மூன்றுகாலப்பூசை நடைபெறும். ஆரம்ப காலங்களில் 15 தினங்கள் திருவிழா நடைபெற்றுவந்தது. கொடியேற்றத்திருவிழாஅன்று தீர்த்தக் கேணியில் நீர் எடுக்கப்பட்டு குடத்தில் ஏற்றப்படும் தீபம் 15 தினங்கள் தொடர்ந்து எரிந்து தீர்த்தத் திருவிழா திதி முடிவடையும் வேளையில் தானாக அணைவது அற்புதமாக இருந்து வந்ததுடன் தீபம் எரிந்து அணைந்த மிகுதி நீர் மருந்தாக தீராதநோய்களுக்குப் பயன்படுத்தப்பட்டும் வந்தது. பிற்காலத்தில் திருவிழாவின் எண்ணிக்கை 25 தினங்களாக அதிகரிக்கப்பட்டு ஆனி அமாவாசை வந்து 5 ஆம் நாள் கொடியேற்றத் திருவிழாவுடன் ஆரம்பமாகி உருத்திரநாயகி உற்சவம், மஞ்ச உற்சவம், அமிர்தவல்லி, சுந்தரவல்லி உற்சவம், தண்டாயுதபாணி உற்சவம் (மாம்பழத் திருவிழா), கைலாச வாகன உற்சவம், கார்த்திகை உற்சவம், சப்பறத்திருவிழா, தேர்த்திருவிழா, தீர்த்தத்திருவிழா, பூங்காவனத்திருவிழா, வைரவர் உற்சவம் என 25 தினங்கள் திருவிழா நடைபெறும். 25 தினங்களும் திருவிழாக் காலத்தில் அன்னதானம் வழங்கி ஆலயத்துக்கு வரும் அடியவர்களும் ஊர் மக்களும் பெருவிருப்போடு உண்டு மகிழ்வதும் முருகப் பெருமானின் அருள் வியாபகம்தான் எனப் போற்றிப் புகழப்படுகின்றது .




வருடாந்த மகோற்சவம் தவிர சித்திர வருடப்பிறப்பு அன்று ஆலயத்தில் ஆண்டுதோறும் 1008 சங்குகள் வைத்து சங்காபிஷேகம் நடைபெறுவதோடு மாதாந்தம் கார்த்திகை உற்சவம் மற்றும் விசேட புண்ணியகாலங்களில் உற்சவம் நடைபெறுவதும் குறிப்பிடத்தக்கது. ஆலயத்துக்கான தீர்த்தக்கேணி தொண்டைமானாறு குடாக்கடல் நீர் ஏரியில் அமைக்கப்பட்டுள்ளது. ஆலயத்தில் இருந்து ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் இது அமைந்துள்ளது. தீர்த்தத் திருவிழாவன்று முருகன் விநாயகர் ஆகிய மூலமூர்த்திகளுடன் வேல் பெருமான் எழுந்தருளிச் சென்று தீர்த்தமாடுவது உண்டு.

(தொடரும்)

# புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி

தொகுப்பு : ஞானஆதவன்

(சென்றவாரத் தொடர்ச்சி)

வலி.கிழக்கில் வலிமைமிக்க கல்வி நிறுவனமாக விளங்கும் ஸ்ரீ சோமாஸ்கந்தாக் கல்லூரியின் க.பொ.த.சாதாரணம், க.பொ.த.உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் யாழ்.நகரின் பிரபல கல்லூரிகளின் பரீட்சை முடிவுகளுடன் ஒப்பிட்டு மதிப்பீடு செய்ய முடியாத நிலையில் இருந்த போதிலும் கோப்பாய்க் கல்விக் கோட்டப் பாடசாலைகளின் பரீட்சை முடிவுகளில் குறிப்பிடத்தக்கன.

## தரம் 5 புலமைப் பரிசில் பெறுபேறு

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றுவோர் எண்ணிக்கையுடன் ஒப்புநோக்கும்போது சித்தியடைவோர் எண்ணிக்கை வீதம் ஒற்றை இலக்கத்தில் உள்ளது. இது ஆரம்பகல்விப் பிரிவின் மந்தமான வளர்ச்சி நிலையையே எடுத்துக்காட்டுகின்றது. ஆண்டு வாரியாகச் சித்தியடைந்தோர் எண்ணிக்கை 2002ஆம் ஆண்டு 5 பேர், 2003ஆம் ஆண்டு 3 பேர், 2004ஆம் ஆண்டு ஒருவரும் சித்தியடையவில்லை, 2005ஆம் ஆண்டு 5 பேர், 2006ஆம் ஆண்டு 6 பேர், 2007ஆம் ஆண்டு 6பேர், 2008ஆம் ஆண்டு 5 பேர், 2009ஆம் ஆண்டு 5பேர் கல்லூரியின் ஆரம்பப்பிரிவுக் கல்வி அடைவு மட்டம் தொடர்பாக கல்லூரிச் சமூகம் நம்பிக்கை கொள்ளாத நிலை இசுறுபாடசாலைக் கட்டமைப்பு மூலம் முடிவுக்கு வந்துள்ளது எனக் கூறப்படுகின்றது.

இசுறுபாடசாலைக் கட்டமைப்பின் மூலம் கல்லூரியின் ஆரம்பப் பிரிவு 528 மாணவர்களுடன் புத்தூர் இந்து ஆரம்பப் பாடசாலை என்ற பெயரில் தனிப் பாடசாலையாக 16.06.2010ஆம் திகதிமுதல் வேறுபடுத்தப்பட்டு அதன் முதலாவது அதிபராக இ.கோகுலராஜன் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் ஆரம்பப் பாடசாலை எதிர்கால இலக்குத் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில் 'புதிய மாற்றங்களுடன் ஆரம்பப் பாடசாலை எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படும். எழுத்து, வாசிப்பு என்ற நிலையில் நூற்றுக்கு நூறுவீதம் என்ற நிலைக்கு உயர்த்தப்படுவதுடன் 5ஆம் தரம் புலமைப் பரிசில் பரீட்சை முடிவிலும் பெரியளவில் மாற்றம் உண்டாகும்' எனத் தெரிவித்தார். இந்த நம்பிக்கையும் மாற்றமும் புத்தூரில் புதிய கல்வி பாரம்பரியத்துக்கு அடித்தளமாக அமையும்.




## விளையாட்டுத்துறை

விளையாட்டுத்துறையில் கல்லூரி கணிசமான வெற்றிகளை பெற்றுள்ளது. கரப்பந்தாட்டத்திலும் மெய்வல்லுநர் போட்டிகளிலும் கணிசமான சாதனைகளை நிலைநாட்டியுள்ளது. 2005ஆம் ஆண்டு கரப்பந்தாட்டத்தில் 19 வயதுப் பிரிவில் வடக்குக் கிழக்கு மாகாண மட்டத்தில் 2ஆம் இடம், 17 வயதுப் பிரிவு மாகாண மட்டத்தில் 3ஆம் இடம், 2006ஆம் ஆண்டு 19 வயது கரப்பந்தாட்டம் மாகாண மட்டத்தில் 2ஆம் இடம், 2002ஆம் ஆண்டு 19 வயது கரப்பந்தாட்டம் முதலாம் இடம், மாவட்ட மட்டத்தில் 15 வயதுப் பிரிவு, 13 வயதுப்பிரிவு மாவட்ட மட்டத்தில் இரண்டாம் இடம், 2008ஆம் ஆண்டு கரப்பந்தாட்டம் வடக்கு மாகாண மட்டம் முதலாம் இடம், 17 வயதுப் பிரிவு மாகாண மட்டம் 2ஆம் இடம், 19 வயதுப் பெண்கள் மாவட்ட மட்டம் 3ஆம் இடம், 2009ஆம் ஆண்டு கரப்பந்தாட்டம் 19 வயது மாகாணமட்டம் முதலாம் இடம், 17 வயதுப்பிரிவு மாகாண மட்டம் முதலாம் இடம், ஈட்டி எறிதலில் செல்வி ச.யசோதா மாவட்டநிலையில் முதலாம் இடம், 2010ஆம் ஆண்டு கரப்பந்தாட்டம் 19 வயதுப்பிரிவு ஆண்கள் மாகாண மட்டம் முதலாம் இடம், 17 வயதுப் பிரிவு மாகாணமட்டம் முதலாம் இடம், வலைப்பந்தாட்டம் 19 வயது பெண்கள் மாகாணமட்டம் இரண்டாம் இடம், 19 வயதுப்பிரிவு மாணவி செல்வி ச.யசோதா தட்டெறிதல் மாவட்ட மட்டத்தில் இரண்டாம் இடம், ஈட்டி எறிதல் மாகாண மட்டம் மூன்றாவது இடம், குண்டுபோடுதல் மாவட்டமட்டத்தில் மூன்றாம் இடம், இவர் தேசிய மட்டப் போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ளார். உடற்கல்விப் பொறுப்பாசிரியராக வி.செந்தூரன் கடமையாற்றுகின்றார்.

(தொடரும்)

## கோழிக்குஞ்சு விநியோகம்

30 நாளில் 2 Kg வுக்கு மேல் வளர்ச்சியடையக் கூடிய Bahiraha புறொயிலர் குஞ்சுகள் 17.07.2010 விநியோகிக்கப்படும்.

★ றாஜீவ்
நவாலிவீதி, ஆனைக்கோட்டை.
T.P. No: 021 222 2867, 0776090926

## சேவல் குஞ்சுகள் விற்பனைக்கு

ஒரு மாதம் வளர்க்கப்பட்ட சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. ரூபா 60/= மட்டுமே. மொத்தக் கொள்வனவுக்கு விசேட கழிவு.தொடர்பு: T.P.: 021 7200616, 0777884971.

## தேவை

தையல்வேலை தெரிந்தவர்கள் உடனடி யாகத் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
0776701495, 021 2270119

## மணமகள் தேவை

யாழ்.இந்து, வயது 30 (5'8''), மூலம், 1ஆம் பாதம், பாவம் 26, இலக்கினத்தில் செவ்வாய் உள்ள சிங்கப்பூரில் Civil Engineer (B.Sc.,M.Sc.) ஆகப் பணிபுரியும் மணமகனுக்கு அழகிய படித்த மெல்லிய மணமகள் தேவை.
தொடர்பு: 021 3213117, 021 2270055 (சி/569239)

New batches and Paper class **MIS**
**ICT - 10 / 11**
R.Kumaran - B.Sc.
100% pass rate for last 3 years
அடிப்படையிலிருந்து முற்று முழுதாகக் கற்பதற்கு......
# 74, Sabopathy Lane, Thalaiyaali, pirambady.Jaffna
TPNo : 0776577359

## காணி விற்பனை

துன்னாலை வடக்கு, கரவெட்டியில் வீதி ஓரமாகப் 10½ பரப்புக்காணி பயன்தரு மரங்களுடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு : T.P.:0774939793

## கிருஷ்ணா அடகு கடை

இல.370, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்
பதிவு இல.:J/DS/BR/472

மேலே குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2009ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30ஆம் திகதிக்கு (30.06.2009) முன்னர் அடகு வைத்து மீட்கப்படாமல் இருக்கும் அடகு நகைகள் யாவற்றையும் 2010ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 15ஆம் திகதிக்கு (15.08.2010) முன்பு மீட்கவும். மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதிப் பணத்தைக் கட்டி புதுப்பித்துக்கொள்ளவும். இரண்டும் செய்யத்தவறின் 15.08.2010 ஆம் திகதி விற்கப்படும் என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

இல.: 370, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம். உரிமையாளர்.
தொ.பே.: 0212225046. (சி/569023)

## Hatton National Bank

Hatton National Bank plc (PQ82)

## அறிவித்தல்

ஹற்றன் நஷனல் வங்கி கல்வி அமைச்சுடன் இணைந்து நடத்தும் அகில இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான தனிப் பாடல், பேச்சு, குறுநாடகப் போட்டிகள்- 2010 ஜூலை மாதம் 17ஆம் திகதி (சனிக்கிழமை) காலை 8.30 மணி முதல் பிற்பகல் 4 மணிவரை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும் என்பதைப் போட்டியாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான போட்டிகள் கிளிநொச்சி இந்துக் கல்லூரியில்- 2010 ஜூலை மாதம் 17ஆம் திகதி (சனிக்கிழமை) காலை 8.30 மணி முதல் பிற்பகல் 4 மணிவரை நடைபெறும் என்பதைப் போட்டியாளர்களுக்கு அறியத் தருகின்றோம். (சி/569246) ஹற்றன் நஷனல் வங்கி.

## BOC இலங்கை வங்கிக் கிளைகளில் மீட்கப்படாத தங்க அடகு நகைகளின் ஏல விற்பனை பிற்போடப்பட்டுள்ளது

ஏற்கனவே விளம்பரப்படுத்தப்பட்டபடி ஜூலை 17ஆம், 18ஆம் திகதிகளில் நடைபெற இருந்த அடகு நகை ஏல விற்பனை தவிர்க்க முடியாத காரணத்தால் ஜூலை 24ஆம், 25ஆம் திகதிகளுக்குப் பிற்போடப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள பின்வரும் இலங்கை வங்கிக் கிளைகளில் 16.10.2009 இற்கு முன்னர் 6 மாதங்களுக்கும் 16.04.2009இற்கு முன்னர் 12 மாதங்களுக்கும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் யாவும் பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளன.

| கிளையின் பெயர் | ஏல விற்பனைத் திகதி இடம் நேரம் |
|---|---|
| யாழ்.மேற்தரக்கிளை | யாழ்ப்பாணம் அதி மேற்தரக்கிளை யாழ்ப்பாணம் 2010 ஜூலை 24ஆம், 25ஆம் திகதிகளில் (சனி, ஞாயிறு) காலை 9.30 மணிக்கு. |
| யாழ்.2ஆம் மேற்தரக்கிளை | |
| திருநெல்வேலி (கோப்பாய் விரிவாக்கற்கிளை உட்பட) | |
| காரைநகர் | |
| சுன்னாகம் | |
| மானிப்பாய் (சங்கானை விரிவாக்கற்கிளை உட்பட) | |
| காங்கேசன்துறை | |
| நெல்லியடி | |
| ஊர்காவற்றுறை (ஊர்காவற்றுறை விரிவாக்கற் கிளை உட்பட) | |
| பருத்தித்துறை (வல்வெட்டித்துறை விரிவாக்கற் கிளை உட்பட) | |
| சாவகச்சேரி | |
| அச்சுவேலி | |

இந்த ஏல விற்பனையை ஒத்திவைக்கும் அல்லது இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்கு உண்டு.

செயற்பாட்டு முகாமையாளர், இலங்கை வங்கி, (வடமாகாணம்)
வடமாகாண காரியாலயம், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சி/569216) தொலைபேசி இல.: 021 222 3126, 021 222 2735.


## இலங்கை தூதரகத்துக்கு பலத்த பாதுகாப்பு

சென்னை, ஜூலை 15

சென்னையில் உள்ள இலங்கை உதவித் தூதரகத்துக்கு தமிழ்நாடு அரசு பலத்த பாதுகாப்பு வழங்கியுள்ளது.

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்படுவதைக் கண்டித்து தமிழக அரசியல் கட்சிகள் சென்னையிலுள்ள இலங்கைத் தூதரகத்தை மூடவேண்டும் என எச்சரித்துள்ளன. ஆனால் இந்திய மீனவர்களை தனது கடற்படையினர் தாக்கவில்லை என்கிறது இலங்கை. (சி)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 15

அராலி சரஸ்வதி மகா வித்தியாலயத்தின் வருடாந்தப் பரிசளிப்பு விழா நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனும் சிறப்பு விருந்தினராகச் சங்கானை கோட்டக்கல்விப் பணிப்பாளர் துரை எங்கரசும் கலந்து கொள்வர்.

நினைவுப் பேருரையை யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி கல்வியியலாளர் திருமதி சுபாதினி தயாபரன் நிகழ்த்துவார். (50-201)


## ஒன்றிணைப்புக் குழுக் கூட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 15

இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்ப்பாணப் பிராந்திய அலுவலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சிவில் சமூகங்களின் ஒன்றிணைப்புக் கூட்டம் நாளை மறுதினம் 17 ஆம் திகதி இடம் பெறாது என இணைப்பதிகாரி கே.கனகராஜ் அறிவித்துள்ளார்.

இந்தக் கூட்டம் பிறிதொரு திகதியில் இடம்பெறும் எனவும் ஒத்திவைக்கப்பட்ட திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (50-14)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



பிறப்பு: 12 ★ 10 ★ 1926
இறப்பு: 15 ★ 06 ★ 2010

### அமரர் முத்துலிங்கம் அருந்தவராசா
(சக்கடத்தார்)

(ஓய்வுபெற்ற பிரதம லிகிதர், பருத்தித்துறை நீதிமன்றம்)

அன்னாரின் பிரிவுச் செய்திகேட்டு நேரில் வந்து உதவியோருக்கும் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் தந்தி மற்றும் தபால், தொலைபேசிமூலம் ஆறுதல் கூறியோருக்கும் கண்ணீர் அஞ்சலி பிரசுரித்து துயரில் பங்குகொண்டவர்களுக்கும் மேலும் பல வழிகளில் உதவிய உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கொத்திய காடு,
தொண்டைமானாறு. (100605)
உங்கள் நினைவுகளில் என்றும் குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி திரவியம் பூலோகராஜா



அநுராதபுரம், மாவடியைப் பிறப்பிடமாகவும் கல்வியங்காடு, 3ஆம் கட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திரவியம் பூலோகராஜா 11.07.2010 ஞாயிற்றுக்கிழமை காலமனார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணப்பிள்ளை- அன்னமுத்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம்- நாகம்மா தம்பதியரின் மருமகளும் காலஞ் சென்ற வ.செ.பூலோகராஜாவின் (தபாலதிபர்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பாக்கியம், தங்கலட்சுமி, பரமேஸ்வரி மற்றும் தங்கவடிவேல் ஆகியோரின் சகோதரியும் அன்னபாக்கியம், ராசையா, பொன்னையா ஆகியோரின் மைத்துனியும் புஸ்பராணி (மல்லாவி), காலஞ் சென்ற தனபாலசிங்கம் மற்றும் சந்திரமதி(கண்டி), சிவனேசராஜா (ராஜா-சுவீடன்), யோகராணி, விஷ்ணுதாசன் (ரகு-ஆஸ்திரேலியா), சந்திரகாந்தா (ரதி- சமுர்த்தி உத்தியோகத்தர், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயும் சிவயோகநாதன், தர்மபுத்திரி, காலஞ் சென்ற சுந்தரேஸ்வரன் (பிரதம பாதுகாவலர், புகையிரதப் பகுதி) மற்றும் வனிதாரோகினி (சுவீடன்), தர்மேந்திரன், கமலாதேவி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமியும் சுதாகரன், சுகேஷினி, சுஜிகரன், சுஜாசினி, சுதர்சினி, சுலோஜினி, நிவேதினி, கிருஷாந்தி, துர்ஷாந்தினி, யாழினி, Dr.சுமதி (மினசோட்டா, பல்கலைக்கழகம், அமெரிக்கா), லவர்ணியா, சஜீவனா (சுவீடன்), ஹரிஹரசுதா, திவ்வியராஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் வசிகரன், சந்திரிக்கா, சிந்துஜா, வசிந்திரன், சுதர்ஷிகா, மனோஜ், தனோஜிகா, ஹாணுசா, சுலக்ஷன், மதிகரன், அசோஜினி, சந்தோஷ், ஜானுயன், அபிலக்ஷன், அப்சரா, ஆரபி ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(15.07.2010) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10 மணிக்கு செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

3ஆம் கட்டை,
கல்வியங்காடு. (100625)
தகவல்: சந்திரகாந்தா (மகள்- சந்திரா- சமுர்த்தி உத்தியோகத்தர், யாழ்ப்பாணம்).

# விவாத மேடை

# எமது இளையோரிடத்தே பெருகியுள்ள 'பேஸ்புக்' பாவனை

**சரியானது**

எந்தவொரு விடயத்திலும் எதிர்க்கருத்து காணப்பட்ட போதிலும் நாம் அன்னப் பறவை போன்று நன்மையை மட்டுமே எடுத்துக் கொள்ளவேண்டும்.


அதுமட்டுமல்லாது பேஸ்புக் பாவனையானது தொலைந்த உறவுகளை சேர்த்து வைத்தும் கூட உள்ளது.

இதனால் நாம் சிறந்த நண்பர்களையும் இந்த நண்பர்கள் மூலம் நண்பர்களின் நண்பர்களையும் நாம் எமக்குள் அறிமுகப்படுத்திக்கொள்ள முடியும். ஊர் ஒன்று பட்டால் உண்டு வாழ்வு என்பது போல இப்படிச் சிறந்த பலதரப்பட்ட நண்பர்கள் மூலம் எமக்குத் தெரிந்த விடயங்களையும் அவர்களுக்குத் தெரிந்த விடயங்களையும் பகிர்ந்துகொள்ள முடியும்.

எனவே பேஸ்புக் பாவணையானது சிறந்ததே என்பது எனது கருத்து.

**திவ்யா,** மருதனார்மடம்

**தவறானது**



''கணனி இல்லாத உலகம்'' எனும் அளவுக்கு கணனியின் பாவனை மிக அதிகரித்த ஒன்று. குறிப்பாக இன்றைய இளம் சமூகத்தினரிடையே ''பேஸ்புக்'' பாவனை அதிகரித்துக் காணப்படுகின்றது. என்னுடைய கருத்துப்படி ''பேஸ்புக்'' பாவனை தவறானது.

இன்றைய இளம் சமுதாயத்தை தவறான வழிகளில் இட்டுச் செல்லும் காரணிகளில் ''பேஸ்புக்'' பாவனையும் ஒன்றாகிறது. இதன் பாவனையால் எம்மையறியாமலே நாம் பலவழிகளில் எமக்கு ஆபத்தை வரவழைத்துக் கொள்கின்றோம். இதில் நாம் எமக்கு அறிமுகம் இல்லாத ஒருவருடனும் தொடர்பினை மேற்கொள்கின்றோம். இதன் மூலம் ஒருவருக்கு ஒருவர் நிழற் படங்கள், தகவல்கள் பரிமாறிக் கொள்ளப்படுகின்றது. இது வாழ்க்கையில் பல பிரச்சினைகளையும் பல ஆபத்துக்களையும் தோற்றுவிக்கக்கூடும். சில வேளைகளில் ஒருவர் போலியான தகவல்களையும் எமக்கு அனுப்பக்கூடும். இதனால் நாம் ஏமாற்றப்படுவதற்கான சந்தர்ப்பங்கள் அதிகமாகின்றன. இன்று கல்வி கற்கும் மாணவர்கள் பலர் படிக்கும் நேரத்தினை விட ''பேஸ்புக்'' உடனேயே அதிக நேரம் செலவிடுகின்றனர். இது கல்விச் சமூகத்தை சீரழிக்கும் ஒரு செயல். முதலில் எமக்கு அருகில் இருக்கும் அறிமுகமான ஒருவரிடம் அல்லது பலரிடம் நட்பினை வளர்த்துக் கொள்ளுங்கள்.

ஆபாசத்திற்கும் அடித்தளம் இடும் இவற்றைத் தவிர்ப்பது நல்லது. கண்கள் இருப்பதற்காக எல்லாவற்றையும் பார்க்கக்கூடாது. எனவே ''பேஸ்புக்'' பாவனையை தவிர்த்து நல்ல வழியில் வாழ்வோம்.

**ஜீவனா,** றக்கா வீதி.

## விவாதமேடை


எமது இளையோரிடத்தே பெருகியுள்ள ''பேஸ்புக் (Facebook) பாவனை.

சரியானது | தவறானது

*உதயனின் இப்புது முயற்சிக்கு இளைய சமூகத்தின் விவாதத் திறனுக்கு களம் அமைத்துக் கொடுப்பதற்காக ஆரம்பிக்கப்படுகின்றது. எனவே எமது இளையோரிடத்தே பெருகியுள்ள ''பேஸ்புக் ( Facebook) பாவனை சரியானதா? தவறானதா? என்ற விவாதத்துக்கு உங்கள் கருத்துக்களை முன் வைத்து மோதுங்கள். வெற்றியைத் தீர்மானிப்பதும் நீங்களே. வெற்றிபெறும் என நீங்கள் கருதும் அணிக்கு வாக்களிக்க முடியும். வெற்றி பெறும் அணிக்கு வாக்களித்தவர்களில் ஐவர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்குப் பரிசில் வழங்கப்படும். அத்துடன் சிறந்த விவாதம் அனுப்புவோரில் ஒருவர் தெரிவு செய்யப்பட்டுப் பரிசில் வழங்கப்படும்.*

# இளவல்கள் வட்டம்

## வசந்தராவிடம் கேளுங்க...



சித்தன்

Cat என்பது அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர்கள் (சேட்டிபைட் எக்கவுண்ணிங் ரெக்னீசியன்ஸ்) இதை 16 வயது வந்த எவரும் கற்க முடியும். acca ஐ தெரிந்த பின் இதைத் தொடருவம் என்று தொடங்கியவள் acca வந்து 21 வயது வந்த எவரும்....

இதைத்தானே அண்டைக்கும் சொன்னீங்கள் என்ற போது ஆமால்ல சரி சரி acca இல் அடிப்படை மட்டம் தொழில்முறை மட்டம் என இரண்டு மட்டம் உண்டு. அடிப்படை மட்டத்தை அறிவு (Knowledge), திறமை என இரண்டு பிரிவாகப் பிரித்துப் f1 - f9 வரை ஒன்பது பாடங்கள் உண்டு. அறிவு மட்டத்தில் காணப்படும் மூன்று பாடங்களும் கட்டாயமாகவும் ஏனைய ஆறு பாடங்களும்...... (தொடரும்)

## இளவல்கள் வட்டம் வாக்குச்சீட்டு

எமது இளையோரிடத்தே பெருகியுள்ள
''பேஸ்புக்''(Facebook)) பாவனை

சரியானது ☐ தவறானது ☐

பெயர் :-..........
முகவரி :..........
:-..........
அடையாள அட்டை இல:..........

உங்கள் தீர்ப்புகளை 29.07.2010 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். இவ் வாக்குச் சீட்டுடன் அனுப்பப்படும் வாக்குகள் மாத்திரமே ஏற்றுக் கொள்ளப்படும்.

## புதுமைப் பெண்

தேயிலைத் தளிரை - தினம்
தீண்டும் கரங்கள் - இனி
தீமைகளைப் பொசுக்கும்

வாய்மை பெருக்கி - அறம்
வளரப் பணித்து - உயிர்
வாழ வழி காட்டும் !

வாலிற் கொடுமை - என
வழங்கும் வசனம்- தனை
செந்தெல்தனை வளர்க்கும்!

குணசேகரம் சிந்துஜன்,
கொழும்புத்துறை.

கவிதை எழுதி அனுப்பும் வாசகர்களில் 3 மாதத்திற்கு ஒருமுறை ஒரு சிறந்த கவிதை தேர்வு செய்யப்பட்டுப் பரிசில் வழங்கப்படும்.

# வாழ்க்கைக்கு நலம் தருபவர்கள் நல்ல நண்பர்களே!

" அன்பு ஈனும் ஆர்வமுடைமை அது ஈனும் நண்பென்னும்நாடாச்சிறப்பு" என்பது போல மலர்வது நட்பு. " கூலிக்கு மாரடிப்பது" நட்பாகி விடாது.

வாழ்க்கை என்றால் நிலவும் இருட்டும் மாறி மாறி வரத்தான் செய்யும் சுகமும் துக்கமும் கலந்ததே வாழ்க்கை. நிலாக்காலத்தில் உடனிருந்தும் இருண்ட காலம் வரும் போது விலகுபவர்கள் நண்பர்கள் அன்று.

" அற்ற குளத்தில் அறுநீர் பறவை போல
உற்றுழித் தீர்வார் உறவு" எனும் ஔவைப் பாட்டியின் மூதுரை ஊடே அறிந்து கொள்ளலாம்.

அதாவது செழிப்பான காலத்தில் சேர்ந்தும் வறுமையான காலத்தில் நீக்கி இருப்பவர்களின் உறவு நல்ல உறவு அன்று-

(தொடரும்)

**அபி, யாழ்ப்பாணம்.**



## இளைஞர், யுவதிகளே!

*உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும், பிரச்சினைகள் பற்றிப் பேசவும், தேடல்களுக்குத் தீனி போடவும் '**இளவல்கள் வட்டம்**' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இப்பகுதிக்கான உங்கள் படைப்புகளையும், ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.*

பெயர் :-..........
முகவரி :-..........
:-..........
.......... ..........
திகதி கையொப்பம்

'இளவல்கள் வட்டம்',
'உதயன்',
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**பெரியோர்களையும் வாழ வைத்த சொல் அம்புகள்**

நம்பிக்கை என்பது கும்மிருட்டில் குதிப்பது அல்ல இருட்டிலிருந்து வெளிச்சத்துக்கு இறக்கை விரிப்பது.

**- டேவி- றீரட் -**
பாரி, யாழ்ப்பாணம்.




## அன்றைய செய்திகள், தகவல்கள் இங்கே பதிவுகளாக...

**உதயன்**
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

01.12.1992
* மன்னாரில் இராணுவம் கைப்பற்றிய பிரதேசத்தை தொடர்ந்தும் கட்டுப் பாட்டில் வைத்திருக்க மறுப்புத் தெரிவித்த படை உயர் அதிகாரி பொறுப்புக் களில் இருந்து நீக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிப்பு.
* தமிழ்க் குழுக்களும், தமிழ்க் கட்சிகளும், முஸ்லிம் கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட்டால் இனப்பிரச்சினைக்கு நல்லதொரு தீர்வை எட்ட இயலும் என கொழும்பு மாநகர பிரதி மேயர் கணேசலிங்கம் தெரிவிப்பு.

02.12.1992
* பருத்தித்துறை துறைமுக இறங்கு துறையின் ஒருபகுதி தற்பொழுது பெய்து வரும் மழை காரணமாக கடலுடன் அள்ளுண்டு சென்றதால் கப்பலில் இருந்து பொருள்களை இறக்கும் பணி தாமதம் அடைவதாகத் தெரிவிப்பு.
* சிங்கள இளைஞர்களை படையில் செரும்படி கூட்டுப்படைத் தளகர்த்தர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்க நேரடியாக சிங்கள இளைஞர்களிடம் வேண்டுகோள் விடுத்து வருவதாகத் தெரிவிப்பு.

03.12.1992
* விடுதலைப் புலிகள், எப்போதும், எங்கேயும் தாம் விரும்பும் சமயத்தில் தாக்குதல் நடத்த வல்லவர்கள் என்பது தொள்ளத் தெளிவாகியுள்ளதாக அரச சார்புப் பத்திரிகை 'ஒப்சேவர்' தெரிவிப்பு.
* அராலித் துறையில் இடம் பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் குறித்து ஆராய சர்வதேச விசாரணைக்குழு வொன்றை நியமிக்க இலங்கை அரசு முடிவு செய்திருப்பதாகத் தெரிவிப்பு.

04.12.1992
* இலங்கை இராணுவத்துக்குள் ஏற்பட இருந்த கிளர்ச்சியொன்று தவிர்க்கப் பட்டிருப்பதாகத் அரசியல் அவதானிகள் தெரிவிப்பு.
* சார்க் நாடுகளின் தலைவர்கள் கலந்து கொள்ளும் உச்சிமாநாடு இம்மாதம் நடுப்பகுதியில் பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் நடைபெறும் எனத் தெரிவிப்பு.

05.12.1992
* முன்னாள் நிதியமைச்சர் றொனி டி மெல்லுக்கு எதிராக தொடுக்கப் பட்டிருந்த வழக்கு நேற்று அரசினால் வாபஸ் பெறப்பட்டதையடுத்து உயர்நீதிமன்றம் வழக்கைத் தள்ளுபடி செய்து தீர்ப்பளித்துள்ளதாகத் தெரிவிப்பு.
* இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் நாம் இன்னும் எவ்வளவோ தொலைவில் இருக்கிறோம் என இடதுசாரித் தலைவர் வாசுதேவ நாயணக்கார தெரிவிப்பு.

06.12.1992
* கொழும்பு வந்துள்ள கன்ரபரி அதிமேற்றிராணியார் இனப்பிரச்சினைத் தீர்வு குறித்து ஜனாதிபதி பிரேமதாஸவுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகத் தெரி விப்பு.
* பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் இடம்பெறவுள்ள சார்க் மாநாட்டின் போது இந்தியப் பிரதமரும் ஜனாதிபதி பிரேமதாஸவும் இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வு குறித்து பேசவுள்ளதாகத் தெரிவிப்பு.

07.12.1992
* கிழக்கில் - மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை ஆகிய பகுதிகளில் இலங்கைப் படையினர் இராணுவ நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிப்பு.
* வடக்கு - கிழக்கில் போர் நிறுத்தம் ஒன்றை மேற்கொள்ள அரசு முன் வருமானால் அரசுடன் சமாதானப் பேச்சுக்களை நடத்த நாம் தயாராகவுள்ளோம் என விடுதலைப் புலிகள் தரப்புத் தெரிவிப்பு.

08.12.1992
* இந்தியாவில், அயோத்தியில் பாபரி மசூதி தீவிரவாதிகளால் இடிக்கப்பட்டதைத் தொடர்ந்து வெடித்த இந்து முஸ்லிம் களவரங்களில் 250 இற்கும் மேற்பட்டோர் பலியானதாகத் தெரிவிப்பு.
* கொழும்பு மாநகர நீர்விநியோகத்தை சீர்குலைக்கும் நோக்கில் புலிகள் இயக்கம் வகுத்த திட்டம் இரகசியப் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரிவிப்பு.

09.12.1992
* ஏனைய பகுதிகளில் இருந்து துண்டிக்கப்பட்ட யாழ். குடாநாட்டுக்கான போக்குவரத்துப் பின்னடைவை சீர்செய்யும் முயற்சியில் ஐ.நா அதிகாரிகள் ஆர்வம் காட்டிச் செயற்படுவதாக அறிவிப்பு.
* அரசியல் தீர்வு காண்பதற்கு முன்னர் புலிகளை இராணுவ ரீதியில் தோற்கடிக்க முயன்றால் யுத்தம் ஒருபோதும் முடிவுக்கு வரப்போவது இல்லை என 'சண்டே ஒப்சேவர்' பத்திரிகைவிமர்சிப்பு.

10.12.1992
* வடக்கு - கிழக்கு போரில் பயன்படுத்துவதற்காக இலங்கை விமானப் படை ரஷ்யாவில் இருந்து மிக் ரக ஹெலிக் கொப்டர்களை வாங்கத்தீர்மானித்துள்ள தாகத் தெரிவிப்பு.
* யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருந்த அகதிகளுக்கான ஐ.நா தூதரக உயர் அதிகாரிக்கும் விடுதலைப் புலிகள் தரப்பினருக்கும் இடையே இடம் பெற்ற பேச்சுவார்த்தை வெற்றியளிக்கவில்லை எனத் தெரிவிப்பு.

11.12.1992
* நேற்று கொழும்பில் இடம்பெற்ற மனித உரிமைகள் தினக் கூட்டத்தை நடத்திய ஏற்பாட்டாளர்கள் மீது பொலிஸார் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் மேற்கொண்டதாக விமர்சிப்பு.
* இலங்கை இனப்பிரச்சினைக்குத் தேரிவுக்குழு மூலம் மட்டுமே தீர்வை எட்ட முடியும் என அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க செய்தியாளர் மாநாட்டில் தெரிவிப்பு.

12.12.1992
* இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தேர்வுக்குழுவின் முயற்சிகள் பலனளிக்கத் தவறிவருவதாக விமர்சிப்பு.
* கல்முனையில் கண்டுபிடிக்கப்பட்ட 40 கிலோ எடையுள்ள குண்டு கொமாண்டோப் பொலிஸாரினால் செயல் இழக்கச் செய்யப்பட்டதாகத் தெரிவிப்பு.

13.12.1992
* இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு மாகாண மட்டத்தில் மட்டுமே அதிகாரப் பகிர்வு மேற்கொள்ளப்பட வேண்டும் என ஐ.தே கட்சியும் சுதந்திரக் கட்சியும் முடிவு செய்திருப்பதாகத் தெரிவிப்பு.
* தற்பொழுது நடைபெறும் யுத்தத்தை நிறுத்தி அரசியல் தீர்வை வலியுறுத்த வெகுஜன இயக்கம் ஒன்றை முன்னெடுக்க உள்ளதாகத் புதிய ஜனநாயகக் கட்சி தெரிவிப்பு.

14.12.1992
* மட்டக்களப்பு மாவட்டத்தின் பகுதியில் இராணுவத்தினர் பெரும் இராணுவ நடவடிக்கையொன்றினை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிப்பு.
* நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் பதவிக் காலம் ஜனாதிபதித் தேர்தல் நடக்கும் வரை நீடிக்கப்படலாம் என பி.பி.சி வானொலி தெரிவிப்பு.

15.12.1992
* இலங்கைக்குச் சமஷ்டி அரசமைப்பு கூடாது எனவும், தற்காலிகமாக இணைக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாணங்களைத் தனித்தனியாகப் பிரிக்க வேண்டும் எனவும் நாடாளுமன்றத் தெரிவுக் குழு இரகசிய வாக்கெடுப்பு மூலம் முடிவு செய்துள்ளதாகத் தெரிவிப்பு.
* நாடாளுமன்றத் தெரிவிக்குழு தமிழர்களைக் காட்டிக் கொடுக்க துரோ கக் குழுவாக மாறிவிட்டது என 6 தமிழ்க் கட்சிகள் கூட்டாக அறிக்கை வெளியிட்டுள்ளதாகத் தெரிவிப்பு.



# சமய சந்நிதிகளில்

வலி. வடக்கு, ஜூலை 15

தெல்லிப்பழை, அளவெட்டி கணேஸ்வரம் குருக்கள் கிணற்றடி விநாயகர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து நாள்கள் உற்சவம் நடைபெறும்.

எதிர்வரும் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சப்பறத் திருவிழாவும் 24 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (204-86)

* * *

கொழும்புத்துறை, ஜூலை 15

கோண்டாவில் கிழக்கு அற்புதநர்த்தன விநாயகர் ஆலயக் கும்பாபிஷேக விழா இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணி இற்கு நடைபெறவுள்ளது.

சிவஸ்ரீ சிவ கதிர்காமநாதக் குருக்கள் தலைமையில் நடைபெறும் கும்பாபிஷேக விழாவில் அருளாசி உரைகளை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள், சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம், செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகன், நல்லூர் பிரதேச செயலர் செந்தில் நந்தனன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

இன்று முதல் அடுத்தமாதம் 7 ஆம் திகதி வரை மண்டலாபிஷேகம் நடைபெற்று 1008 சங்காபிஷேகமும் நடைபெறவுள்ளதாக ஆலயப் பரிபாலசபையினர் தெரிவித்துள்ளனர். (204-135)

* * *

கொழும்புத்துறை, ஜூலை 15

யாழ்.கோட்டை முனீஸ்வரன் ஆலய மணவாளக்கோல அலங்கார உற்சவம் நடைபெற்று வருகின்றது.

தினமும் பி.ப.3 மணிக்கு ஸ்நபனா அபிஷேகமும் 4.30 மணிக்கு வசந்த மண்டபப்பூசையும் நடைபெற்றுப் பெருமானின் வீதியுலா இடம்பெறும்.

அடுத்தமாதம் 5ஆம் திகதி காலை 9 மணிக்கு சங்காபிஷேகமும் 12 மணிக்கு ரதபவனியும் நடைபெறும். (204-135)

* * *

பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்தின் கும்பாபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.20 மணிக்கு நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 7.30 மணிக்கு விநாயகர் வழிபாடு, யாகப்பூசை என்பன நடைபெறும். (294)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 15

சங்கானை, செங்கற்படை மகாதேவப் பிள்ளையார் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நாளை வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 24ஆம் திகதி சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (204-29)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 15

வட்டு.கிழக்கு முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா இன்று வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 21ஆம் திகதி புதன்கிழமை வேட்டைத் திருவிழாவும் இடம்பெறும். (204-29)

# அரசு-ஐ.தே.க. பேச்சு நடந்தாலும் எதிர்ப்புப் போராட்டம் தொடரும்

கொழும்பு, ஜூலை 15

அரசுக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையிலான பேச்சுகள் தொடர்ந்து இடம்பெற ஏற்பாடுகள் செய்யப்பட்ட போதிலும் அரசின் மக்கள் விரோத செயற்பாடுகளுக்கெதிரான ஐக்கிய தேசியக் கட்சியின் நாடளாவிய போராட்டம் தொடரும் என்று ஐக்கிய தேசியக் கட்சி நேற்று முன்தினம் தெரிவித்தது.

இந்தப் போராட்டங்களுக்குள் ஜெனரல் சரத்பொன்சேகாவை விடுதலை செய்யவேண்டும் என்ற கோரிக்கையும் உள்வாங்கப்படும் என்றும் அக்கட்சி தெரிவித்துள்ளது.

நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையை இல்லாதொழித்தல் மற்றும் அத்தியாவசியப் பொருள்களின் விலையைக் குறைத்தல் போன்ற கோரிக்கைகளை முன்வைத்து மேற்கொள்ளப்படும் எமது போராட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என்று ஐ.தே.கட்சியின் பொதுச் செயலாளரும் எம்.பியுமான திஸ்ஸ அத்தநாயக்க நேற்றுமுன்தினம் கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அரசியல் கைதியாகப்பிடித்து வைக்கப்பட்டிருக்கும் ஜெனரல் சரத்பொன்சேகாவை விடுதலை செய்ய அரசு இனி யாவது நடவடிக்கை எடுக்கவேண்டும். - என்றும் கூறினார். (அ-சி)

## சம்பள உயர்வுகோரி இன்று மறியல்

கொழும்பு, ஜூலை 15

ஜனாதிபதித் தேர்தலின்போது அறிவித்த 2,500 ரூபா சம்பள உயர்வை உடனடியாக வழங்குமாறுகோரி ஐக்கிய தொழிலாளர் சம்மேளனம் இன்று வியாழக்கிழமை இரத்மலானையில் மறியல் போராட்டம் நடத்தவுள்ளது.

2,500 ரூபா சம்பள உயர்வுடன் வாழ்க்கைச் செலவுப் புள்ளிக்கு 180 ரூபா வழங்கும் வகையில் வர்த்தமானி அறிவித்தலை வெளியிடும்படி கோரியும் இந்த மறியல் போராட்டம் நடத்தப்படவுள்ளது என சம்மேளனத்தின் செயலாளர் சரணபால சில்வா தெரிவித்தார்.

இரத்மலானை பெலெக்கடே சந்தியில் இன்று மாலை 5 மணிக்கு இந்த மறியல் போராட்டம் நடைபெறும். (சி)



அரசின் வரவு-செலவுத் திட்டத்திற்கு ஆட்சேபனை தெரிவித்து, கொழும்பில் நேற்று முன்தினம் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் மக்கள் ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றபோது...

# ஊற்றுப்புலம், கோணாவில் மீள்குடியமர்த்தப்பட்டவர்கள் அடிப்படை வசதிகள் இன்றி மரங்களுக்கு கீழ் வாழ்கின்றனர்

## கூட்டமைப்பு எம்.பி. சிறிதரன் கூறுகிறார்

கிளிநொச்சி , ஜூலை 15

கடந்த 2 வாரங்களுக்கு முன் மீள் குடியமர்த்தப்பட்ட ஊற்றுப்புலம், கோணாவில், யுனியங்குளம் ஆகிய பிரதேச மக்கள் அடிப்படை வசதிகள் இன்றி தொடர்ந்து மரங்களுக்குக் கீழே வாழ்க்கையைத் நடந்துகின்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள ஊற்றுப்புலம் மற்றும் கோணாவில் பாடசாலைகளின் நிலைமை மிக மோசமாக உள்ளதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் வருகையை ஒட்டி கிளிநொச்சியில் கோலாகலமான ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் நிலையில் குறித்த பாடசாலைகள் மிகவும் மோசமான நிலையில் மீள ஆரம்பித்திருக்கின்றன என்றும் அவர் குறிப்பிட்டார்.

அண்மையில் மீள்குடியேற்றப்பட்ட ஊற்றுப்புலம், கோணாவில், யுனியங்குளம் முதலிய பிரதேசங்களுக்குச் சென்று மக்களைப் பார்வையிட்ட பின்னரே நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் இவ்வாறு தெரிவித்தார்.

அண்மையில் மீள்குடியேற்றப்பட்ட குறித்த பிரதேசங்களில் குடியமர்த்தப்பட்ட மக்களுக்கு இதுவரையில் தரப்பாள் கூட வழங்கவில்லை. 2 வாரங்களாக மீள் குடியேற்றப்பட்ட 18 கிராமங்களில் தரப்பாள் வழங்கவில்லை.அத்தோடு கடந்த 2 மாதங்களுக்கு மேலாக மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கு இன்னமும் தகரங்கள் வழங்கப்படவில்லை. மக்கள் மரங்களுக்குக் கீழாக குடியிருத்தப்பட்டுள்ளார்கள். கட்டப்பட்ட தரப்பாள்களையும் அண்மையில் பெய்த காற்றுடன் கூடிய மழை பெயர்த்து வீசியதாக மக்கள் தெரிவித்தார்கள்.

அங்குள்ள பாடசாலைகளின் நிலைமையோ பார்க்க முடியாதளவு மோசமான நிலையில் உள்ளது. மாணவர்கள் மேசை, கதிரை போன்ற தளபாடங்கள் இல்லாமல் தரையில் இருந்தும் மரங்களுக்குக் கீழாகவும் படித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த மாணவர்களின் நிலைமையை உடனடியாகக் கவனத்தில் எடுக்க வேண்டும். அத்தோடு மக்களுக்கு வழங்கப்படாத தரப்பாள் மற்றும் தகரங்களை வழங்க உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். மிகவும் வறிய அந்த மக்களின் விடயத்திலும் பின்தங்கிய பிரதேச பாடசாலைகளின் நிலைமைகளையும் அவசியமாக கவனத்தில் எடுக்க வேண்டும் என்றும் உரியவர்களுக்கு இந்த விடயங்கள் தொடர்பில் தெரிவிக்கப்படும் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் மேலும் தெரிவித்தார். (1)

# இயக்கச்சி- ஆனையிறவு இடையிலான ஏ-9 வீதி கடுமையாகச் சேதம்

கிளிநொச்சி , ஜூலை 15

இயக்கச்சிக்கும் ஆனையிறவுக்கும் இடையிலான ஏ-9 வீதி மோசமாகச் சேதமடைந்து காணப்படுகின்றது.

இந்த வீதியின் இரு மருங்கிலும் சேதங்கள், உடைவுகள் ஏற்பட்டுள்ளதால் போக்குவரத்தில் ஈடுபடும் கனரக வாகனச்சாரதிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இந்தச் சேதத்தால் வீதியும் ஒடுங்கிக் காணப்படுகின்றது.

வீதி ஒடுங்கியுள்ளதால் வாகனங்கள் ஒன்றை ஒன்று விலத்தமுடியாமல் பெரும் சிரமப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (50-224)




# தர்மபுரம் மகா வித்தியாலயத்துக்கு புதிய வகுப்பறைக் கட்டடம்

கிளிநொச்சி , ஜூலை 15

கிளிநொச்சி, தர்மபுரம் மத்திய மகா வித்தியாலயத்தின் தேவைக்கென புதிய வகுப்பறைக் கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்த வித்தியாலயத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் கற்றல் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவதால் இடநெருக்கடி காணப்படுகின்றது.

ஏற்கனவே கொட்டகைகள் அமைக்கப்பட்டு கற்றல் செயற்பாடுகள் எதுவித இடையூறும் இன்றி நடைபெற்று வருகின்றன.

தற்போது மேலதிகமாக வகுப்பறைக் கட்டடம் ஒன்றும் புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. (50-224)

# போதிய அடிப்படை வசதிகளின்றி அல்லாடுகிறது பூநகரி நல்லூர் ம.வி.

பூநகரி , ஜூலை 15

பூநகரி நல்லூர் மகா வித்தியாலயம் மீண்டும் இயங்க ஆரம்பித்தபோதும் போதிய அடிப்படை வசதிகள் இல்லை என அந்த வித்தியாலய மாணவர்கள் தெரிவித்தனர்.

யாழ். விவசாயப் பண்ணையைப் பார்வையிடுவதற்காக யாழ்ப்பாணம் சென்றிருந்த மாணவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

யுத்தம் முடிவடைந்து மீண்டும் 2010 ஜனவரி மாதம் முதல் 165 மாணவர் களுக்கு 18 ஆசிரியர்கள் என்ற நிலையில் கல்விச் செயற்பாடுகள் தொடர்கின்றன.

இருப்பினும் போதிய தளபாடங்கள், ஆய்வுகூட வசதிகள், கட்டட வசதிகள் அற்ற நிலையில் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றதாக மேலும் அவர்கள் கூறினர்.

மேலும் பாடசாலை மாணவர்களும், ஆசிரியர்களும் உளநிலையில் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் யுனி செவ் சிறிதளவு தளபாடங்கள் தந்து உதவியுள்ளது எனவும் தெரிவித்தனர்.

தங்களைக் கவனத்தில் எடுத்து தமக்கான வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு மாணவர்கள் கேட்கின்றனர். (1-பி-கே)

# மன்னார் வடிகாலமைப்புத் திட்டம் திடீரென இடைநிறுத்தப்பட்டது

மன்னார் , ஜூலை 15

சுமார் 63 கோடி ரூபா ஒதுக்கீட்டில் மன்னார் நகரில் அமைக்கப்பட்டு வந்த நகர வடிகால் அமைப்பு வேலைகள் திடீரென நிறுத்தப்பட்டுள்ளதால், நகர மக்கள் இம்முறையும் வெள்ள அபாயத்திற்கு உள்ளாக வேண்டியநிலை ஏற்பட்டுள்ளது.

மழை வந்தால் நீரில் மூழ்கும் மன்னாரைக் காப்பாற்ற 'யுனிசெவ்' நிறுவனம் சுமார் 63 கோடி ரூபாய்களை வழங்கிப் பாரிய வடிகால் அமைப்பு வேலைகளைச் சென்ற ஆண்டு ஆரம்பித்து வைத்தது. சுமார் 12வலயங்களாக இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு இவ்வாண்டு இறுதியில் முடிவுறத் தீர்மானிக்கப்பட்டது.

ஆயினும் இரு மாதங்களுக்கு முன்னர் இத்திட்டம் கைவிடப்பட்டு தோண்டிய வடிகால்கள், மூடப்படாமல் திறந்த நிலையிலுள்ளதோடு அதில் தேங்கியுள்ள சாக்கடை நீரினால் மன்னாரில் டெங்கு அபாயமும் அதிகரித்துள்ளது.

இந்த நிலையில் இத்திட்டம் கைவிடப் பட்டமைக்கான சூத்திரதாரிகள் யார் என்பதில் மன்னார் நகர மக்கள் சம்பந்தப்பட்ட திணைக்கள அரச உயர் அதிகாரிகள் சிலரைக் காரணம் காட்டுகின்றனர். (50-80)

# சர்வதேச வழிபாட்டுத் தலங்களை வன்னியில் மேம்படுத்தத்திட்டம்

## பிரதமர் ஆரம்பித்து வைத்தார்

ஓமந்தை , ஜூலை 15

அனைத்து மதங்களும் சகோதரத்துவத்தை வலியுறுத்துவதால் நாம் எவரையும் எதிரியாகப் பார்க்கவோ, எவருடனும் குரோதம் பாராட்டவோ கூடாது என்று பிரதமர் டி.எம் ஜயரட்ண தெரிவித்தார்.

சர்வ மத விழுமியங்களையும் நாட்டின் பொருளாதாரத்தையும் சமகாலத்தில் மேம்படுத்துவதே எமது நோக்கம் எனவும் அவர் கூறினார்.

ஓமந்தை, பரண் நாட்டகல் கிராமத்தில் அரசாங்க செலவில் நிர்மாணிக்கப்படவிருக்கும் அடைக்கலமாதா தேவாலயத்திற்கு அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இந் நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பிரதமர் ஜயரட்ண தொடர்ந்தும் உரையாற்றுகையில் கூறியவை வருமாறு:

கடந்த 30 வருடங்களாக நீங்கள் அனுபவித்த துன்பங்களையும் கஷ்டங்களையும் நாமறிவோம். பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டதன் பயனாக அச்சம், பீதியின்றி சுதந்திரமாக நடமாட முடிகின்றது. மஹிந்த சிந்தனை வேலைத்திட்டத்தின் ஊடாக நாட்டில்சமய விழுமியங்களையும், பொருளாதாரத்தையும் சம காலத்தில் மேம்படுத்துவதே எமது இலக்காகும். இதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறோம்.



அந்த அடிப்படையில்தான் சர்வமத வழிபாட்டுத் தலங்களை மேம்படுத்துவதற்கான தேசிய வேலைத் திட்டமும் ஆரம்பிக் கப்பட்டிருக்கிறது.

எமது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இனவாதமற்றவர். அவர் இந் நாட்டில் வாழும் சகல மக்களையும் ஒரே விதமாகவே பார்க்கின்றார். அவ்வாறே நாமும் செயற்படுகின்றோம்.

நான் எட்டு இந்து ஆலயங்களை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறேன். இதில் மூவாயிரம் அடிகள் உயரமான மலையில் ஒரு இந்துக் கோயில் அமைக்கப்படவிருக்கிறது. எமது பிரதேசங்களில் நாம் தமிழ், முஸ்லிம் மக்களுடன் மிகவும் அன்னியோன்யமாகவும் சந்தோஷமாகவும் வாழ்கின்றோம். அவர்கள் எனக்கு மூன்று தலைமுறையாக வாக்களித்து வருகின்றனர். அதன் பயனாக நான் நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கின்றேன்.

இதேவேளை வடபகுதியைத் துரிதமாகக் கட்டியெழுப்புவதற்குத் தேவையான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கைகளின் பயனாக விரைவில் உங்கள் வாழ்வில் சுபீட்சம் ஏற்படும். அதனால் பொருளாதார ரீதியில் நாட்டைக் கட்டியெழுப்புவதற்குகாக சகலரும் ஒன்றுப்பட்டுச் செயற்பட முன்வர வேண்டும் என்றார். (1)

# தமிழ் இலக்கிய விழாவும் ஆய்வரங்கும் கிளிநொச்சியில்-ஒக் - 1 முதல் மூன்று நாள்கள்

கிளிநொச்சி , ஜூலை 15

வடக்கு மாகாணசபை கல்விப் பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் தமிழ் இலக்கிய விழாவும் ஆய்வரங்கமும் இம்முறை கிளிநொச்சியில் நடத்தப்படவுள்ளன.

ஒக்ரோபர் முதலாம் திகதி முதல் மூன்று தினங்கள் இந்நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இது தொடர்பாக பண்பாட்டலுவல்கள் அமைச்சுப் பணிப்பாளர் என். ஸ்ரீதேவி விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வருடா வருடம் எமது அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் நடத்தப்பட்டுவரும் மேற்படி விழாவை இவ்வாண்டு ஒக்ரோபர் மாதம் 1,2,3 ஆம் திகதிகளில் கிளிநொச்சி மாவட்டத்தில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ்விழாவில் காலை ஆய்வரங்கும், மாலை கலை நிகழ்வுகளும் இடம் பெறும். இவ்வாண்டு ஆய்வரங்கத்திற்கான கருப்பொருள் "**ஈழத்து இலக்கியத்தில் பெண்கள்**" என்பதாகும். இக்கருப்பொருளின் கீழ் சுமார் 12 ஆய்வாளர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். மூன்று நாள்கள் இடம்பெறவுள்ள இந்த ஆய்வரங்கில் கலந்துகொள்ள விரும்பும் பேராளர்கள் முன் கூட்டியே விண்ணப்பித்தல் வேண்டும்.

கிளிநொச்சி, யாழ்ப்பாண மாவட்டங்களில் இருந்து தலா 50 பேராளர்களையும் வடமாகாணத்தின் ஏனைய மாவட்டங்கள் ஒவ்வொன்றில் இருந்தும் 25 பேராளர்களை அழைப்பது என விழாக்குழு தீர்மானித்துள்ளது.

அவர்களுக்கான போக்குவரத்து, தங்குமிடம் யாவும் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படும். அதில் கலந்து கொண்டு ஆரோக்கியமான கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ள விரும்பும் பேராளர்கள் அவ்வப் பிரதேச கலாசார உத்தியோகத்தர்களிடம் தங்கள் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கலாம். தங்களது விண்ணப்பங்கள் இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன் கிடைக்கப்படுவதை உறுதி செய்தல் வேண்டும் - என்றுள்ளது. (1)

## அபிவிருத்தி அதிர்ஷ்டத்தில் 'இரண்டாம் வாய்ப்பு'

அபிவிருத்தி லொத்தர் எனும் பொழுது பொதுமக்களுக்கு மட்டுமன்றி லொத்தர் கொள்வனவுக்கும் நினைவில் வருவது நித்தம் புதியனவற்றை வழங்குவதுடன் அதிகளவிலான பரிசுகளை அதிகளவிலான நபர்களிடையே வழங்கிடும் நிறுவனம் என்பதனையே. இதனடிப்படையில் இலங்கையில் முதன் முறையாக உடனடி டிக்கெட் மற்றும் சீட்டிழுப்பு லொத்தர்களான சனிக்கிழமை அதிர்ஷ்டம், அபிவிருத்தி அதிர்ஷ்டம், ஜயோதா மற்றும் ஜனஜய ஆகியவற்றை அறிமுகப்படுத்தி அபிவிருத்தி லொத்தர் சபையானது லொத்தர் கொள்வனவாளர்களுக்கு என்றும் நல்ல நண்பனாகத் திகழ்கின்றது.

செவ்வாய்க்கிழமை மற்றும் வெள்ளிக்கிழமைகளில் சந்தைகளில் மக்களின் நம்பிக்கையை வென்று நாளுக்கு நாள் சந்தைப்பங்குகளின் விருத்தியைக் காணும் ''அபிவிருத்தி அதிஷ்டம்'' தன் லொத்தர் மூலம் கொள்வனவாளர்களின் பண யோகத்தை இரு முறை தோற்றுவித்தலானது 16.07.2010ஆம் திகதியிலிருந்து நடைபெறும். அதாவது சீட்டிழுப்புக்காக பயன்படுத்தும் 55 பந்துகளில் 04 பந்துகளும் 12 இலக்கினங்களில் ஒன்றிணையும் தெரிவு செய்து மிகுதியாகும் 51 பந்துகளில் 04ஐயும் எஞ்சிய இலக்கினங்களில் ஒன்றையும் அத்தினத்திலேயே மீண்டும் ஒரு முறை சீட்டிழுப்பின் மூலம் தெரிவுசெய்து பின்வரும் வகையில் வழங்குவதற்கு அபிவிருத்தி லொத்தர் சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

**இரண்டாம் வாய்ப்புப் பரிசுக் கட்டமைப்பு**

51 இலக்கங்களில் 04ஐ தெரிவு செய்வதன்மூலம் 03 இலக்கங்கள் பொருந்தின் ரூ.500/=உம் 51 இலக்கங்களில் 04ஐ தெரிவு செய்வதன் மூலம் 04 இலக்கங்கள் பொருந்தின் ரூ.100,000/=உம் 51 இலக்கங்களில் 04ஐ தெரிவு செய்வதன் மூலம் 04 இலக்கங்களுடன் எஞ்சிய 11 இலக்கினங்களில் ஒன்று பொருந்தின் ரூ.200,000/= இலிருந்து ஆரம்பமாகும் ஜக்பொட் பரிசு. அத்தினத்தில் ஜக்பொட் பரிசுத் தொகை வெல்லப்படாவிடின் ரூ.100,000/=ஐயும் சேர்ந்து ஜக்பொட் பரிசு தொகை முன்கொண்டு செல்லப்படும்.

இப்போட்டியானது ஓர் இனிய அனுபவத்தினைக் கொண்டுவருவதற்கான காரணம் பிரதான ஜக்பொட் பரிசுக்கு மேலதிகமாக மேலும் ஒரு ஜக்பொட் பரிசுத்தொகை காணப்படுவதோடு யாராலும் ஜக்பொட் பரிசுத் தொகை வெல்லப்படாமல் விட்டாலும் அதற்கு மேலும் ரூ.100,000/=உம் சேர்த்து பரிசுத்தொகையினை முன்கொண்டு செல்லுதல்.

இப்புதிய எண்ணக்கருவின் மூலம் லொத்தர் கொள்வனவாளர்களுக்கு புதிய வெற்றி வாய்ப்புக்களை வழங்குவதன் மூலமும் விற்பனையினை அதிகரித்து சபைக்கு இலாபத்தை ஈட்டித்தருவதன் மூலம் ஜனாதிபதி நிதியம் மற்றும் மஹாபொல உயர்கல்வி புலமைப்பரிசில் திட்டம் ஊடாக மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளை மேலும் மெருகூட்டுவதற்கு வாய்ப்பாக அமையும் என அபிவிருத்தி லொத்தர்சபை எதிர்பார்க்கின்றது. ஆதலால் அபிவிருத்தி லொத்தர் சபையானது தனது லொத்தர் கொள்வனவாளர்களுக்கு இப்பரிசுத் திட்டத்தின் மூலம் அதிகம் அதிகமாக வெற்றிவாய்ப்புக்களை பெற்றுக் கொடுக்கின்றது. ஜனாதிபதி நிதியம் ஊடாக தாம் செயற்படுத்தும் சமூக நலச்செயற்பாடுகளுடன் கைகோர்த்துக் கொள்ளுமாறு அபிவிருத்தி லொத்தர் சபை கேட்டுக்கொள்கின்றது.

## AMW அறிமுகப்படுத்தும் புதிய ZEN ESTILO வாகனம்

இலங்கையின் வாகன விற்பனைத்துறையில் ஒரு முன்னோடியாக விளங்கும் AMWநிறுவனத்தினால் சந்தைப்படுத்தப்படும் சுசூக்கி மாருதி வாகன வரிசையில் புதிய படைப்பான 2010 Zen Estilo வாகனத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. எடுப்பான தோற்றமும் முன்னேற்றகரமான தொழில்நுட்ப அம்சங்களும் கொண்ட Zen Estilo வாகனம், வாடிக்கையாளர்களின் மாறிவரும் ரசனைக்கும் வாழ்க்கை முறைகளுக்கும் ஏற்ப செயற்படுவதில் சுசூக்கி மாருதி காட்டும் ஆழ்ந்த அக்கறையைப் பிரதிபலிக்கின்றது. இலங்கை வாடிக்கையாளர்களின் தேவைகளை நிறைவு செய்யக்கூடிய புதிய Zen Estilo வாகனம் எழில் நயமான சிறப்பம்சங்கள், உறுதியான வடிவமைப்பு, கவர்ச்சியான புதிய நிறங்கள் ஆகியவற்றின் ஒருங்கிணைந்த படைப்பாக அமைகின்றது.




முன்னேற்றகரமான தொழில்நுட்ப அம்சங்களைப் பொறுத்தவரையில், Zen Estilo வாகனம் எரிபொருள் பாவனையில் மிகவும் சிக்கனமான 998cck - தொடர் எஞ்ஜினைக் கொண்டுள்ளது. இந்த நவீன என்ஜின் தொழில்நுட்பம் அதிகசக்தி, குறைந்த சத்தமும் அதிர்வும், குறைந்த பாரம் ஆகிய இயல்புகளைத் தருவதால், வாகனத்தின் எரிபொருள் பாவனைத்திறனை அதிகரிக்கவும் புகை வெளியேற்றத்தைக் குறைக்கவும் உதவுகின்றது. இந்திய வாகன ஆராய்ச்சிச் சங்கத்தின் (ARAI) பரிசோதனைப் பிரகாரம் Zen Estilo ஒரு லீற்றர் எரிபொருளில் 18.2 கிலோ மீற்றர் ஓடும்.

Zen Estilo வாகனம் மிகவும் பாதுகாப்பானது, சௌகரியமானது, எழிலான தோற்றம் கொண்டது. புதிய அமைப்பிலான முன்விளக்குகள், உறுதியான முன்புற மற்றும் பின்புற பம்பர்கள், செதுக்கப் பட்ட சுற்றுப்புறம் கொண்ட மூடுபனி விளக்கு, எழிலான கூரை வடிவமைப்பு, டிஜிற் றல் எரிபொருள் அளவு காட்டி, பல் தொகுதிச் செயற்பாட் டுக்காட்சி என்பன உள்ளிட்ட முற்றிலும் புதிய வடிவிலான கருவி முகப்பு போன்ற அனைத்தும் இந்த வானத்துக்குத் தனித்துவச் சிறப்பை அளிக்கின்றது.

## ஹற்றன் நஷனல் வங்கியின் கிளிநொச்சி நோக்கிய நகர்வும் அதன் பின்னணியும்



புவியியல் ரீதியாக ஒரு பெரு நிலப்பரப்பினையும் விவசாய வளங்களையும் வர்த்தக மூலங்களையும் கொண்ட ஒரு பூமியாக கிளிநொச்சி விளங்குகின்றது. அதில் தனது 191ஆவது வங்கிக் கிளையை ஹற்றன் நஷனல் வங்கி நிறுவியமை வங்கியின் வங்கியியல் வாழ்வில் ஒரு புதிய அத்தியாயத்தை ஏற்படுத்தியிருக்கிறது. நாடளாவிய ரீதியில் 190 வரையான கிளைகள் நிறுவி சேவை புரிந்தாலும் இப்பூர்வீகக் குடிநிலத்தில் தற்போதே கால்பதிக்க முடிந்திருக்கிறது. இது வங்கியினருக்கு ஒரு மைல் கல்லாகும்.

மிக நீண்ட வங்கியியல் வரலாற்றைக் கொண்ட தொன்மை மிக்க வங்கியான ஹற்றன் நஷனல் வங்கி. 1888 இல் பெருந்தோட்டத்துறை வளர்ச்சியை நோக்காகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டு காலத்தின் தேவை கருதியும் நாட்டின் வளர்ச்சி கருதியும் தனது சேவையினை விருத்தி செய்து ஓர் நிலையானதும் திடமானதுமான வளர்ச்சி நிலையை எட்டியுள்ளது. வடக்கின் வசந்த காலத்தில் 191 ஆவது கிளையை நாம் கிளிநொச்சி மண்ணில் நிறுவியமை இந்த நகருக்குக் கிடைத்த அதிர்ஷ்டம் என்றே கொள்ள வேண்டும்.

வன்னிப்பகுதியின் மீள் எழுச்சிக்கு இவ்வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரியும் முகாமைத்துவப் பணிப்பாளருமான திரு.இராஜேந்திரா தியாகராஜாவினால் இந்த நகருக்கு வழங்கப்பட்ட ஓர் அன்புப் பரிசாக கருதுவது பொருத்தமானதாகும். கூடவே இக்கிளையின் உதயத்துக்கு அல்லும் பகலும் உழைத்து இதுவரை சிரத்தை எடுத்துவந்த வடபிராந்திய சிரேஷ்ட முகாமையாளரான தி.ஜெயராஜசிங்கம் நன்றிக்குரியவர்களே.

நாடு முழுவதும் வேர்விட்டு கிளை பரப்பி வாடிக்கையாளர் சேவையினை சிறப்புற வழங்கும் ஹற்றன் நஷனல் வங்கி பலதரப்பட்ட வைப்புகள், பலதரப்பட்ட கடன் வகைகள், தங்கநகை அடகுச்சேவை, குத்தகைச்சேவை, பங்கு வணிகம், காப்புறுதி சேவை என பலதரப்பட்ட நிதிசார் தேவைகளைப் பூர்த்திசெய்து வருகிறது. மேலும் இக்கிளிநொச்சி மண்ணிலே மக்கள் விவசாயம், கைத்தொழில், வணிகம் போன்ற செயற்பாடுகளில்தான் அதிகம் ஈடுபட்டு வருகின்றது. மூன்று தசாப்தகால போரினால் மிகவும் நொந்து போயுள்ள கிளிநொச்சி நகரின் அபிவிருத்திக்கு மூலதனப் பற்றாக்குறை ஒரு பாரிய தடையாகவே உள்ளது. இது ஓர் துரதிர்ஷ்ட வசமானதாகும். இதனை நிவர்த்திக்கும் பொருட்டு ஹற்றன் நஷனல் வங்கியின் பிரசன்னம் அமைந்துள்ளது.



பொதுமக்கள், வணிகத்துறையினர், விவசாயத்துறையினர் எனப் பலரும் நிதிசார் நன்மைகளை இக்கிளை மூலம் அடைந்து கொள்ள முடியும்.

தவிரவும் குழந்தைகள் முதல் பெரியோர் வரை அனைவரும் சேமிப்பு வைப்புகள், நிலையான வைப்புகள், அழைப்பு வைப்புக்கள், நடைமுறைக் கணக்குகள், வெளிநாட்டு வதிவோர், வதியாதோர் கணக்குகள் என்பன வைப்புத் திட்டத்தில் அடங்கும் சிலவாகும். மேலும் தங்க நகை அடகுச்சேவை, தனிப்பட்ட கடன்கள், முதலீட்டுக் கடன்கள், உயர்கல்விக் கடன்கள், விவசாயக் கடன்கள், வீடமைப்புக் கடன்கள், தவணைமுறைக் கொடுப்பனவு முறையிலான வாகன கடன்வசதி, சுயதொழில் கடன்கள், கடன் அட்டைகள் என்பன கடன் திட்டத்தில் அடங்கும் சிலவாகும். மேலும் சர்வதேச நாடுகளிலிருந்து மிக விரைவாக பணத்தைப் பெற்றுக்கொள்ள 'மணிகிராம்' சேவைகள் முற்றிலும் நவீன வலையமைப்புடன் நாடளாவிய ரீதியில் 24 மணிநேர ஏ.ரி.எம் இயந்திரசேவை மேலும் வாடிக்கையாளர்களிடையே சீட்டிழுப்புக்களை கிளை மட்ட, பிராந்தியமட்ட, தேசிய மட்ட ரீதியில் நடத்தி ஆண்டுதோறும் கோடிக்கணக்கான பெறுமதிமிக்க பரிசில்கள் அள்ளி வழங்குகிறது. வங்கிசார் நடவடிக்கைகளோடு நின்றுவிடாது சமூக நல திட்டங்களிலும் ஹற்றன் நஷனல் வங்கியானது பெரும் பங்காற்றியே வருகிறது. வங்கியின் கூட்டு சமூகப் பொறுப்புத் திட்டத்தின்கீழ் சமூக, சமய, கலாசார விழுமியங்களை ஊக்குவித்து பாடசாலைகள், விளையாட்டுத்துறை, பிரதேச அபிவிருத்திப் பணிகளிலும் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொள்கிறது. ''வாடிக்கையாளர்களின் முன்னேற்றத்தின் பங்காளியான ஹற்றன் நஷனல் வங்கியின் அனைத்து சேவைகளையும் இனி வன்னிவாழ் மக்களும் இலகுவில் பெற்றுக்கொள்ள முடியும். மேலும் பல பாகங்களிலும் கிளைகளை நிறுவி சேவை வழங்க வங்கி உறுதி பூண்டுள்ளது. இதற்கு இறைவனின் நல்லாசியும் கிடைப்பதாக.

*விவசாய பெருமக்களை அரவணைக்க விசேட திட்டங்கள் அறிமுகம்*

இ.சு.ரேருபன்,
நெல்லியடிக்கிளை.




**கலைமகள் அழகு நிலா**
**பயிற்சி நிலையம்**

ஏழு நாள்கள் பயிற்சிகள் இடம்பெற்று பயிற்சியின் நிறைவில் தரமான சான்றிதழ் வழங்கப்படும். இப் பயிற்சியின் மூலம் ஒரு அழகு நிலையம் நடத்தும் திறமையைப் பெற்றுக்கொள்ளலாம். இப்பயிற்சி கற்றுக்கொள்வது இலகு வானதும் அதிக வருமானம் தரக் கூடிய தொழிலாகும். பெண்களுக்கு மிக அவசியமானது. வயதெல்லை கிடையாது. கீழ்வரும் பயிற்சிகள் அனைத்தும் செயன் முறையாகும்.

**பயிற்சிகள்**

★ Facial (ஏழு வகை)
★ Threading
★ Pimple Treatment
★ Waxing
★ Hair Streetening (2 வகை)
★ Hair Perming (2 வகை)
★ Hot Oil massage
★ Hair Cutting
★ Hair dye
★ Hair Colouring
★ Pedeicure manicure
★ கறுப்புக்காய்கள் இயந்திரம் மூலம் அகற்றப்படும்.
★ Bleaching
★ Bridal make up (5 வகை)

பயிற்[illegible]: 4000/=, பயிற்சி ஆரம்பம்: 19.07.2010,
பயிற்[illegible]: 9 மணி–பி.ப. 4 மணிவரை.

தொடர்புகள்: கலைமகள் அழகு நிலா
390, பிரதான வீதி, பஸ்ரியன் சந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 0773719071, 0214908151


## 9 பெண்களுக்கு சுயதொழில் கடன்

யாழ்ப்பாணம்,ஜூலை 15

சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்க அங்கத்தவர்கள் ஒன்பது பேருக்கு சுயதொழில் உதவிக் கடனாக மூன்று லட்சத்து 40 ஆயிரம் ரூபா கடந்த 8ஆம் திகதி வழங்கப்பட்டது.

யாழ்ப்பாணம் வாழ்வாதாரக் கடன் முகாமைத்துவ சேவைகளுக்கான மாகாண கூட்டுறவுச் சங்கத்தினால் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு வழங்கப்பட்ட தொகையே அங்கத்தவர்களுக்கு பிரித்து வழங்கப்பட்டது.

இந்தச் சங்கத்தினால் ஏற்கனவே இரு தடவைகள் வழங்கிய 4 லட்சத்து 90 ஆயிரம் ரூபா 14 அங்கத்தவர்களுக்கு கடனாக வழங்கப்பட்டுள்ளதாக சங்கச் செயலாளர் திருமதி ம.கீர்த்திநாதன் தெரிவித்தார்.

(50-207)


**VISA - வீசா**
**Consultancy Service**

***UK, USA, CANADA, AUSTRALIA, NEW ZEALAND, SWITZERLAND, FRANCE, GERMANY, NORWAY, DENMARK,***

Visit / Tourist, Business, Family Students, Migration, Medical Visas

**Call : 0776 209 887**

**SIC,** 734, Hospital Road, Jaffna.

# றொபேட் நிஷானின் அசத்தலான ஆட்டம்; சாவகச்சேரி இந்துவை வென்றது ஸ்கந்தா



யாழ்ப்பாணம்,ஜூலை15

பாடசாலைகள் துடுப்பாட்டச்சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் 17 வயதுப் பிரிவினருக்கான ஆட்டம் ஒன்றில் றொபேட் நிஷானின் அசத்தலான துடுப்பாட்டத்தால் சுன்னாகம் ஸ்கந்தவரோதயா 7 விக்கெட்டுக்களால் சாவகச்சேரி இந்துவை வென்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சாவகச்சேரி இந்துக் கல்லூரி 42 ஓவர்களின் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 136 ஓட்டங்களைப் பெற்றது.

இந்த அணி சார்பில் ரி.டிலுக்சன் ஒரு சிக்சர், இரண்டு பவுண்டரிகளுடன் 30 ஓட்டங்களையும் கே.நிரோஷன் ஒரு சிக்சர், இரண்டு பவுண்டரிகளுடன் 19 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

ஸ்கந்தா அணியின் பந்து வீச்சில் ஜெனிற்றன், சஞ்சயன், சிந்துஜன் ஆகியோர் 2 விக்கெட்டுக்களையும் குமுதன், கோபிகாந்த், கரிந்தன் ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 137 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தா அணியினர் 30 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து வெற்றியைப் பெற்றுக்கொண்டனர்.

ஸ்கந்தா அணியின் துடுப்பாட்டத்தில் றொபேட் நிஷான் ஆறு பவுண்டரிகளுடன் 48 ஓட்டங்களையும் சிந்துஜன் ஆட்டமிழக்காது 29 ஓட்டங்களையும் நிரோஜன் 13 ஓட்டங்களையும் பெற்றனர்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பந்து வீச்சில் பானுகோபன், சஜீதன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். (1-55)

# யாழ்.நகரின் சிறந்த கிரிக்கெட் அணித் தெரிவு யாழ்.பல்கலை அணி 20 புள்ளிகளுடன் முதலிடத்தில்

யாழ்ப்பாணம்,ஜூலை15

யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம் நடத்தும் 2010 ஆம் ஆண்டுக்கான யாழ்.நகரின் சிறந்த கழக அணித் தெரிவில் யாழ்.பல்கலைக்கழக அணி 20 புள்ளிகள் பெற்று முதலாவது இடத்தில் உள்ளது.

இரண்டாவது இடத்தினை 16 புள்ளிகளைப் பெற்று ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகமும் -

மூன்றாவது இடத்தில் 13 புள்ளிகளைப் பெற்று சிறிகாமாட்சி சனசமூக நிலைய கழகமும் -

நான்காவது இடத்தில் 9 புள்ளிகளைப் பெற்று யாழ்.சென்றல் அணியும் -

ஐந்தாவது இடத்தில் 6 புள்ளிகளைப் பெற்று கே.சி.சி.சி அரியாலை சென்றல் ஆகிய அணிகளும் -

ஆறாவது இடத்தில் 5 புள்ளிகளைப் பெற்று கிறஸ்கொப்பஸ், ஈகிள்ஸ், ஒல்ட் கோல்ஸ், யூனியன் விளையாட்டுக்கழகம் ஆகிய அணிகளும் -

ஏழாவது இடத்தில் 3 புள்ளிகளைப் பெற்று மானிப்பாய் பரீஸ் வி.க, ஸ்ரான்லி வி.க, யங்ஸ்ரார் வி.க. ஆகிய அணிகளும் பெற்றுள்ளன.

ஆகக்கூடிய புள்ளிகளைப் பெறும் சிறந்த அணியாகத் தெரிவு செய்யப்படும் அணிக்கு துடுப்பாட்டத் தொடர்புடைய ஒருவரின் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணமும் 10,000 ரூபா பரிசும் வீ.டி.ஜெயரட்ணசிங்கம் வெற்றிக்கிண்ண இறுதியாட்ட போட்டியில் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (1-23)

# தடகளப் போட்டியில் அருணோதயா சாதனை; 13 தங்கத்துடன் 21 பதக்கங்களைச் சுவீகரித்தது



வடமாகாணக் கல்வித் திணைக்களம் நடத்திய மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான தடகளப் போட்டியில் 21 பதக்கங்களைவென்ற யாழ். மாவட்ட வலிகாமம் கல்வி வலயத்துக்கு உட்பட்ட தெல்லிப்பழை கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த அளவெட்டி அருணோதயாக் கல்லூரி வீர, வீராங்கனைகள், அதிபர் கா.கேதீஸ்வரன் மற்றும் ஆசிரியர்களுடன் காணப்படுவதைப் படத்தில் காணலாம். (படம்: நேசன்)

வலி.வடக்கு,ஜூலை15

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தினால் மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட தடகளப் போட்டியில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி 21 பதக்கங் களைப் பெற்று மாகாண மட்டத்தில் முதலாம் இடத்தைப்பெற்ற பெருமை யைப் பெற்றுள்ளது.

அண்மையில் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெற்ற தடகளப் போட்டிகளில் 13 தங்கப் பதக்கங்களைப் பெற்று முதலாமிடத்தையும், 6 வெள்ளிப் பதக்கங்களைப் பெற்று இரண்டாமிடத்தையும், 3 வெண்கலப் பதக்கங்களைப் பெற்று மூன்றாமிடத்தையும் அந்தக் கல்லூரி பெற்றுள்ளது.

கல்லூரி பெற்ற பெறுபேறுகளின் விவரம் வருமாறு,

✱ ப.கம்சிகன் - 11வயதுப் பிரிவு- நீளம் பாய்தல் - 2ஆம் இடம்,

✱ அ.பௌத்திரா - 17 வயதுப்பிரிவு - கோலூன்றிப் பாய்தல், முப்பாய்ச்சல் - முதலாமிடம்.

✱ அ.றொசாய் றொகான் - 17 வயதுப்பிரிவு - கோலூன்றிப் பாய்தல் - முதலாமிடம்.

✱ இ.காவேரி - 19 வயதுப்பிரிவு - 800,1500,5000 மீற்றர் ஓட்டம் - முதலாமிடம் (மாகாண சம்பியன்)

✱ ச.தனுஜா - 19 வயதுப்பிரிவு - கோலூன்றிப்பாய்தல் - உயரம் பாய்தல் - முதலாமிடம்

✱ இ.ஜக்சனா - 19 வயதுப்பிரிவு - 200 மீற்றர் ஓட்டம் - முதலாமிடம், 400 மீற்றர் ஓட்டம், கோலூன்றிப் பாய்தல் - 2ஆம் இடம்.

✱ சி.நந்தபாலன் - 19 வயதுப்பிரிவு - 400 மீற்றர் தடை தாண்டல் - 3ஆம் இடம்

✱ உ.அகிலன் - 19 வயதுப்பிரிவு - கோலூன்றிப் பாய்தல் - 2ஆம் இடம்.

✱ சி.நிஷாந்தி - 21 வயதுப்பிரிவு - கோலூன்றிப் பாய்தல் - முதலாமிடம்.

✱ தெ.ரேவதி - 21 வயதுப்பிரிவு - 400 மீற்றர் - முதலாமிடம், 800 மீற்றர் 2ஆம் இடம்.

✱ நா.ஜெனலி - 21 வயதுப்பிரிவு - 100 மீற்றர் தடை தாண்டல் - முதலாமிடம், 400 மீற்றர் தடை தாண்டல் - 3ஆம் இடம்.

✱ 4×100 மீற்றர் அஞ்சல் ஓட்டம் - 19 வயதுப்பிரிவு - முதலாமிடம் (இ.காவேரி, ச.தனுஜா, ப.பிரியதர்சினி, இ.ஜக்சனா)

✱ 4×400 மீற்றர் அஞ்சல் ஓட்டம் - 19 வயதுப்பிரிவு - 2ஆம் இடம் (இ.காவேரி, ச.தனுஜா, இ.ஜக்சனா, ப.பிரியதர்சினி)

(1-86)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்



ஞானேஸ்வரன் - மதூஷன் 15 வயதுப் பிரிவு ஆண்கள் தட்டெறிதல் - தங்கப்பதக்கம்



முருகதாஸ் கிருஷ்ணா 19 வயதுப் பிரிவு உயரம் பாய்தல் - தங்கப்பதக்கம்



ஜெயபாலசிங்கம் ஜனந்தன் 17 வயதுப்பிரிவு உயரம்பாய்தல் - தங்கப்பதக்கம்



காசிலிங்கம் கஜானி 19 வயதுப் பிரிவு குண்டெறிதல் - தங்கப்பதக்கம்



சுதாகரன் சகானா 15 வயது கீழ்ப்பிரிவு பெண்கள் தட்டெறிதல் - தங்கப்பதக்கம்



சி.சிவபாலன் 19 வயது கீழ்ப்பிரிவு தடைதாண்டி ஓட்டம் தங்கப்பதக்கம்

**வடமாகாணக் கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட மாகாண மட்ட மெய்வன்மைப் போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றியீட்டி சாதனை படைத்த மாணவர்களைப் படங்களில் காணலாம்.**

*(படங்கள்: ம.ப.மகாலிங்கசிவம்)*

# வடமாகாணப் பாடசாலைகளின் தடகளப் போட்டிகள்; சாதனை படைத்த மேலும் சில வீர, வீராங்கனைகள்

வலி.வடக்கு,ஜூலை15

வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்திய தடகளப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் விவரங்கள் தொடர்ச்சியாக வெளிவருகின்றன. மேலும் சில முடிவுகள் வருமாறு,

### 400 மீற்றர்

அ.அனெற் (மாதகல் சென்.யோசப் வித்தியாலயம்), பி.ஜெயந்தினி (வவுனியா கணேஸ்வரா வித்தியாலயம்), ப.ஜெனிதா (வவுனியா சைவப் பிரகாச மகளிர் கல்லூரி), ஆர்.அனுசா பெர்ணான்டோ (மன்னார் புனிதவளனார் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை).

### உயரம் பாய்தல்

ச.பாலதீபா - 1.33 மீற்றர் (அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம்), தே.சங்கீதா (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), எஸ்.சாமலி மதுசாலினி (வவுனியா நெலுக்குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை),ஜே.மேரி அருளினி (கிளிநொச்சி வலைப்பாடு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை).

### குண்டுபோடுதல்

ஸ்ரீ.கோபிகா - 7.08 மீற்றர் (சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி), இ.ஜனரஞ்சினி (கொக்குவில் இந்துக் கல்லூரி), ஹ.ஹானா நட்ஷா (சுண்டுக்குழி மகளிர் கல்லூரி), ஜி.எ.சுமந்தி மல்சானி (வவுனியா தர்மபாலா வித்தியாலயம்).

### தட்டெறிதல்

சு.சசனா - 22.28 மீற்றர் (தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி), கு.தீபாஜினி (புன்னாலைக் கட்டுவன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை), ஸ்ரீ.கோபிகா (சுழிபுரம்விக்ரோறியாக்கல்லூரி), ஆர்.தயாளினி (வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்).

### 4×100 மீற்றர் அஞ்சல் ஓட்டம்

சுண்டுக்குழி மகளிர் கல்லூரி, மன்னார் நாணாட்டான் மகாவித்தியாலயம், இளவாலை புனித கன்னியர் மடம் மகா வித்தியாலயம், மன்னார் சென்.லூசியா மகா வித்தியாலயம்.

### ஈட்டி எறிதல்

வி.சங்கீதா - 22.74 மீற்றர் (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), ஜி.எ.சுமந்தி மல்சானா (வவுனியா தர்மபால வித்தியாலயம்), ஹ.ஹானா கட்சா (சுண்டுக்குழி மகளிர் கல்லூரி), கே.தர்சிகா (வவுனியா செக்கடிபுலவு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை).

### 100 மீற்றர் தடை தாண்டல்

க.கஸ்தூரியா (சுண்டுக்குழி மகளிர் கல்லூரி), மு.துஷ்யந்தி (மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்), கே.எம். அமின்ராடலிமா (மன்னார் சென். அனாஸ் மத்திய மகா வித்தியாலயம்), யோ.கனிஸ்ரா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி).

### 4×400 மீற்றர் அஞ்சல் ஓட்டம்

வவுனியா பூம்புகார் கண்ணகி வித்தியாலயம்,மன்னார் நானாட்டான் மகா வித்தியாலயம், வவுனியா மூன்று முறிப்பு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, முல்லைத்தீவு பாண்டியன் மகா வித்தியாலயம். (86)

(தொடரும்)

# முக்கிய அறிவித்தல்

## கரைச்சிப்பிரதேச சபை- கிளிநொச்சி

2008ஆம் ஆண்டு நடைபெற்ற யுத்த சூழ்நிலை காரணமாக எமது சபையின் ஆவணங்கள் முற்றாக அழிவடைந்துள்ளன. எனவே சபையின் வருடாந்தக் கணக்குகளை ஒழுங்கு படுத்திக் கொள்வதற்கு கீழ் வரும் விடயங்கள் தொடர்பாக சபையுடன் கொடுக்கல், வாங்கல்கள் இருப்பின் உரிய ஆதாரங்களுடன் அவ் விவரங்களை விசேட ஆணையாளர்/ செயலாளர், கரைச்சிப் பிரதேச சபை, கிளிநொச்சி என்னும் முகவரிக்கு 31.07.2010ஆம் திகதிக்கு முன் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

1. சபைக்கு கடன் செலுத்த வேண்டியோர் (மின்சாரம், ஆதனவரி, சேவைக்கட்டணங்கள், குத்தகை, கடன் நிலுவை ஆகியன)
2. சபையிடமிருந்து கடன்பெற வேண்டியோர் (கடன் நிலுவைகள், ஏனையவைகள்)
3. சபையிடம் இருந்து முற்பணம் பெற்றோர்.
4. சபையின் கணக்கில் வைப்புச்செய்து மீளப்பெறாதோர்

மேலும் கரைச்சிப்பிரதேச சபை தொடர்பான ஆவணங்கள் எவ்வகையிலாவது கிடைக்கப்பெற்றிருப்பின் அவற்றினை நேரடியாக அல்லது தபால் மூலம் சபையிடம் ஒப்படைத்து சபையின் செயற்பாடுகளை ஒழுங்கமைப்பதற்கு ஒத்துழைப்பு நல்குமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

**பொன்.நித்தியானந்தம்,**
**விசேட ஆணையாளர்.**
(சி/569251)

## மீள் குடியமர்வுக் கொடுப்பனவு இதுவரை பெறாதோருக்கு

யாழ்ப்பாணம்,ஜூலை15

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் வன்னியிலிருந்து மீளக் குடியேறிய மக்களில் இதுவரை அகதிகளுக்கான ஐ.நா. நிறுவனத்தினால் வாழ்வாதார ரீதியான 20 ஆயிரம் ரூபாவைப் பெறாத வர்களை எதிர் வரும் கோப்பாய் பிரதேச செயலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

உணவல்லாத பொருள்களை இது வரை பெறாதோருக்கு அவை எதிர்வரும் 22 ஆம் திகதி நீர்வேலி கந்தசாமி கோயி லில் வைத்து வழங்கப்படும் எனவும் அவர்களின் பெயர் விவரங்கள் கிராம அலுவலகர் அலுவலகத்தில் காட்சிப் படுத்தப் பட்டுள்ளதாகவும் அறிவிக்கப் பட்டுள்ளது.

## தேசிய சேமிப்பு வங்கியின் சாவகச்சேரி கிளையில் ஏ.ரி.எம்.சேவை

யாழ்ப்பாணம்,ஜூலை15

தேசிய சேமிப்பு வங்கியின் சாவகச் சேரி கிளையில் தன்னியக்க பணப்பரிமாற்ற சேவை (ஏ.ரி.எம்) அண்மை யில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வங்கி நடவடிக்கையாகக் சி.வரத ராஜன் தன்னியக்க பணப் பரிமாற்ற சேவை இயந்திரத்தினை சம்பிரதாயபூர் வமாக திறந்து வைத்ததாக கிளை முகாமையாளர் கி.தனீஸ்வரன் தெரிவித்தார்.

## யா/வட்டு மத்திய கல்லூரி

யா/வட்டு மத்திய கல்லூரியின் பரிசளிப்பு விழா நிகழ்வில்
**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



**செல்வி ம.கமலினி**
*(2 தங்கம், 1 வெள்ளி)*



**செல்வி சி.டென்சிகா**
*(1 தங்கம்)*

வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டி 2010இல் 17 வயதுப் பிரிவின் 100M, 200M ஓட்ட நிகழ்வில் தங்கப்பதக்கத்தையும், 400M ஓட்ட நிகழ்வில் வெள்ளிப்பதக்கத்தையும் பெற்று வடமாகாணத்தின் சிறந்த வீராங்கனையாகத் தெரிவு செய்யப்பட்ட செல்வி கமலினி மகேந்திரம் அவர்களையும், ஈட்டி எறிதல் நிகழ்வில் தங்கப்பதக்கத்தைப் பெற்ற செல்வி டென்சிகா சிவலிங்கம் அவர்களையும் பாராட்டி வாழ்த்துவதோடு, இவர்கள் தேசிய மட்டத்திலும் சாதனை பெற வாழ்த்துகின்றோம்.

**பழைய மாணவர் சங்கம்,**
**யா/வட்டு மத்திய கல்லூரி.**
(100629)

## மஹஜன சம்பத — மஹஜன சம்பத — Mahajana Sampatha

13.07.2010

அலுவலக முடிவுகள்
சீட்டிழுப்பு இல. 2265

வெற்றி எழுத்து: L
வெற்றி எண்கள்: 8 2 7 7 5 0

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | எழுத்து / எண்கள் | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | L 8 2 7 7 5 0 | ரூபா. 11,919,823/= | பரிசு - |
| 1 பரிசுகள் | 8 2 7 7 5 0 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் 01 |
| 2 பரிசுகள் | 2 7 7 5 0 | ரூபா. 100,000/= | பரிசுகள் 13 |
| 3 பரிசுகள் | 7 7 5 0 | ரூபா. 10,000/= | பரிசுகள் 138 |
| 4 பரிசுகள் | 7 5 0 | ரூபா. 1,000/= | பரிசுகள் 1330 |
| 5 பரிசுகள் | 5 0 | ரூபா. 100/= | பரிசுகள் 13226 |
| 6 பரிசுகள் | 0 | ரூபா. 20/= | பரிசுகள் 130765 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | எழுத்து / எண்கள் | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| 7 பரிசுகள் | 8 2 7 7 5 | ரூபா. 10,000/= | பரிசுகள் 11 |
| 8 பரிசுகள் | 8 2 7 7 | ரூபா. 1,000/= | பரிசுகள் 132 |
| 9 பரிசுகள் | 8 2 7 | ரூபா. 100/= | பரிசுகள் 1341 |
| 10 பரிசுகள் | 8 2 | ரூபா. 50/= | பரிசுகள் 13008 |
| 11 பரிசுகள் | L | ரூபா. 20/= | பரிசுகள் 52361 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை **Rs. 12,021,620.00**

அடுத்த சீட்டிழுப்பிகான சுப்பர் பரிசு **Rs. 13,103,046.00**

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும் பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

உங்களின் செழிப்பு நாட்டின் செழிப்பு
தேசிய லொத்தர் சபை
234/2 காலி வீதி. கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 4607000, Hotline: 2433631 மின்னஞ்சல்: www.nlb.lk

## யா/வட்டு மத்திய கல்லூரி

யா/வட்டு மத்திய கல்லூரியின் பரிசளிப்புவிழா நிகழ்வில் தேசிய பொதுப்பரீட்சைகளில் சாதனை பெற்ற மாணவர்களை
**வாழ்த்துகின்றோம்**

க.பொ.த. (உ/த) பரீட்சை 2009 இல்



செல்வன் கு.பகீதரன்
*(3ஏ மாவட்டநிலை 16)*



செல்வன் ம.சுதாகரன்
*(2ஏபி)*

க.பொ.த. (சா/த) 2009 இல்



செல்வி கெ.விநோஜா
*(6ஏ3பி)*



செல்வி ஆ.கௌதமி
*(5ஏ2பி2சி)*

மேற்படி சாதனை பெற்ற மாணவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு இவர்கள் கல்வியில் மேலும் பல சாதனைகளை நிகழ்த்த வேண்டும் என வாழ்த்து கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/வட்டு மத்திய கல்லூரி.
(100630)

ஆனைக்கோட்டை, நவாலி, சங்கரத்தை சிறார்களுக்கு ஒரு வரப்பிரசாதம்.

ஆவணியில் சங்கானையிலும், உடுப்பிட்டியிலும், அச்சுவேலியிலும் குதூகலஆரம்பம்.

பிரபல **British Business School** இன் பாலர்பாடசாலை மானிப்பாய் 2வது வளாகம் இன்று 15.07.2010 சங்கரப்பிள்ளை வீதி, மானிப்பாயில் ஆரம்பம். (மானிப்பாய் இந்துக்கல்லூரி அருகில்)

மற்றைய இடங்களில் புதிய அனுமதிகள் ஆவணி 10ம் திகதி

8th Anniversary

சர்வதேச தரத்திலான ஆங்கிலத்துடன் தமிழிலும் பாலர் பாடசாலை

Play Group 2-3 Years | Montessori 3-4 Years | Pre-School 4-5 Years

கற்பித்தல் முறை
- சர்வதேச தரத்தில் அங்கீகரிக்கப்பட்ட Dr. Maria Montessori & Canadian Early Learning Method.
- ஆங்கில மொழியில சர்வதேச தரத்திற்கேற்ப பாடத்திட்டம்.
- அங்கீகரிக்கப்பட்ட ஆங்கில பாடநெறிகள்.

விசேட நிகழச்சிகள்:
English Concert, முத்தமிழ்விழா, ஒளிவிழா, பட்டமளிப்புவிழா, மாணவர் சித்திரம், கைவேலை, கண்காட்சி, Sports Meet.

**BRITISH BUSINESS SCHOOL**
**Contact: 021 222 5796, 0773627055, 0776646357.**

நல்லூர்: 140, கோவில் வீதி, நல்லூர்.
கோப்பாய்: பருத்தித்துறை வீதி, கோப்பாய் மத்தி.
நீர்வேலி: 1ம் கட்டை, இராச வீதி, நீர்வேலி.
சாவகச்சேரி: சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை அருகாமை.
மானிப்பாய்-1: 252, ஆலடி சந்தி, யாழ் வீதி மானிப்பாய்.
மானிப்பாய்-2: சங்கரப்பிள்ளை வீதி, மானிப்பாய்.
சுன்னாகம்: Lakshmi Cottage (புதிய நீதிமன்ற அருகாமை) கே.கே.ஸ் வீதி, மல்லாகம்.
புலோலி: ஸ்ரீ பத்மநாதன் இல்லம், மந்திகை.

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி இலக்கங்கள்

1207 நீலம்

13-07-2010

மகரம் 10 22 44 46

ஜக்பொட் பரிசு ரூபா. 5,838,400/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 221,769 | 20/- | 4,435,380/- |
| 2 இலக்கங்கள் | 20,347 | 40/- | 813,880/- |
| 1 இல. + லக்கினம் | 20,158 | 60/- | 1,209,480/- |
| 2 இல. + லக்கினம் | 1,811 | 200/- | 362,200/- |
| 3 இலக்கங்கள் | 548 | 1000/- | 548,000/- |
| 3 இல. + லக்கினம் | 45 | 10,000/- | 450,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 5,838,400/- | - |
| மொத்தம் | | | 8,418,940/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 264,686 | | 8,918,940/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 6,333,550/-

2010 ஜூலை 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்
அபிவிருத்தி லொத்தர் சபை

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| மாத்தறை | 401437237-7-06 |
| கண்டி | 401423422-2-19 |
| புத்தளம் | 401421368-5-15 |
| மொனராகலை | 401420251-7-17 |
| நுவரெலியா | 401423609-7-26 |

உ
சிவமயம்



### வல்வெட்டித்துறை
## நறுவிலடிப் பிள்ளையார் கோவில் சம்புரோக்ஷண
# மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர்
### காலம் 15.07.2010 08.10 - 09.00 மணி வரை

**நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்**
**ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்**
**குருமஹா சந்நிதானம் ஆதிமுதல்வர் அவர்களின் அருள் ஆசிச்செய்தி**

விநாயகர் அடியார் அவர்கட்கு-

வல்வை நகரில் நறுவிலடி பதியில் எழுந்தருளி இருந்து அருளாட்சி புரியும் விநாயகப் பெருமானுக்கு இன்று மஹா கும்பாபிஷேகம் நடைபெறுவதை இட்டு மகிழ்ச்சி அடைகின்றோம் நிறைவான பல ஆலயங்களைக் கொண்ட வல்வை நகரில் வேண்டுவார் வேண்டுவதை ஈம் பொருட்டு விக்கினங்களை நீக்கி விநாயகப்பெருமான் எழுந்தருளி உள்ள மனித வாழ்க்கையை உயர்நிலை அடைய செய்து ஆலய வழிபாடு ஆலயத்தில் நடைபெறும் விழாக்களும் மனிதனை மனிதநேயத்தோடு வாழ வழி வகுக்கின்றன இதனால் நம் சமயத்தில் "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்றும் இத்தருள எம்பிரான் உடைய இக்கோயில் புகு என்றும் கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்று நம் சமயம் எடுத்து இயம்புகின்றது இவ்வாலயத்தில் நடைபெறும் கும்பாபிஷேகம் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் அபிஷேகம் ஆகும் இதனை செய்வதும் செய்விப்பதும் தரிசிப்பதும் ஒரு புண்ணியத்தை நமக்கு தருகின்றது இக்கும்பாபிஷேகத்தை செய்யும் சிவப்பிரம்மஸ்ரீ பரமேஸ்வர மனோகர குருக்களுக்கும் ஆலய நிர்வாகிகளுக்கும் நன்றி கலந்த நல் வாழ்த்துக்கள் இக்கும்பாபிஷேகத்தை அடியார்கள் மக்கள் அனைவரும் வழிபாடு செய்து மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக ! அனைவருக்கும் விநாயகருடைய ஆசீர்வாதம் கிடைப்பதாக.

என்றும் வேண்டும்
இன்ப அன்பு!!
இரண்டாவது குருமஹாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக, ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

**பிரதிஷ்டா பிரதம குருவின் ஆசியுரை**

வல்வை நகரின் மத்தியில் பல நூற்றாண்டு காலமாக வீற்றிருந்து அருளாட்சிபுரியும் நறுவிலடிபதி விநாயகப்பெருமான் ஆலய மஹாகும்பாபிஷேக விழா இன்று நடைபெறுவதை இட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறோம். நாம் தொடங்கும் காரியங்கள் யாவும் எவ்வித விக்கினங்களும் இல்லாமல் நடைபெற வேண்டும் என்பதற்காக நாம் முழுமுதல் கடவுளாகிய விநாயகப் பெருமானை வேண்டுதல் செய்து போற்றி வழிபடுகின்றோம். ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்ற ஔவையின் முதுமொழியை என்றுமே முன்னிலைப்படுத்தி வழிபாடு செய்பவர்கள் வல்வை மக்கள் கலை கலாசார பண்பாட்டு விழுமியங்களை இன்றும் வல்வை மண்ணில் நாம் காணக்கூடியதாகவே இருக்கின்றது இத்தகைய பெருமைகள் நிறைந்த வல்வை மண்ணில் நறுவிலடி பதியில் 29 ஆண்டு காலத்தின் பின் மஹாகும்பாபிஷேக வைபவம் சிறப்பாக இன்று நடைபெறுகிறது இம் முயற்சிகளுக்கு உறுதுணையாக இருந்து செயல்பட்ட சோமசுந்தரம் குடும்பத்தினர், அடியார் பெருமக்கள், சிற்பக்கலைஞர்கள், வர்ணவடிமைப்பாளர்கள், வெளிநாடுகளில் வாழ்கின்ற மக்கள் அனைவருக்கும் விநாயகப்பெருமான் திருவருள் கிடைக்க பிரார்த்திப்பதோடு நல்லாசிகளையும் தெரிவிக்கின்றேன்.

நன்றி
கிரியா க்ரம ஜோதி, கிரியா கலாப முக்தாமனி
பிரம்மஸ்ரீ
பரமேஸ்வர மனோகரக்குருக்கள்

பிரதமகுரு.
வாலாம்பிகாசமேதவைத்திஸ்வரசுவாமி தேவஸ்தானம், வல்வெட்டித்துறை.

தலைவர்
சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்.

**கும்பாபிஷேகம் சிறப்புர**

இலங்கையின் வடக்கே யாழ்மாவட்டத்தில், நெய்தல் நில நகரமாகிய வல்வெட்டித்துறை (வல்வை) மக்களின் வாழ்க்கைமுறை நிலம் நீர், காற்று, ஆகாயம் எனும் முக்கிய ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டது அதாவது அவர்கள் "திரைகடல் ஓடி திரவியந்தேடுவதற்காக "யாவா, சுமாத்திரா, ரங்கூன், இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு எம்மவர்களால் கட்டிய மாபெரும் பாய்மரக்கப்பல்களை கடலின் நீரோட்டத்தையும் காற்று வீசுந்திசைகளையும் ஆகாயத்திலுள்ள சூரியன், சந்திரன் , விண்மீன்கள் என்பவற்றைக்கொண்டு கணித்து. கப்பல்களில் பணிபுரியும் தண்டையல்(Captain), சுக்கானியர் (bossun), கிலாசு (seman) ஆகியோரும் கப்பல் முதலாளிகளும் வர்த்தகர்களும் தமது பயணத்தை ஆரம்பம் முதல் சென்றுவரும் வரை "அவன் செயலால் எல்லாம் நடப்பதாக அவன் தாழ்வணங்கி கோவில்கள் அமைத்து வழிபட்டுவந்தனர்.

இத்தகைய சூழலில் வாழ்ந்து வந்த வல்வை சிவன்கோவிலிற்கு காசியிலிருந்து சிவலிங்கத்தைக்கொண்டுவந்தும், நடேசர் விக்கிரகத்தையும் வழங்கியும் வாழ்ந்து வந்த விஸ்வநாதர் சரவணமுத்துவினது மனைவியான சின்னத்தங்கம் அவர்களாலும் தொடர்ந்து நூற்றாண்டுகாலத்திற்கு மேலாக அவரது 4வது பரம்பரையாக இன்றுவரை பராமரிக்கப்பட்டும், அயலிலே முதலாளிமார், தண்டையல் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் வாழ்ந்துவரும் சுற்றாடலைக்கொண்டதும், நறுவிலை தலவிருட்சமாகக் கொண்டிருந்ததால் நறுவிலடிப்பிள்ளையார் எனும் காரணப்பெயர் கொண்ட நறுவிலடி ஆலயம் வல்வையின் சந்திக்கு அண்மையில் அமைந்துள்ளது. ஆண்மைக்காலசூழ்நிலையாலும் மற்றும் சுனாமியினாலும் பாதிக்கப்பட்டிருந்தது தற்போது ஆலயம் திருத்தம் செய்து புதிய முறையில் நிர்மாணிக்கப்பட்டு புதுப்பொலிவுடன் காட்சியளிக்கின்றது நம்பிவருபவர்களுக்கு நலம் காக்கும் நறுவிலடிப்பெருமானுக்கு இன்று கும்பாபிஷேகம் நடைபெற உள்ளது.

எனவே தற்போதைய சூழலில் நாட்டிலும் எமது ஊரிலும் சாந்தியும் , சமாதானமும் ஏற்பட்டு அனைவரும் சீரும் சிறப்புடனும் வாழவும் எமது குல தெய்வமான நறுவிலடிப்பிள்ளையார் அருள் பாலிக்க வேண்டும் என வணங்கி வாழ்த்துகிறேன்.

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

நிர்வாகம் சார்பில்
இ.சி.சிவசுப்பிரமணியம் (ஓய்வு பெற்ற இறக்குமதிகள் ஏற்றுமதிகள் கட்டுப்பாட்டாளர்)
இலங்கை அரச நிர்வாக சேவையாளர், அகில இலங்கை சமாதான நீதவான்

சிறப்புற வாழ்த்துவோர்


குறைந்த அழைப்பு கட்டணங்கள் IDD
H2H 50 சதம்
H2NH ரூபா 1.50

| ரூபா | நிமிடம் |
|---|---|
| 126/= | 30 |
| 499/= | 120 |
| 999/= | 250 |
| 2390/= | 1200 |

HUTCH

MBSL INSURANCE CO LTD
No: 852,பருத்தித்துறை வீதி, முத்திரை சந்தி,யாழ்ப்பாணம். 021 4590818, 021 4920280
No: 72A, 1ஆம் குறுக்குத் தெரு, வவுனியா. 024 2225870, 024 4924960

COLONIAL HARDWARE STORES
Importers, Distributors & General Hardware Merchants
427, Old Moor Street, Colombo 12. E Mail: colonial@slt.lk
Tel : 2347981-83-89 Fax : +94 11 2334090

சிவகாமி இரும்பகம்
யாழ் வீதி,
வல்வெட்டித்துறை.

WIN IT SOLUTION
MOVIE CD & DVD SALES
NET BROWSING
COMPUTER & PARTS SALES
COMPUTER REPAIRING
MOBILE PHONE SALES
NET 2 PHONE
CD & DVD WRITING
SCANING
PRINTING
ALBUM DESIGNING K.K.S ROAD, VALVET

NATIONAL COMPUTER SYSTEMS
Computer Sales, Computer Repairing, Networking, Web Designing, Software Development.
NO : 226, MANIPAY ROAD, JAFFNA.

வாணி வீடியோ கோம்
நெடியகாடு,
வல்வெட்டித்துறை.

Bright Communication
Main Road, Neliyadi.
BUS BOOKING, AIR TICKETING, MONEY TRANSFER
PHONE RELOADS/CARDS, PHONE CALLS

ஒருவருக்கு ஒருவர் ஒத்தாசை செய்து திடன்கொள் என்று சகோதரனுக்குச் சகோதரன் சொல்லுகின்றான் ஏசாயா 41:6

## தீர்க்கதரிசன பெருவிழா

நாள்: 2010 ஜூலை 16 வெள்ளி 17 சனி

இடம்: வீரசிங்கம் மண்டபம் யாழ்ப்பாணம். (JAFFNA) Sri Lanka.

நேரம் : தினமும் பிற்பகல் 4 மணி



தேவ செய்தியாளர்கள்:

சகோ. M. ஆரோக்கியராஜ்

சகோதரி ஹேமா ஆரோக்கியராஜ்

இனிய பாடல் வேளை, அனல் மூட்டும் ஆராதனை
தீர்க்கதரிசன செய்தி வேளைகள், சுகமளிக்கும் ஜெப வேளைகள்
ஜெபியுங்கள், தவறாமல் பங்குபெறுங்கள்

அனுமதி இலவசம்

தொடர்பு: Pas K.தங்கவேல் 0716260060
Pas V.மதிபாலன் 0718561613



## வீடு வாடகைக்கு தேவை

யாழ். நகருக்கும் பல்கலைக்கழகத்திற்கும் இடைப்பட்ட பகுதி, நல்லூர், திருநெல்வேலிப் பகுதிகளில் வீடு வாடகைக்குத் தேவை. தொடர்பு: 0777917737



## JOB OFFER

Page 20 of 14.07.2010 Uthayan
Advt. on the above sujbect:
Reply with Resume and expected salary be mailed to
jaffna@activesoftsg.com
*Closing Date: 25th July 2010.*



## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை வீதியில் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய முன் பக்கமாக 9 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: தொலைபேசி இல. 0776146451



## காணி விற்பனைக்கு

மருதனார்மடம், வலிகாமம் கல்வி வலயத்திற்கு அண்மையில், கிணற்றுடன் கூடிய 12 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: தொலைபேசி இல. 0777110513



## தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம்
## கடைகள் ஏலத்தில் விடப்படும்

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான ஆடிச் செவ்வாயை முன்னிட்டு கடைகள் ஏலம் எதிர்வரும் (17.07.2010) சனிக்கிழமை மு.ப. 10 மணிக்கு தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்க முன்றிலில் நடைபெறும். கடை ஏலத்தில் எடுப்பவர்கள் அனைத்து ஆடிச் செவ்வாய்க்கு சேர்த்து கடை எடுத்தல் வேண்டும். தனியொரு செவ்வாய்க்கும் மட்டும் வழங்கப்பட மாட்டாது.

குறிப்பு:
1. கடை ஏலம் எடுப்பவர்கள் அன்றே முழுத் தொகையையும் செலுத்த வேண்டும். தவறும் பட்சத்தில் கடை வழங்கப்பட மாட்டாது.
2. கடந்த காலங்களில் ஏலம் எடுத்தவர்கள், மிகுதியான பணத்தைச் செலுத்தாதவர்கள் முழுத்தொகையையும் செலுத்திய பின்பே ஏலத்தில் பங்கேற்க முடியும்

தலைவர். (சி/569262) இணைச் செயலாளர்கள்.



## THREE (3) MONTHS ENGLISH DIPLOMA COURSE

* SPOKEN BASIC WITH GRAMMAR
  3 மாத ஆங்கில வகுப்பு பயிற்சி நெறி
* ஆங்கில அறிவில் மிகவும் குன்றியவர்களும் ஆங்கிலத்தில் மூன்று மாத முடிவில் சரளமாக எழுத, வாசிக்க, பேச முடியும்.
* ஆங்கில அறிவில் மெதுவான, குன்றிய தேர்ச்சி உள்ளவர்கள் தனிப்பட்ட ரீதியில் கவனிக்கப்பட்டு அடிப்படையில் இருந்து வழிநடத்தப்படுவர்.
* பாடநெறியின் இறுதியில் நிறுவனத்தால் Diploma சான்றிதழ் வழங்கப்படும்.
* இப்பாடநெறி பிரபல ஓர் ஆங்கில பட்டதாரி ஆங்கில ஆசிரிய ஆலோசகர் ஒருவரினால் கொழும்பில் இருந்து வருகை தந்து கற்பிக்கப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.
* IELT COURSE செய்பவர்களுக்கு பயிற்சி வழங்கப்படும்.

NBC 451, கண்டி றோட் நுணாவில் மத்தி, சாவகச்சேரி. (சி/569259)



## வடமாகாண பேக்கரி உரிமையாளர்கள் ஊழியர்களுக்கான பயிற்சிப் பட்டறையும் கலந்துரையாடலும்

மேற்படி பேக்கரி உரிமையாளர்களுக்கும் ஊழியர்களுக்கும் இன்னும் புதிதாக பேக்கரி நடத்த விரும்புபவர்களுக்கும் பயிற்சிப்பட்டறையுடன் கூடிய கலந்துரையாடல்

AB | MAURI

AB | MAURI நிறுவனத்தினால்
17.07.2010 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ்ப்பாணம் புளூகெவன் ஹோட்டலில் (பொஸ்கோ பாடசாலை முன்பாக) நடைபெறவுள்ளது. ஆர்வலர்கள், அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

AB | MAURI *lanka (Pvt) Ltd,*
124, Templers Road, MountLavenia.
*0774371533,0776027391, 0777917699, 0777448335.*

Ruba (RVG), 021 222 8330
*Jaffna Traders, 0212228998.*



## திறப்பு விழா

# HOTEL SWARKKA

இல.06, சட்டநாதர் வீதி,
முடமாவடிச் சந்தி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே.: 077 3405396

கிளை:
இல.33, சூசைப்பிள்ளையார் குளம்,
வவுனியா.
தொ.பே.: 024 2221090

யாழ்.நல்லூரில் புதிதாக ரம்மியமான தங்குமிட வசதியும், சைவ, அசைவ உணவுகளுடனும், நவீன வசதிகளுடனான விருந்தினர் விடுதி இன்று (15.07.2010) வியாழக்கிழமை காலை 7.30 – 9.30 வரையுள்ள சுபவேளையில்

பிரதம் விருந்தினராக



மாண்புமிகு
கே.என்.டக்ளஸ் தேவானந்தா நா.உ
(பாரம்பரிய மற்றும் சிறு கைத்தொழில்துறை அமைச்சர்)

சிறப்பு விருந்தினர்களாக



கௌரவ மு.சந்திரகுமார் (அசோக்) நா.உ.
(நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர்)



கௌரவ திருமதி ப.யோகேஸ்வரி
(யாழ்.மாநகர சபை முதல்வர்)

ஆகியோரால் சிறப்பாக ஆரம்பிக்கப்படவுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

நிர்வாகம்.
Hotel Swarkka.
(100649)


## அல்லைப்பிட்டியில் நிறைவு திருப்பலி

யாழ்ப்பாணம், ஜூலை15

அல்லைப்பிட்டி புனித கார்மேல் அன்னை ஆலயத் திருவிழா நிறைவுத் திருப்பலிகள் இன்று வியாழக்கிழமை பி.ப.5 மணிக்கு நடைபெற்று, நற்கருணை வழிபாடும் திருப்பலியும் இடம்பெறும்.

நாளை வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்குத் திருவிழாத் திருப்பலியும் அன்னையின் திருச்சொரூப பவனியும் இடம்பெறும். (ஒ)

## தேசிய சேமிப்பு வங்கியின் சாவகச்சேரி கிளையில் ஏ.ரி.எம் சேவை

யாழ்ப்பாணம், ஜூலை15

தேசிய சேமிப்பு வங்கியின் சாவகச்சேரி கிளையில் தன்னியக்கப் பணப் பரிமாற்ற சேவை (ஏ.ரி.எம்) அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வங்கி வாடிக்கையாளர் சி. வரதராஜன் தன்னிக்கப் பணப் பரிமாற்ற சேவை இயந்திரத்தை சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைத்ததாக கிளை முகாமையாளர் சி.தனீஸ்வரன் தெரிவித்தார். (ஒ-207)

## பூநகரி, செட்டியகுறிச்சி வீட்டுத்திட்டப் பணிகள்

பூநகரி, ஜூலை15

மீள்குடியமர்த்தப்பட்ட பூநகரி பிரதேச செயலகத்திற்குட்பட்ட செட்டியக்குறிச்சி (கே/62) கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஐக்கிய நாடுகளின் திட்ட அமுலாக்கல் ஸ்தாபனம் தற்காலிக வீட்டுத் திட்டப் பணிகளை ஆரம்பித்துள்ளது.

இங்கு 170 வீடுகள் நிர்மாணிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ஒ-420)

## மரண அறிவித்தல்கள்

### சரவணமுத்து நடேசபாத இருதயன்

(இளைப்பாறிய களஞ்சியப் பொறுப்பாளர், சங்கானை ப.நோ.கூ.சங்கம்)



சுழிபுரம் கிழக்கு, சரவணமுத்து உடையார் வளவைப் பிறப்பிடமாகவும், சுன்னாகம் முத்துக் கிருஷ்ணர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து நடேசபாத இருதயன் (இளைப்பாறிய களஞ்சியப் பொறுப்பாளர், ப.நோ.கூ.சங்கம் - சங்கானை) 13.07.2010 செவ்வாய்க்கிழமை அகால மரணமானார்.

அன்னார் சுழிபுரத்தைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சரவணமுத்து-சிவரத்தினம் தம்பதியரின் ஏக புதல்வனும் ஞானேஸ்வரி, வைகுந்தபாதராஜலஷ்மி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுன்னாகம் முத்துக்கிருஷ்ணர் வீதியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான வைத்தியகலாநிதி கந்தையா (யாகோப்பர்) - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், ஜெயலட்சுமியின் அன்புக் கணவரும், தபேசன் (ஓமான்), ஜிறானு (மக்கள் வங்கி - சுன்னாகம்) ஆகியோரின் அன்பு தந்தையும், அன்னலட்சுமி, கைலாயர், விசுவநாதன் (முன்னாள் காசாளர், ப.நோ.கூ.சங்கம் - சுன்னாகம்), வைத்தியநாதன், தவலட்சுமி, நாகநாதன், காலஞ்சென்ற யோகலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.07.2010) வியாழக்கிழமை மு.ப. 11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

முத்துக்கிருஷ்ணர் வீதி,
சுன்னாகம்.
தொ.பே.: 021 224 0618 (100644)

தகவல்:
குடும்பத்தினர்.

### முருகேசு சிவசுப்பிரமணியம்

(இளைப்பாறிய களஞ்சிய முகாமையாளர், சங்கானை ப.நோ.கூ.சங்கம்)



இணுவிலைப் பிறப்பிடமாகவும், கோப்பாய் வடக்கு, இலகடியை வதிவிடமாகவும் கொண்ட முருகேசு சிவசுப்பிரமணியம் நேற்று (14.07.2010) புதன்கிழமை அதிகாலை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - இராசமணி தம்பதியரின் அன்புப் புதல்வனும், தவமணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற வல்லிபுரம் மற்றும் இரத்தினம் தம்பதியரின் மருமகனும், தனுசியா (சுவிஸ்), காந்தரூபன் (பிரான்ஸ்), சுரேஸ் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் நாகேஸ்வரி, தவமலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும் கிருபாகரனின் (சுவிஸ்) அன்பு மாமனும், ஆருஷனா, மதுஷனா (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் தவராஜலிங்கம் (ப.நோ.கூ.சங்கம் - நீர்வேலி), சிவசுப்பிரமணியம் (லண்டன்), சித்திரவேலாயுத பிள்ளை (ஜேர்மனி), செல்வசற்குருநாதன் (சுவிஸ்), நாகேஸ்வரி, வசந்தாதேவி (தாதிய உத்தியோகத்தர் - கோப்பாய்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.07.2010) வியாழக்கிழமை மு.ப.10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கோப்பாய் வடக்கு,
இலகடி.

தகவல்:
தவமணி (மனைவி),
குடும்பத்தினர்.







கிளிநொச்சியில் நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ றொட்றிக்கோ மைதானத்தில் மக்களைச் சந்தித்தபோது எடுக்கபட்ட படங்கள் இவை.

நிகழ்வில் கலந்துகொண்ட மக்களையும் ஜனாதிபதி உரையாற்றுவதையும் முதல் இரு படங்களிலும், வீட்டுத் தோட்டப் பயனாளி ஒருவருக்கு ஜனாதிபதி உதவு தொகை வழங்குவதையும் மக்களுடன் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் அளவளாவுவதையும் படங்களில் காணலாம். (படங்கள் : கிளிநொச்சிச் செய்தியாளர்)

### கிளிநொச்சியில் நேற்று நடந்த கூட்டத்தில்

# அரசியல் பேதங்களை மறந்து செயற்பட அரச ஊழியருக்கு ஜனாதிபதி அழைப்பு

கிளிநொச்சி,ஜூலை 15

''அரசியல் பேதங்களை மறந்து மக்களின் கண்ணீரைத் துடைக்க நீங்கள் அனைவரும் ஒன்றுபடக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. நாம் அனைவரும் ஒன்றிணைந்து மக்களுக்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்'' என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று கிளிநொச்சியில் அறை கூவல் விடுத்தார்.

கிளிநொச்சியிலுள்ள இராணுவத் தலைமையகத்தில் நேற்று அரச உயர் அதிகாரிகள், ஊழியர்கள் மத்தியில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசும்போது கூறியவை வருமாறு:-

முப்பது வருடங்களாகப் பயங்கரவாதம் காரணமாக பல்வேறு துன்பங்களை அனுபவித்த மக்களின் வாழ்க்கையைக் கட்டியெழுப்ப நாம் அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும். அன்று பயங்கரவாதம் எமது பிள்ளைகளைக் கொன்று குவித்தது. கர்ப்பிணிகள், பால் கொடுக்கும் தாய்மாரைக் கொன்றொழித்தது. இவற்றை நாம் அறிவோம்.

இப்போது இந்த மக்களின் வாழ்க்கையைக் கட்டியெழுப்புவது எமது கடமையாகும். மக்களுக்கு அருகில் சென்று அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இனங்கண்டு அவர்களுக்குச் சேவையாற்ற நாம் தயாராகவேண்டும்.

உங்களுக்குப் பல்வேறு அரசியல் கருத்துகள் இருக்கலாம். அரசியல் கருத்துகளை மறந்து மக்களுக்கு சேவையாற்ற வேண்டியதே இன்று உங்களுக்கு முன்னாலுள்ள கடமையாகும்.

இன்று நாம் ஒரு சரித்திரத்தை உருவாக்குகின்றோம் என்பதை ஞாபகப்படுத்துகின்றேன். அரசியல் தலைவர் ஒருவர் கிளிநொச்சியில் உரையாற்றுவது இதுவே முதல் முறையாகும். வடக்கில் நல்லதொரு சூழ்நிலையை ஏற்படுத்திய பின்னர் உங்கள் முன்னால் உரையாற்றக் கிடைத்ததையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

இந்தச் சந்தர்ப்பத்தில் நான் தமிழிலும் உரையாற்ற விரும்புகின்றேன. (தமிழில் உரையாற்றுகின்றார்.)

இன்று சரித்திர முக்கியத்துவம் பெற்ற தினமாகும் என்பதை நான் உங்களுக்கு ஞாபகமூட்டுகின்றேன். கிளிநொச்சியிலிருந்து அரச தலைவர்ஒருவர் அரச அதிகாரிகளுக்கு உரையாற்றுவது இதுவே முதன் முறையாகும்.

அன்றைய காலகட்டத்தில் அதிகமான தமிழ் நண்பர்கள் அரச சேவையில் கடமையாற்றினர். அதைக் கௌரவமான சேவையென்றே மக்கள் கருதினர். அவர்களில் சிலர் முக்கிய உயர் பதவிகளை வகித்தனர். இதை யாரும் மறுக்கமுடியாது.

**உங்களிடம் வரும் மக்களிடம் அன்பு காட்டுங்கள்**

வடக்கிலுள்ள மக்களுக்கு மீண்டும் சேவையாற்றக்கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது. அப்பாவி மக்கள் உங்களிடம் வரும்போது அவர்களிடம் அன்பு காட்டுங்கள். முடிந்தவரை நல்ல தீர்வைப் பெற்றுக் கொடுங்கள். அவர்கள் திருப்தியாக மகிழ்ச்சியுடன் திரும்பிச் செல்லவேண்டும்.

மக்களுக்கு சேவை செய்வதென்பது கடவுளுக்குச் சேவை செய்வதற்கு ஒப்பானதாகும். இதை ஒருபோதும் மறந்துவிடக் கூடாது. முப்பது வருடகாலத்தில் வடக்கு மக்கள் முழுமையாகப் பெற்றுக்கொள்ள முடியாமற்போன வசதிகளை விரைவில் செய்துகொடுக்கவேண்டும். இது உங்கள் பொறுப்பாகும்.

உங்களிடம் வரும் மக்கள் பெரும் இன்னல்களைச் சந்தித்தவர்களாவர். அவர்களுக்கு சிறந்த சேவையைப் பெற்றுக் கொடுப்பது உங்கள் பொறுப்பாகும்.

அபிவிருத்திக்காக நாம் பெருமளவு நிதியை ஒதுக்கியுள்ளோம். இவற்றின் பயனை மக்களுக்குப் பெற்றுக்கொடுக்க வேண்டும்.

ஒரு தாயும் தந்தையும் தமது பிள்ளைகளைப் பாதுகாப்பது போல் நீங்கள் இந்த மக்களைப் பாதுகாக்கும் விதத்தில் சேவையாற்றவேண்டும்.

- இவ்வாறு ஜனாதிபதி தெரிவித்தார்.

(ஒ-சி)

# வன்னித் தொண்டர் ஆசிரியர் நியமனம் குறித்து நேற்றைய அமைச்சரவையில் தீர்மானம்

### கிளிநொச்சியில் அமைச்சர் டக்ளஸ்

கிளிநொச்சி,ஜூலை 15

வன்னிப் பகுதியில் நீண்டகாலமாக பணியாற்றி நியமனம் பொறாதுள்ள தொண்டர் ஆசிரியர்களின் நியமனம் தொடர் பாக கிளிநொச்சியில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டு அதற்கான தீர்வு எடுக்கப்பட்டுள்ளது என்று பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

கிளிநொச்சியில் அமைச்சரவைக் கூட்டத்தை முடித்துக்கொண்டு கிளிநொச்சி றொட்றிக்கோ விளையாட்டு மைதானத்தில் மீளக்குடியேறிய மக்களைச் சந்தித்து உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

நீண்டகாலமாக பல துன்பங்களை நீங்கள் அனுபவித்துக் கொண்டிருந்தீர்கள். அதற்கு கடந்த ஆண்டு மே 18 ஆம் திகதி ஒரு முடிவு பெறப்பட்டுவிட்டது. அதற்காக மக்கள் அதிகவிலை கொடுத்திருக்கின்றார்கள். இதற்கு முடிவுகட்டிய ஜனாதிபதி தலைமையிலான அரசு இந்த மக்களது துன்பங்களைத் தீர்க்க பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றது. குடியிருப்பு பிரச்சினை, வாழ்வாதாரப் பிரச்சினை என்பன தீர்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

வன்னிப் பகுதியில் நீண்டகாலம் சேவையாற்றி நியமனம் பெறாதுள்ள தொண்டர் ஆசிரியர்கள் நியமனம் தொடர்பான பிரச்சினை குறித்தும் அமைச்சரவைக் கூட்டத்தில் பேசப்பட்டது. அதற்கு ஒரு தீர்வும் எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து சரணடைந்தவர்களை விரைவில் புனர்வாழ்வளித்து விடுவிப்பதற்கும் ஜனாதிபதி உறுதியளித்திருக்கின்றார் - என்றார்.

(ஒ-405)

# நிபுணர் குழுவை நியமித்ததன் மூலம் ஐ.நாவின் சட்டவிதிகளை மீறிவிட்டார் பான் - கீ மூன்

### குற்றஞ்சாட்டுகிறார் ஐ.தே.கட்சி எம்.பி. சஜித்

ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ - மூன் நிபுணர்கள் குழுவை நியமித்ததன் மூலம் ஐ.நா. சபையின் சட்டவிதிகளை மீறிவிட்டார் என்று ஐ.தே.க. எம்.பி. சஜித் பிரேமதாஸ நேற்றுக் குற்றஞ்சாட்டினார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

இலங்கை அரசின் பலவீனமான இராஜதந்திரக் கொள்கையால் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் எமது நாடு கீழ்மட்டத்தில் வீழ்ந்து கிடக்கின்றது.

அரசு இன்னும் யுத்த மனப்பான்மையுடன்தான் செயற்படுகின்றது. படையினர் சிறந்த வெற்றியை இந்த நாட்டுக்குப் பெற்றுக்கொடுத்தனர். யுத்த வெற்றிக்காகப் பயன்படுத்திய அந்தத் தந்திரோபாயத்தை நாட்டின் அபிவிருத்திக்காகவும் மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவும் பயன்படுத்தவேண்டும். மக்கள் அனைத்துத் தேர்தல்களிலும் இந்த அரசுக்கு வாக்களித்து அமோக வெற்றியைப் பெற்றுக் கொடுத்தனர். அம்மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவும், நாட்டின் அபிவிருத்தியைத் துரிதப்படுத்துவதற்காகவுமே அவர்கள் அந்த ஆணையை அரசுக்கு வழங்கினர்.

ஆனால், மக்கள் வழங்கிய ஆணைக்கு ஏற்ப அரசு செயற்படத் தவறிவிட்டது. இதன் காரணத்தாலேயே சர்வதேச நாடுகள் எமது நாட்டின் உள்விவகாரங்களில் தலையிடுகின்றன.

இலங்கை விவகாரம் தொடர்பாகத் தனக்கு ஆலோசனை வழங்குவதற்காக ஐ.நா. செயலாளர் நாயகம் நிபுணர்கள் குழு ஒன்றை அமைத்துள்ளார். இதை எம்மால் ஏற்க முடியாது.

இந்த நிபுணர்கள் குழுவை அமைத்ததன் மூலம் பான் கீ - மூன் ஐ.நா. சபையின் யாப்பை மீறிவிட்டார். எக்காரணம் கொண்டும் எந்த ஒரு நாட்டின் உள்விவகாரத்திலும் ஐ.நா.தலையிட முடியாது என்று ஐ.நாவின் யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த நிலையில் இந்தக் குழுவை அமைத்திருப்பதன் மூலம் பான் கீ - மூன் ஐ.நா. சபையின் யாப்பை மீறிவிட்டார்.

இருப்பினும், இந்த நிலைமை ஏற்படுவதற்கு இலங்கை அரசின் செயற்பாடே காரணம். இலங்கையின் பிழையான ஆட்சிமுறைமையைப் பயன்படுத்தி சர்வதேச நாடுகள் தங்கள் தனிப்பட்ட தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்காக இலங்கைவிவகாரங்களில்தலையிடுகின்றன.

ஆகவே, இவ்வாறன தலையீடுகளை அறவே இல்லாது செய்வதற்கான நடவடிக்கையில் அரசு உடன் இறங்கவேண்டும். மனித உரிமைகளைப் பாதுகாக்க காத்திரமான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். - என்றார்.

(ஒ-சி)

# திருமலைத் துறைமுகத்தில் அமெ. கடற்படைக் கப்பல்!

கொழும்பு, ஜூலை 15

ஐக்கிய அமெரிக்காவின் கடற்படைக் கப்பலான 'யூ.எஸ்.எஸ். பேர்ள் ஹார்பர்' நேற்றுமுன்தினம் திருகோணமலைத் துறைமுகத்திற்கு வந்துள்ளது.

நல்லெண்ண விஜயத்தை மேற்கொண்டே இந்த அமெரிக்கக் கப்பல் திருகோணமலைக்கு வந்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

186 மீற்றர் நீளத்தைக் கொண்ட இந்தக் கப்பல் 11 ஆயிரத்து 251 தொன் நிறையை காவிச் செல்லக்கூடியது.

இந்தக் கப்பலில் 24 அதிகாரிகள் உட்பட 328 கடற்படையினர் வருகை தந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இந்தக் கப்பலில் வருகை தந்துள்ள அமெரிக்க கடற்படையினர் இலங்கைக் கடற்படையினருடன் இணைந்து பல்வேறு செயற்றிட்டங்களை முன்னெடுக்கவுள்ளனர்.

இதன் ஒரு கட்டமாக திருகோணமலை கடற்படைத்தள வீதியில் உள்ள மெதடிஸ்த சிறுவர் இல்லத்திற்கு நேற்று விஜயம் செய்த அவர்கள் அங்கு துப்புரவு பணியில் ஈடுபட்டுள்ளனர் எனக் கூறப்படுகிறது.

# நீல் புஹுனேயின் பதவிக்காலம் முடிவு ஐ.நா. சபைப் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 15

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி நீல் புஹுனேயின் பதவிக்காலம் முடிவடைந்துள்ளது எனவும் அதன் காரணமாகவே அவர் நியூயோர்க்குக்கு திருப்பி அழைக்கப்பட்டுள்ளார் எனவும் ஐக்கிய நாடுகள் சபை தகவல் வெளியிட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் நாளாந்த செய்தியாளர் சந்திப்பில் அதன் பேச்சாளர் பர்ஹான் ஹக் கலந்து கொண்டு உரையாற்றியபோது, நீல் புஹுனேயின் பதவிக்காலம் நிறைவடைந்துள்ள நிலையிலேயே அவர் நியூயோர்க்குக்கு திருப்பி அழைக்கப்பட்டார் எனத் தெரிவித்தார்.

இந்தநிலையில் குறித்த பதவிக்கு நியமிக்கப்படவுள்ள புதியவர் தொடர்பாக இந்தச் செய்தியாளர் சந்திப்பின்போது கேள்வி எழுப்பட்டது.

அதற்குப் பதிலளித்த பேச்சாளர், அது தொடர்பாக எந்தவித தீர்மானமும் மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் பான் கீ - மூனினால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழு, இந்த மாதம் மூன்றாம் வாரமளவில் தமது நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் என அந்தக் குழுவின் தலைவர் மர்சூகி தருஸ்மன் முன்னர் தெரிவித்திருந்தார்.

இதுதொடர்பாக இந்தச் செய்தியாளர் சந்திப்பின்போது எழுப்பட்டுள்ள கேள்விக்கு பதிலளித்த பர்ஹான் ஹக், இந்தக் குழு இந்த மாத இறுதிக்குள் நியூயோர்க் நகரில் ஒன்று கூடவுள்ளது. எனினும் அதற்கான உரிய திகதியைக் கூற முடியாது என்று தெரிவித்தார்.

## ஊர்காவற்றுறை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யுமாறு நேற்று முன்தினம் உத்தரவு பிறப்பித்திருந்தார்.

எனினும் வைத்திய அதிகாரி தமது சட்டத்தரணி மூலம் நேற்று நீதிமன்றில் சரணடைந்தார். அவரை இரு வாரங்களுக்கு விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இதேவேளை, சட்ட வைத்திய அதிகாரி நேற்று பிரேத பரிசோதனை அறிக்கையை நீதிமன்றில் சமர்ப்பித்தார். மரணமானவரின் சகோதரி ஒருவரும் ஆஸ்பத்திரி ஊழியர்களும் நேற்று வாக்குமூலம் அளித்தனர். (ஓ-1)

## தமிழ்மக்களுக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்றைய நிலையில் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வே முக்கிய தேவையாகும். உத்தேச அரசமைப்புத் திருத்தங்களில் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு பெற்றுக் கொடுக்கும் ஷரத்துகளும் உள்ளடக்கப்படவேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும்.

- இவ்வாறு அவர் தெரிவித்தார். (சி)

## ஐ.தே.கட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாக்குறுதியை அளித்தார் என்று அக்கட்சி மேலும் தெரிவித்தது.

''ஏற்கனவே நாம் உங்களுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்தோம். அந்த ஒப்பந்தம் செய்யப்பட்டு மறுகணமே நீங்கள் எமது எம்.பிக்கள் 17பேரை அரசில் இணைத்துக்கொண்டீர்கள். மக்களின் நலன் சார்ந்த அரசின் திட்டங்களுக்கு நாம் ஆதரவு வழங்கத் தயார். ஆனால், இந்தச் சந்தர்ப்பத்தில் எமது கட்சியின் எம்.பிக்கள் எவரையும் நீங்கள் அரசில் இணைத்துக்கொள்ளக் கூடாது'' - என்று காமினி ஜயவிக்கிரம பெரேரா அச்சந்திப்பின்போது கூறினார்.

நான் ஒருபோதும் ஐ.தே.கவின் எந்தவொரு எம்.பியையும் அரசில் இணைத்துக் கொள்ளமாட்டேன் என்று ஜனாதிபதி அப்போது வாக்குறுதியளித்தார்.

## இலங்கைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைக் கடற்படையை கண்டித்தும், ஐ.நா. செயலரால் நியமிக்கப்பட்ட ஆலோசனைக் குழுவுக்கு அனுமதி மறுக்கும் இலங்கை அரசுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கம் சார்பில் சென்னையில் நேற்று மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் தா.பாண்டியன், தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன், பெரியார் திராவிட கழகத் தலைவர் விடுதலை ராஜேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

கூட்டத்தில் பேசிய வைகோ -

போர்க் குற்றங்களை நிகழ்த்தியது எனக் கூறப்படும் இலங்கை அரசுக்கு ஆயுதங்களை வழங்கி உதவிய இந்திய அரசும் ஒரு போர் குற்றவாளியே என்று தெரிவித்தார்.

மேலும் டக்ளஸ் தேவானந்தா போன்ற கொலை வழக்குச் சந்தேக நபர்களை இந்தியாவுக்குள் அனுமதித்து ராஜ மரியாதை செய்யும் அரசு, பார்வதி அம்மாளை அனுமதிக்க மறுத்தது கண்டிக்கத்தக்கது என்றும் அவர் கூறினார்.

இதேபோன்று கூட்டத்தில் பேசிய தா. பாண்டியன், பழ.நெடுமாறன் ஆகியோர் தமிழினப் படுகொலையை நிகழ்த்தியது எனக் கூறப்படும் இலங்கை அரசுக்கும், அதற்குத் துணைபோன இந்திய அரசுக்கும் கடும் கண்டனம் தெரிவித்தனர்.

இதனிடையே கூட்டத்தில் கலந்து கொண்ட தொண்டர்கள் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி ஆகியோரின் உருவப் பொம்மையை எரித்தனர். அப்போது பொலிஸார் அவர்களைத் தடுக்க முயன்றதால் தள்ளு முள்ளு ஏற்பட்டது. மேலும் இலங்கைத் துணைத் தூதரகத்தை முற்றுகையிட முயன்ற வைகோ உள்ளிட்ட தலைவர்களையும் பொலிஸார் கைதுசெய்தனர்.

## எல்லா மக்களும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி தமது தமிழ் உரையில் தெரிவித்ததாவது;

உங்கள் பகுதியில் உங்களைச் சந்திக்கக் கிடைத்தமையையிட்டு நான் சந்தோசப்படுகின்றேன். இன்று காலை அமைச்சரவைக் கூட்டத்தை இங்கு நடத்தி பின்னர் உங்களது பிரதேசத்தின் அபிவிருத்தி தொடர்பாக, அப்பணிகளில் ஈடுபடும் அரச பணியாளர்களுடன் கலந்துரையாடினோம். இவ்வாறான சந்தர்ப்பம் உங்கள் பிரதேசத்தில் முதன்முதலாக இன்றுதான் இடம்பெறுகின்றது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற கஷ்டப்பட்ட பிரதேசங்கள் இருப்பதாக பலர் எண்ணினார்கள். இனிமேல் அவ்வாறு இருக்க முடியாது. எல்லாம் ஒன்றுதான். எல்லா மக்களும் ஒன்றுதான். அதுதான் சமத்துவம், அதுதான் சமஉரிமை.

இந்த நாட்டில் எல்லோரும் சம உரிமையோடும் சுய கௌரவத்துடனும் வாழ வேண்டும். நான் அதனைச் செய்வேன். பிரிவினைவாதம், பயங்கரவாதம் இனி மேல் வேண்டாம். இந்த நாட்டில் சிறுபான்மை என்று ஓர் இனம் இல்லை. எமது நாட்டின் மீது அன்புகாட்டும் எல்லோரும் ஒரு தாய் மக்களே.

என்றும், எப்போதும் ஜனநாயகம் பாதுகாப்பாக இருக்க வேண்டும். ஜனநாயக ரீதியில் செயற்பட எப்போதும் உங்களுக்கு சந்தர்ப்பம் உள்ளது. அரசியல்வாதிகள் மக்களைத் தவறான வழியில் செல்லச் சொல்லாமல் இருக்கவேண்டும். மொழி ரீதியான, மதரீதியான, மாகாண ரீதியான வேறுபாடுகள் இனிமேல் இருக்க முடியாது. சமாதானம், சகோதரத்துவம், சுபீட்சம் இதுதான் எமது பிரதான நோக்கம்.

### நாம் எல்லோரும் ஒன்றுபட வேண்டும்

நாம் எல்லோரும் ஒன்றுபடுவோம். இந்த நாட்டை எதிர்காலச் சந்ததிக்காகக் கட்டியெழுப்புவோம். நீங்கள் பயம், சந்தேகம் இல்லாமல் நிம்மதியாக வாழ முடியும். நீங்கள் பயம் எதுவும் இல்லாமல் எங்கும் போகலாம். விவசாயம் செய்யலாம். கடலுக்குப் போகலாம். பாடசாலைக்குப் போகலாம்.

வடக்கின் வசந்தம் மூலமாக உங்களது தேவைகள் எல்லாம் சிறப்பாகவும், வேகமாகவும் பூர்த்தி செய்யப்படுகின்றன. உங்களது வாழ்க்கைத்தரம் நிச்சயமாக மேம்படும். இடம்பெயர்ந்த மக்கள் என்று இனிமேல் யாருமே இல்லை. கல்வி, விவசாயம், மீன்பிடி, சுகாதாரம், பாதைகள், தண்ணீர்வசதி, மின்சார வசதி, போக்குவரத்து வசதி என்பன நாளுக்குநாள் மேம்பட்டு வருகின்றன.

### இரணைமடுவிலிருந்து...

இரணைமடு வழியாக நாம் வட பகுதிக்கு நீர் வசதியை வழங்கவுள்ளோம். உங்கள் எல்லோருக்கும் ஒளிமயமான எதிர்காலம் நிச்சயம் உண்டு. உங்கள் பிள்ளைகள் நன்றாகப் படிக்க வேண்டும். கல்விதான் அவர்களுக்கு அவசியம். எதிர்காலத்தில் உங்கள் பிள்ளைகளே இந்த நாட்டில் முக்கிய பதவிகளை வகிக்க வேண்டும். சர்வதேச ரீதியில் அவர்கள் பெயர் பெற வேண்டும்.

எதிர்கால நன்மைக்காக நாம் எல்லோரும் ஒன்றுபட வேண்டும். ''ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு'' ஏ-9 பாதையால் எப்போதும் போகலாம், வரலாம் மும்முரமாக திருத்த வேலைகள் இடம்பெற்று வருகின்றன.

### யாழ்தேவி ரயில் இவ்வழியால் யாழ்ப்பாணம் செல்வதை விரைவில் காணலாம்

மீண்டும் ''யாழ்தேவி'' யாழ்ப்பாணம் செல்வதை வெகுவிரைவில் நீங்கள் காணலாம். அந்த நல்லநாள் நீண்டதூரத்தில் இல்லை. வடக்கின் வசந்தம் உங்களின் வசந்தம். இந்த நாட்டின் வசந்தம். இவ்வளவு நாளும் நீங்கள் பட்ட கஷ்டம் இனிமேல் வேண்டாம். உங்களுக்கு வளமான எதிர்காலம் வேண்டும். ஒளிமயமான நாட்டை ஒரே கொடியின் கீழ் உருவாக்குவோம் - என்றார் ஜனாதிபதி.

(அ-405)

## எந்தவொரு நாட்டிலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இறைமைகளுடனும் வாழக்கூடிய சூழ்லையை அவர்களுக்கு நாம் ஏற்படுத்த வேண்டும்.

### நான் பார்ப்பதற்காக அதிகாரிகள் வீடுகளுக்கு ஓடு போட்டார்களோ தெரியாது!

நான் இங்கு வந்து பார்த்தபோது வீதியின் அருகே பல வீடுகளில் கூரைகள் இருக்கவில்லை சற்றுத் துரத்தில் உள்ள வீடுகளில் கூரைகள் தெரிந்தன.இவற்றை நான் பார்க்கவேண்டும் என்பதற்காக இங்கு பணியாற்றியவர்கள் வேண்டுமென்றே அவ்வாறு செய்தார்களோ எனக்குத் தெரியவில்லை. இப்பொழுது முதலாவது இரண்டாவது தொகுதி கூரைத்தகடுகள் எமக்கு வந்திருக்கின்றன.செப்ரெம்பர் மாதத்தில் அடுத்த தொகுதி கூரைத்தகடுகள் வரவுள்ளன. அப்போது நாம் எல்லா வீடுகளின் கூரைகளையும் முழுமையாக சீர்ப்படுத்த முடியும். இந்த ஏ-9பாதையை சிதைத்தவர்கள் யார்? அதேபோன்று கிளிநொச்சி வைத்தியசாலையை சிதைத்தவர்கள் யார்? புகையிரதப் பாதையை இல்லாமல் செய்தவர்கள் யார்?இவற்றை நாமோ எமது இராணுவமோ செய்யவில்லை ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து கடனைப் பெற்று கிளிநொச்சி வைத்தியசாலையை கட்டினோம். அது சிதைக்கப்பட்டு விட்டது பின்னர் மீண்டும் உலக வங்கியிடமிருந்து கடனைப் பெற்று இப்போது புனரமைத்து வருகின்றோம்.

புகையிரதப் பாதையை மீண்டும் போடுவதற்காக இந்தியா, சீனா போன்ற நாடுகளிலிருந்து கடன் பெறுகின்றோம். வீதிகளைப் புனரமைப்பதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி என்பவற்றிடமிருந்து நாங்கள் கடன்பெறுகின்றோம்.

### இந்தப் பகுதிகளுக்கு கூடுதல் நிதி ஒதுக்குகின்றோம்

நாங்கள் அம்பாந்தோட்டைப் பகுதியிலும் தென்னிலங்கையின் ஏனைய மாவட்டங்களிலும் மக்கள் கூடுதலாக இருந்தாலும் கூட அதைவிடக் குறைவான அளவு மக்கள் வாழ்கின்ற இந்தப் பகுதிகளுக்கு கூடுதலான நிதியினைஒதுக்கி வடக்கின் வசந்தம் மூலமாக இந்தப்பகுதிகளை அபிவிருத்தி செய்து வருகின்றோம்.

இவ்வாறான கடனைத் திருப்பிச் செலுத்துவது யார்? இந்த நாட்டின் அனைத்து மக்களுமே இதனை மீளச் செலுத்த வேண்டும்.

உலகின் எந்தவோரு நாட்டிலும் ஒரு வருட காலத்தினுள் இவ்வாறு மீளக் குடியேற்றமோ, அபிவிருத்தி வேலைகளோ மேற்கொள்ளப்படவில்லை. இங்கு நாம் செய்திருக்கின்றோம். நீங்கள் எங்களுடைய மக்கள், எங்களுடைய சகோதரர்கள் என்பதற்காகச் செய்திருக்கின்றோம் - என்றார் ஜனாதிபதி. (அ-405)

**வேலையாள்கள் தேவை**

சைக்கிள் உதிரிப்பாக விற்பனை அனுபவம் உள்ளவர்கள் தேவை. A/L படித்தவர்கள், சைக்கிள் உதிரிப்பாகங்களில் அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு: ஈஸ்வரன் ரேடர்ஸ், 115, 69, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2813, 021 222 4317

உயர்வினை தரக்கூடியது BIT மட்டுமே University of Colombo

விரிவுரைகள் MCS இல் Special off ~~75,000~~/=, Just Rs.25,000/=

(100% off : BCS(UK), Sun Java,Computer Engineering(USA), English, ICDL)

MCS Supported By UNDP/JRRP புலமைப் பரிசிலுக்கும் மேலதிக விபரங்களுக்கும் , 324, Palaly Road,Campus Junction,Jaffna. Call 772395895

**Mr. Concrete**

For all your concrete needs!

SLSI - தரத்திற்கு அமைய நவீன இயந்திரங்கள் கொண்டு தயாரிக்கப்பட்டவை.


Sales Office: 124, 3ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் www.MrConcrete.lk

Factory: கொடிகாமம் வீதி, புலோலி. Tel: 0217 222 333

உங்கள் சகல கொங்கிறீட் தேவைகளுக்கும்

- Concrete Blocks
- Concrete Hollow Blocks
- Columns
- Lintels
- Paving Stones

இலவச விநியோகம்



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15.07.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.